

கலைக்கதிர்

காந்தியடிகள்
நூற்றாண்டுச் சிறப்பு மலர்

அக்டோபர் - '68

DPF பம்புகள்

உணவு உற்பத்தியில் முன்னணியில் நிற்பவை



பால்பேரிங்குகள் பொருத்தப்பட்ட
'DPF' பம்புகள் 2" முதல் 8 வரை
எல்லா சைஸ்களிலும் கிடைக்கும்.

தண்டாயுதபாணி பவுண்டரி பிரைவேட் லிட்.,
பாப்பநாயக்கன்பாளையம்,
கோயமுத்தூர்-18.

போன்: 22419 — தபால் பெட்டி: 1327 — தந்தி: "மோட்டார் பம்பு"

ஸ்ரீ குமரன் மில்ஸ்

லிமிடெட்

பீளமேடு போஸ்ட் ■ கோயமுத்தூர்-4

■

இயங்கும் கதிர்கள் : 26,580

■

நாங்கள் தயாரிப்பவை :

- ○ 40s (Nf. 33.9) இந்தியன்
- ○ 44s (Nf. 37.2) ,,
- ○ 50s (Nf. 42.4) ,,
- ○ 60s (Nf. 50.8) ,,
- ○ 80s (Nf. 67.8) அந்நியப் பஞ்சு

ஷெ நூல்கள் [illegible] கிடைக்கும்.

[illegible] ■

Managing Agents:

Messis PSG VENKATASWAMY NAIDU & CO.

The Pioneer Textiles

RANGASWAMI NAGAR

VEDAPATTI

WORKS:

VEDAPATTI

Phone: 26155

OFFICE:

PEELAMEDU

Grams: "FARMTEX" Coimbatore

Phone: 24144

Spindles: 12,312

Manufacturers of:

Nf. 60 & Nf. 80 Cotton Yarn

A Leading House in the Line in South India

நன்றி

1968, அக்டோபர் திங்கள் 2-ஆம், நாளன்று காந்தியடிகள் இந் நிலவுலகில் தோன்றி நூறுவது ஆண்டு தொடங்குகிறது. அவர் இம் மண்ணுலகில் பருவுடலோடு 79 ஆண்டுகள் வாழ்ந்தார். அவர் வாழ்ந்த காலத்தில் அருட் புரட்சி செய்து நம் நாட்டு மக்களை விழிப்புறச் செய்தார். அவர் அறத்தின் அடிப்படையில் ஆற்றிய அருட் புரட்சியைக் கண்டு உலகமே வியந்தது. அவர் அறிவுறுத்தியதோடு அல்லாமல் அவரே தம் வாழ்நாளில் வாழ்ந்து காட்டிய அருள் நெறியே இவ்வுலகத்தை என்றும் ஒன்றுபடுத்தி உய்விக்க வல்லது.

இவ் அண்ணலாரின் பிறப்பு நூற்றாண்டு நினைவாகக் 'கலைக்கதிர்' அக்டோபர், 1968 இதழினைக் காந்தியடிகள் நூற்றாண்டுச் சிறப்பு மலராக மிக்க மகிழ்வோடு வெளியிடுகிறோம். இம் மலருக்குக் காந்தியத்தில் ஆழ்ந்த பற்றுக்கொண்ட பல அறிஞர்கள் எம் வேண்டுகோளுக்கு இசைந்து கட்டுரைகள் வழங்கி உள்ளார்கள். காந்தியடிகளின் அகிம்சை நெறி, ஆதாரக் கல்வி, அவர் கருத்தில் கொண்ட சமுதாயம், அவர்தம் பொருளாதார முறை, அவர் தமிழர்களோடு கொண்ட தொடர்பு, அவர் வாழ்க்கையில் நிகழ்ந்த சுவைமிக்க சில நிகழ்ச்சிகள், அவர்தம் அருள் மொழிகள் இன்னோரன்ன பற்றிய கட்டுரைகள் இவ் விதழை அணிசெய்கின்றன.

இவ் அறிஞர்கள் அனைவருக்கும் எம் உளங்கனிந்த நன்றி உரியதாகும்.

காந்தியடிகள் வாழ்க்கையில் நிகழ்ந்த பல நிகழ்ச்சிகளை விளக்கும் ஒளிப் படங்கள் சிலவற்றை மதுரை காந்தி நினைவுப் பொருட்காட்சி நிலையத்தார் (Madurai Gandhi Memorial Museum, Unit of Gandhi Memorial Museums Board, New Delhi) அன்புகூர்ந்து உதவினார்கள். அவர்களுக்கும் எம் அன்புகனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இம் மலருக்குத் தம் உளம்கனிந்த வாழ்த்தினை நம் மாநில முதலமைச்சர் மாண்புமிகு திரு. அண்ணாதுரை அவர்கள் அருளோடு வழங்கியுள்ளார்கள். அவருக்கும் எம் நன்றி உரியதாகும். தற்போது அமெரிக்காவில் சிகிச்சைபெற்றுவரும் அப்பெருந்தகையார் விரைவில் முழு நலமெய்தி நலமுடன் நம் நாடு திரும்ப வேண்டும் எனத் திருவருளை வழுத்துகிறோம்.

வளர்க காந்தியடிகளின் அருள் நெறி!

ஆசிரியர்.



சி. என். அண்ணாதுரை
முதலமைச்சர்

கோட்
சென்

30-6-1968

காந்தி அடிகள் நூற்றாண்டு விழாவை ஒட்டி 'கலைக்கதிர்' அக்டோபர் இதழ் சிறப்பு மலராக வெளியிட இருப்பது அறிந்து மிக்க மகிழ்ச்சி.

தங்கள் முயற்சி வெற்றி பெறவும், சிறப்பு மலர் நல்ல முறையில் அமையவும் என் நல் வாழ்த்துக்கள்.

அண்ணாதுரை

ஆசிரியர்,
'கலைக்கதிர்',
கோயம்புத்தூர்-18



அண்ணல் காந்தியடிகள்

காந்தியடிகளின் பெருநெறி

நம் நாடு அடிமை இருளில் மூழ்கி இருந்த காலத்தில் காந்தியடிகள் நம் நாட்டில் தோன்றினார். நம் நாட்டை ஆட்சி செய்த ஆங்கிலேயர்கள் நம் நாட்டின் வளத்தையெல்லாம் சுரண்டித் தங்கள் நாட்டு வளர்ச்சிக்குப் பயன்படுத்தினார்கள். நம் நாடெங்கும் வறுமையும் பிணியும் நிறைந்திருந்தன. நம் சமுதாயத்தில் சாதிவேற்றுமை வேரூன்றி உயர்வு தாழ்வு மனப்பான்மை குடிகொண்டிருந்தது. பெண்கள் கல்வியறிவு பெறுவது இழுக்கு என்று கருதப்பட்டது. சுருங்கக் கூறின் நம் இந்திய சமுதாயமே பெரிதும் சீர்குலைந்திருந்தது.

1869-ஆம் ஆண்டு தோன்றிய காந்தியடிகள் தம் இருபத்திரண்டாம் வயதில் ஆங்கில நாட்டின் தலைநகரில் கல்வி பயின்று இந்தியாவிற்குத் திரும்பினார்; வழக்கறிஞராகத் தொழில் புரிந்தார்; அத் தொழிலிலும் அறத்தையும் நேர்மையையும் மேற்கொண்டு ஒழுகினார். 1893-ஆம் ஆண்டில் அவர் தென்னாப்பிரிக்காவுக்குத் தம் தொழிலை ஒட்டிச் செல்ல நேர்ந்தது. அங்கே நிறவெறி தலைவிரித்தாடுவதைக் கண்டார். இந்தியர்கள் வெள்ளை நிறத்தவரால் 'கூலிகள்' என்று அழைக்கப் பெற்று விலங்கினங்களைப் போல நடத்தப் பெற்றனர். அதைக் கண்டு காந்தியடிகளின் உள்ளம் பெரிதும் பதைத்தது. வெள்ளை நிறத்தவரின் ஆணவத்தை எதிர்த்து அறவழியில் நின்று போரிட்டார்.

திரு ஜி. ஆர். தாமோதரன்

இதுவே சத்தியாக்கிரகப் போர் எனப்பட்டது. அவரது எதிரியான தளபதி சுமட்சு என்பவர் முடிவில் அவருக்கு இணங்க வேண்டியதாயிற்று.

''தங்களுடன் யான் வேறு என்ன செய்ய இயலும்? தங்கள் மீது எவ்வாறு கை வைக்கமுடியும்? தங்களது எதிரியையும் துன்புறுத்த மறுக்கின்றீர்கள். தாங்களே வலிந்து துன்பத்தை ஏற்றுப் பெருந்தன்மை பிறழாத நெறியைத் தாங்களே ஏற்படுத்திக் கொண்டு அதனின்றும் விலகாது வெற்றிகாண விரும்புகின்றீர்கள். அது எங்களை வலிமை இழக்கச் செய்து விட்டது.''

இவ்வாறு சுமட்சு அவருடைய சத்தியாக்கிரகப் போராட்டத்திற்கு இணங்கிக் கூறினர். இதனின்றும் காந்தியடிகளின் சத்தியாக்கிரகத்தின் வலிமையை உணரலாம்.

தம் சத்தியாக்கிரக நெறியில் தென்னப்பிரிக்காவில் பெருவெற்றிகண்ட காந்தியடிகள் இந்திய நாட்டிற்குத் திரும்பினர். சத்தியாக்கிரக அறவழியையே இங்குப் பயன்படுத்தி இந்திய நாட்டின் விடுதலை பெறமுயன்றார். இம் முயற்சியில் அவர் பட்ட இன்னல்களும் இடையூறுகளும் கணக்கில் அடங்கா. 1919-ஆம் ஆண்டில் ஒத்துழையாமை இயக்கத்தையும் 1930-ஆம் ஆண்டில் உப்புச் சத்தியாக்கிரகத்தையும் 1942-ஆம் ஆண்டில் ''வெள்ளையனே வெளியேறு'' (*"Quit India" movement*) இயக்கத்தையும் அகிம்சை நெறியிலே நிகழ்த்தி, முடிவில் நம் நாட்டின் அரசியல் அடிமைத்தளையை உடைத்தெறிந்தார்.

இப்பெரியாரின் வாழ்க்கை வரலாற்றை ஆராயும்போது அவர் கண்ட வெற்றிகள் அனைத்திற்கும் அடிப்படைக் காரணமாய் அமைந்தவை உண்மை நெறியும், அகிம்சை நெறியுமே ஆகும் என்பது நன்கு புலனாகும்.

அகிம்சை நம் நாட்டுக்குப் புதிதன்று. அது புதிதாகக் காந்தியடிகளால் வழங்கப்பட்டதன்று. ஆயிரம், இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பு தோன்றிய நம் தமிழ் இலக்கியங்களிலே அகிம்சை நெறி சிறப்பாகப் போற்றி உரைக்கப்பட்டுள்ளது. ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பு தோன்றிய திருக்குறளில், ''இன்னா செய்யாமை' என்ற தலைப்பில் அகிம்சை நெறியின் பெருமையினை வள்ளுவர் சிறப்பித்துப் பாடியுள்ளார்.

கலைக்கதிர்

ஏசு பெருமானும் அகிம்சை நெறியை அறிவுறுத்திஉள்ளார். சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவக சிந்தாமணி முதலிய அரும்பெரும் காப்பியங்களில் அகிம்சை நெறியே மக்களை உய்விக்கும் பெருநெறியாகக் கூறப்பட்டுள்ளது. ஆனால் அந்நெறி தனிப்பட்டவரின் வாழ்க்கைக்குரிய சீரிய நெறியாகவே அந்நூல்களில் விளக்கப்பட்டுள்ளது.

காந்தியடிகள் அறிவுறுத்திய அகிம்சை நெறியின் தனிச் சிறப்பாவது, அரசியலிலும், அப்பெரு நெறியை மேற்கொண்டு ஒழுகவேண்டும் என்பதுவேயாம். தென்னாப்பிரிக்காவில் சத்தியாக்கிரகநெறி நின்று தளபதி சுமட்சு என்பவரை எதிர்த்துக் காந்தியடிகள் வெற்றிகண்டார். நம் நாட்டில் கதிரவனே மறையாத பேரரசு என்று புகழ்படைத்த ஆங்கிலேயர் ஆட்சியை எதிர்த்து,, நாட்டின் விடுதலை பெற்று உலகம் கண்டிராத ஒரு புதிய வரலாற்றினைத் தோற்றுவித்தார்.

நம் நாடு அரசியல் விடுதலை பெற்று இருபது ஆண்டுகள் ஆகியும் நம் மக்களனைவரும் போதிய உணவும், உடையும், உறையுளும் பெற்றுத் 'துன்பமின்றி வாழ்கின்றனர்கள் என்று கூறுவதற்கில்லை. நம் நாடு விடுதலை எய்தியதும் காந்தியடிகள் நம் நாட்டின் சமுதாய விடுதலைக்கும், பொருளாதார விடுதலைக்கும் பாடுபட முயன்றார். வறுமை, பிணி ஆகியவற்றினின்று நம் நாட்டை அறவே விடுவிக்க வேண்டுமென உறுதி பூண்டார். ஆனால் அந்தோ, நாம் செய்த தீவினைப்பயனால் அவர் கொலையுண்டார். நம் நாட்டு மக்கள் அனைவரும், சமுதாயத் துறையிலும், பொருளாதாரத் துறையிலும் உயர்வு தாழ்வின்றி, 'எல்லோரும் ஓர் நிறை'' என்ற நிலை எய்த வேண்டுமென்று கனவு கண்டார்.

ஆனால் நம் நாட்டில் நிலவும் தற்போதைய நிலையை நோக்கும்போது, நம் தேசியத் தந்தை கண்ட கனவு நிறைவேறுமா என்ற ஐயம் ஏற்படுகிறது. நம்நாட்டில் தற்போது அரசியல் கட்சிகள் பல்கிவிட்டன. மக்களுக்குள் பிளவுகள் மிகுந்து கொண்டே போகின்றன. விடுதலைப் போராட்டக் காலத்தில் நம் மக்களுக்கு இருந்த ஆழமான நாட்டுப்பற்று இப்பொழுது இருப்பதாகத் தோன்றவில்லை. தன்னலமே இன்னும் தலைவிரித்தாடுகிறது. எங்கும் உரிமைக் குரல்களே எழுகின்றன. கடமையுணர்வு உள்ளதா என்பது ஐயப்பாடாக இருக்கின்றது. அவரவர்கள் தம் கடமையைத் தவறாமல் ஆற்றவேண்டும்

என்பது காந்தியடிகளின் அறிவுரை. ஒருவன் உண்மையாகத் தன் கடமைகளை ஆற்றினால், உரிமைகள் தாமே வந்து அவனைச் சரணடையும் என்று காந்தியடிகள் நம்பினார். உண்மையும் இதுவே. ஆனால் தற்போது மக்கள் கடமையைப் பொருட்படுத்தாது உரிமைகள் வேண்டுமென்று எங்கும் போராட்டத்தைத் தொடங்குகின்றனர். இந்நிலை நீடிக்குமானால் நம் நாட்டின் அரசியல் விடுதலைக்கே குந்தகம் ஏற்படலாம். காந்தியடிகள் தம் வாழ்நாளெல்லாம் போராடி நமக்கு ஈந்த இந் நாட்டின் விடுதலையை நம் உயிரேபோல் போற்றிக் காக்க வேண்டியது நம்முடைய கடமையாகும். இன்னும் நாட்டின் சமுதாய வளர்ச்சியும் பொருள்வளமும் பெருகுதற்கு அண்ணல் காந்தியடிகள் அறிவுறுத்திய தன்னலமற்ற நாட்டுப்பற்று, அன்புநெறி, அகிம்சை முறை ஆகியவைகளைத் தவறாமல் மேற்கொண்டு ஒழுகவேண்டும். காந்தியடிகள் பிறந்த இப் பெரு நாளில் அவ்வாறு ஒழுகி நாட்டின் வளம், பண்பு, ஒற்றுமை, ஒருமைப்பாடு இவைகளை வளர்க்கும் பொருட்டுப் பாடுபட உறுதி கொள்வோமாக! காந்தியடிகள் நூற்றாண்டு விழாக் கொண்டாடும் இவ்வோராண்டுக் காலத்திற்குள் நாட்டைப் பலதுறையிலும் உயர்த்தப் பாடுபடுவோமாக! அவர் அறிவுறுத்திய அன்பு நெறியும் அகிம்சை முறையும் எப்போதும் நம் முன்நின்று நம்மை நெறிப்படுத்துவதாக!

விரைந்து வளர்ந்துள்ள விஞ்ஞானத்தால் உலகம் சுருங்கியுள்ளது. இந்நிலையில் எந்த நாடும் தனித்து வாழ இயலாது. நாடுகள் ஒவ்வொன்றோடு நல்லுறவு கொண்டாலன்றி உலகம் இனி ஓங்க இயலாது. ஆனால் தற்போது உலக நிலையை நோக்கும்போது எங்கும் குழப்பமும், போரும், காழ்ப்பும், மக்களுக்குள் கட்டுப்பாடற்ற நிலையும் ஆகிய இவை போன்றவைகளே நிறைந்து காணப்படுகின்றன. இந்நிலை நீடிக்குமானால் உலகம் வளர்ச்சியடைவதற்குப் பதிலாக விரைவில்தேய்ந்து குன்றிவிடும். உலகில் தற்போது நிறைந்துள்ள சீர்கேடுகள் நீங்கி நாடுகளுக்கிடையே நல்லுறவு ஏற்பட்டு ஒருமைப்பாடு எய்தவேண்டுமானால் அதற்கு ஒரேவழி காந்தியடிகள் அறிவுறுத்திய உண்மையான அகிம்சை நெறியேயாகும். காந்தியடிகள் இந் நிலவுலகில் வாழ்ந்துகாட்டிய வாழ்க்கையே இதற்கு ஒப்பற்ற சான்று. அப் பெருமானின் நூறாவது பிறந்த நாளாகிய இந் நன்னாளில் அவர் உலகுக்கு வழங்கிய அச்சீரிய அகிம்சை நெறியை உலகம் கடைப்பிடித்து ஒழுகி உய்ய உறுதி கொள்வதாக!

காந்தியடிகளின்

வாழ்க்கைப் படிகள்

1869, அக்டோபர், 2. காந்தியடிகள் பிறப்பு.

1881, ராஜகோட் உயர்நிலைப் பள்ளியில் சேர்ந்தார்.

1883, அன்னை கஸ்தூரிபாவை மணந்தார்.

1888, செப்டம்பர். இங்கிலாந்துக்குப் பயணம்.

1891, ஜூன். இந்தியா திரும்பி வழக்கறிஞர் தொழிலை மேற்கொண்டார்.

1893, ஏப்ரல். தென்னாப்பிரிக்கா பயணம்.

1896, இந்தியா திரும்பினார்.

1896, நவம்பர். தமது குழந்தைகளுடனும் மனைவியுடனும் தென்னாப்பிரிக்காவுக்குத் திரும்பவும் சென்றார்.

1906, டிரான்சுவாலிலிருந்த ஆசிய மக்களுக்கு எதிரான சட்டத் திருத்தத்தை எதிர்த்து அறப்போர் தொடங்க உறுதிமொழி எடுத்துக்கொண்டார்.

1907, வழக்கறிஞர் தொழிலை உதறித்தள்ளிவிட்டு அறப்போரில் இறங்கினார்.

1908, ஜன. 10. டிரான்சுவாலிலிருந்து வெளியேற மறுத்ததால் சிறைதண்டனை விதிக்கப்பட்டார்.

1908, ஜன. 30. ஓர் உடன்பாடு ஏற்பட்டதால் விடுதலை பெற்றார்.

1908, பிப். 8. ஒரு பட்டாணியன் அவரைக் கொல்ல முயற்சி செய்தான்.

1908, ஆக. மீண்டும் அறப்போர்.

1908, அக். மீண்டும் சிறைவாசம்.

1909, ஜூன். ஆங்கிலேய அரசிடம் தூது போக இங்கிலாந்து பயணம்.

1911—12, ஒரு வாரம் உண்ணாவிரதம். 4 மாதங்களுக்குத் தின சரி ஒரு வேளைச் சாப்பாடு; பின்னர் 14 நாட்கள் உண்ணாவிரதம்.

1912, ஐரோப்பிய ஆடைகளைத் துறந்தார். பழவர்க்கங்களை மட்டும் உண்ணத் தொடங்கினார்.

1913, மூன்று பவுன் தலைவரி விதித்ததை எதிர்த்துச் சத்தியாக்கிரகம் தொடங்கினார். கைது செய்யப்பட்டு விடுதலையடைந்தார்.

1913, நவ. 9. மீண்டும் கைது செய்யப்பட்டு 9 மாதச் சிறை தண்டனையடைந்தார்.

1913 டிச. 18. நிபந்தனையின்றி விடுதலையடைந்தார்.

காந்தியடிகள் — சுமட்சு உடன்படிக்கை

1914, ஜன. 21. காந்தி—சுமட்சு உடன்படிக்கை; சத்தியாக்கிரகம் நிறுத்தப்பட்டது.

1914, ஜூலை. இங்கிலாந்து பயணம்.

1914, ஆக. உலகப்போர் ஆரம்பம்; காந்தியடிகள் லண்டனில் இந்தியர் இயங்கு மருந்தகப் படையைத் *(Ambulance)* திரட்டினார்.

1915, ஜன. இந்தியா திரும்பினார்.

1915, மே. சபர்மதி ஆசிரமம் தொடங்கினார்.

1915—16, இரயில் வண்டியில் 3-வது வகுப்பில் இந்தியா-பர்மா சுற்றுப்பயணம்.

1918, ஜன. தீர்வையை நீக்க பம்பாயிலுள்ள கெய்ரா மாவட்டத்தில் சத்தியாக்கிரகம் தொடங்கினார்.

1919, பிப். ரௌலட் சட்டத்தை நீக்கச் சத்தியாக்கிரக உறுதி மொழி எடுத்துக் கொண்டார்.

சத்தியாக்கிரக இயக்கத் தொடக்கம்

1919, ஏப். 6. ஆசிய இந்தியா சத்தியாக்கிரக இயக்கம் தொடங்கினார்; நாடெங்கும் வேலை நிறுத்தம்.

1919, ஏப். 8. பஞ்சாபில் நுழையக்கூடாதென்ற தடையை மீறியதால் டில்லி செல்லும் வழியில் கைது செய்யப்பட்டு பம்பாய்க்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

1919, ஏப். 13. அமிருதசரசில் ஜாலியன்வாலாபாக் படுகொலை.

1919, ஏப். 14. மக்கள் வன்முறையில் ஈடுபட்டதால் மூன்று நாள் உண்ணாவிரதம்.

1919, ஏப். 18. சத்தியாக்கிரக நிறுத்தம்.

1919, செப். 'நவஜீவன்' ஆசிரியரானார்; அக்டோபரில் யங் இந்தியா' ஆசிரியரானார்.

1920, கிலாபத் ஒட்டி இராசப் பிரதிநிதியிடம் தூது.

1920, ஆக. 1. கேஸரிஹிந்த் மெடல், ஜுலு யுத்த மெடல், போயர் யுத்த மெடல் ஆகியவைகளைத் துறந்தார்.

1920, டிச. அகிம்சா முறையில் நாட்டு விடுதலை பெறுவதென்று நாகபுரி காங்கிரசில் ஒரு தீர்மானம் நிறைவேறியது.

1921, ஜூலை. அந்நியத் துணி நீக்க இயக்கம்.

1921, டிச. காங்கிரசு காந்தியடிகளுக்குச் சர்வாதிகாரம் அளித்தது.

1922, பிப். 1. பர்த்தோலியில் சத்தியாக்கிரகம் தொடங்கப் போவதாக இராசப் பிரதிநிதிக்கு அறிக்கை.

1922, பிப். 6. சௌரி சௌரா வில் மக்கள் கொள்ளை, சூறை யில் ஈடுபட்டதால் 5 நாள் உண்ணுவிரதம் தொடங்கினார். சத்தியாக்கிரக நோக்கத்தைக் கைவிட்டார்.

1922, மார்ச், 18. அரசுக்கு எதிராகப் பேசியதாகக் கைது செய்யப்பட்டு 6 ஆண்டுச் சிறைவாச தண்டனை விதிக்கப் பட்டார்.

1924, ஜன. 21. அப்பெண்டிஸிடிஸ் அறுவைச் சிகிச்சை; பிப். 5-ல் விடுதலையானார்.

21 - நாள் உண்ணுவிரதம்

1924, செப். 18. இந்து - முஸ்லீம் ஒற்றுமைக்கு 21 - நாள் உண்ணுவிரதம் தொடங்கினார்.

1924, டிச. பெல்காம் காங்கிரசுக்குத் தலைமை வகித்தார்.

1925, செப். அகில இந்திய சர்க்கா சங்கத்தைத் தொடங்கினார்.

1925, நவ. ஆசிரமவாசிகள் தவருக நடந்துகொண்டதால் உண்ணுவிரதம் இருந்தார்.

1925, நவ. சத்தியசோதனை - காந்தியடிகள் தமது "தன் வரலாறு" எழுதத் தொடங்கினார்.

1928, டிச. 1929-க்குள் இந்தியாவுக்கு டொமினியன்நிலை அளிக்கப்படாவிடில் சுதந்திரப் போராட்டம் தொடங்கப்போவதாகக் காங்கிரஸில் ஒரு தீர்மானம் கொண்டு வந்தார்.

1929, டிச. இந்தியாவின் முழு விடுதலைக்குப் போராடுவதாக லாகூர் காங்கிரசில் ஒரு தீர்மானம் கொண்டுவரப் பட்டது.

1930, பிப். சட்டமறுப்பு இயக்கம் ஆரம்பிக்க முடிவு.

உப்பு சத்தியாக்கிரகம்

1930, மார்ச். 2. உப்புச் சத்தியாக்கிரகம்.

1930, மார்ச். 12. தண்டி யாத்திரை.

1930, மே. 5. கைது செய்யப்பட்டு விசாரணையின்றிச் சிறை.

1931, ஜன. 26. நிபந்தனையின்றி விடுதலை.

1931, மார்ச். காந்தி-இர்வின் உடன்படிக்கை.

1931, ஆக. 29. காங்கிரசுத் தூதராக இரண்டாவது வட்ட மேசை மகாநாட்டில் கலந்துகொள்ள இங்கிலாந்துப் பயணம்.

1931, டிச. 28. இந்தியா திரும்பினார்.

1932, ஜன. 4. கைது செய்யப்பட்டு விசாரணையின்றிச் சிறையில் தள்ளப்பட்டார்.

1932, செப். 20. அரிசனங்களின் தனித்தொகுதியை ஒழிக்கச் சிறையில் சாகும் வரை உண்ணாவிரதம்.

1932, செப். 26. தம் வேண்டுகோள் ஏற்கப்பட்டதால் உண்ணாவிரதம் நிறுத்தம்.

1933, பிப். 11. 'ஹரிஜன்' பத்திரிகை தொடங்கினார்.

1933, மே. 8, ஆன்ம பரிசுத்தத்துக்காக 21 நாள் உண்ணாவிரதம் ஆரம்பம்.

1933, மே. 9. சட்டமறுப்பு இயக்கம் நிறுத்தப்பட்டது.

1933, மே. 23. உண்ணாவிரதம் முடிந்தது.

1934, ஜன. 26. சத்தியாக்கிரக ஆசிரமம் கலைக்கப்பட்டது.

1934, செப். 17 அக்டோபர் முதல் தேதியிலிருந்து அரசியலிலிருந்து விலகிக்கொள்ளப் போவதாக அறிவித்தார்.

1934, டிச. 14 அகில இந்தியக் கைத்தொழில் மன்றம் தொடங்கினார்.

1936, ஏப். 30. வார்தா அருகிலுள்ள சேவாகிராமம் தலைமைச் செயலகமாயிற்று.

1937, அக். 22. வார்தா கல்வித் திட்டம்.

1939, மார்ச். 3. ராஜகோட்டை சீர்திருத்தம் சம்பந்தமாக உண்ணாவிரதம் தொடங்கினார்; இராசப் பிரதிநிதி தலையீட்டால் மார்ச் 7-ந் தேதி உண்ணாவிரதம் நின்றது.

1940, செப். யுத்த நிலைமை பற்றி இராசப் பிரதிநிதியைச் சந்தித்தார்.

1940, அக். தனிப்பட்டவர் சத்தியாக்கிரகத்துக்கு அனுமதி.

1941, டிச. 30. காங்கிரஸ் தலைமைப் பதவியிலிருந்து விலகினார்.

1942, ஜன. 18. 1940 அக்டோபரில் நிறுத்தப்பட்ட 'ஹரிஜன்' பத்திரிகையை மீண்டும் தொடங்கினார்.

1942, மார்ச். 27. புது டெல்லியில் ஸ்டாபோர்டு கிரிப்ஸுடன் சந்திப்பு.

"குவிட்" இந்தியா

1942, மே. இந்தியாவை விட்டு வெளியேறுமாறு ஆங்கிலேயரைக் கேட்டுக்கொண்டார்.

1942, ஆக. 8. குவிட் இந்தியா தீர்மானம் பற்றி பம்பாயில் நடந்த அ. இ. கா. க. கூட்டத்தில் பேசினர்.

1942, ஆக. 9 கைது செய்யப்பட்டுப் பூனாவிலுள்ள ஆகர்கான் மாளிகையில் சிறைவைக்கப்பட்டார்.

1943, பிப். 10. 21 நாள் உண்ணாவிரதத்தைத் தொடங்கினர்.

1944, பிப். 22. கஸ்தூரிபாய் காந்தி ஆகாகான் சிறையில் உயிர் நீத்தார்.

1944, மே. 6. நிபந்தனையின்றி விடுதலை.

1944, செப். 9-27 பாகிஸ்தான் சம்பந்தமாக ஜின்னாவுடன் பேச்சு.

சென்னை வருகை

1946, ஜன. 21. சென்னைக்கு வருதல்.

1946, பிப். சென்னையில் பார்லிமெண்டரி தூதுக்குழு சந்திப்பு.

1946, ஏப். ஹெர்பர்ட்ஹூவருடன் சந்திப்பு.

1946, ஜூன். 30. பூனா அருகில் காந்திஜி சென்ற தனி ரயிலைக் கவிழ்க்க முயற்சி.

1946, அக். நவகாளி கலவரப் பகுதிகளில் சுற்றுப் பயணம்.

1947, ஏப். 16. அமைதி ஏற்படக் காந்தியடிகள் - ஜின்னா கூட்டு அறிக்கை.

1947, ஆக. 15. இந்தியா விடுதலை அடைந்தது.

1947, செ. 1 இந்து—முஸ்லிம் ஒற்றுமைக்குக் கல்கத்தாவில் உண்ணாவிரதம்.

1947, செப். 73 மணி நேரம் கழித்து உண்ணாவிரதம் நிறுத்தப் பட்டது.

1948, ஜன. 13. டில்லி கலவரத்தைக் கண்டித்து மீண்டும் காலவரையறையின்றி உண்ணாவிரதம் தொடங்கினர்.

1948, ஜன. 18. தலைவர்கள் வாக்குறுதியின் மீது உண்ணா விரதம் நிறுத்தம்.

1948, ஜன. 20. வழிபாட்டில் குண்டு வீசப்பட்டது.

1948, ஜன. 30. வழிபாட்டுக் கூட்டத்துக்குப் போகும்பொழுது காந்தியடிகள் சுட்டுக் கொல்லப்பட்டார்.

வெற்றி வழி

மாண்புமிகு
திரு. கே. எஸ். இராமசாமி

காந்தியடிகள் நம் நாட்டின் தந்தை. நம்மைச் சுதந்திரத்துக்கு அழைத்துச் சென்ற மா வீரர். சத்தியமே கடவுள் என்ற பொய்யாமொழியை உலகுக்குப் போதிக்கச் சத்திய நெறி நின்று தம் வாழ்க்கையையே சத்திய சோதனைக்குள்ளாக்கிய சத்தியாக்கிரகி. எம் மதத்திலும் சம்மதம் கொண்டவர்.

அகிம்சை ஓர் இணையற்ற சக்தி வாய்ந்த ஆயுதம்; அகிம்சை கோழைத்தனமன்று, வீரத்தின் சிகரம் என்பதை உணர்ந்து அதைக் கையாண்டு கத்தியின்றி, இரத்தமின்றி யுத்தமொன்று நடத்தி அடிமைக் கயிற்றை அறுத்தெறிந்த பெரியார்.

ஆண்மை என்பது வெட்டிப் பேச்சல்ல. எதற்கும் அஞ்சாது, எவர்க்கும் அஞ்சாது நல்லதையே செய்வதென்பது அவரது ஆண்மை. 1942-ஆம் வருடம் ஆகஸ்டு மாதம் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்த்துச் சுதந்திரப் போருக்கு அழைப்பு விட்டார். 'செய் அல்லது சாவு' என்பது கட்டளை. ஆண்களும் பெண்களும் வெள்ளையனின் கட்டுக்கடங்காமல் கட்டளையை நிறைவேற்றினர். ஆயிரம் ஆயிரம் பேர் ''செய்தார்கள் செத்தார்கள்.'' நாடு முழுவதும் அறப்போர்; அகிம்சைப்போர்; சுதந்திரப் போர். காந்தியடிகள் வெற்றி பெற்றார்கள். 1947-ஆம் ஆண்டு ஆகஸ்டு பதினைந்தாம் நாள் சுதந்திரக் கொடி ஏற்றுவிக்கப்பட்டது. வெள்ளையன் கொடி வீழ்ந்தது. காந்தியடிகளைப் "பக்கிரி" என்றார்கள். அவரை ஒரு பத்தாம்பசலி, உலகத்தை வெறுத்த சமயவாதி, வாழத் தெரியாதவன் என்றெல்லாம் இகழ்ந்தனர். ஆனால் அவர் வாழ்ந்து காட்டினார். உயர்ந்த லட்சியங்களைப் போதித்தார். அன்பு, சத்தியம், சேவை என்ற அடிப்படையில் அரசியலை வளர்த்தார். மகாத்மாவானார். இன்று உலகம் அவர் புகழ் பாடுகிறது. நீக்ரோ உரிமைக்காக மார்டின் லூதர் காந்தி நெறியைப் பின்

பற்றினர். அண்மையில் செக் நாட்டில் துப்செக் தலைமையில் மக்கள் காந்தி வழி சென்றனர்.

நாம் என்ன செய்கிறோம்? அவரை எந்த அளவு பின்பற்று கிறோம். நம் நாட்டின் பொரு ளாதார வாழ்வுக்கு, சமூக வாழ் வுக்கு, சுதந்திர வாழ்வுக்கு, அர சியல் வாழ்வுக்கு அடிப்படை யாக அமைய 14 அம்ச நிர்மாணத் திட்டத்தை யளித்தார். வயது வந்தோர் அனைவருக்கும் வாக் குரிமை யளித்து ஜனநாயகத்தை வளர்க்கிறோம். பொருளாதாரத் துறையில் யாவருக்கும் சம உரி மையும் சந்தர்ப்பமும் அளிக்க சோஷலிசத்தை அமைக்க முயற் சிக்கிறோம். அண்டை நாடு களால் ஆபத்து வந்த நேரம் நம் சுதந்திரத்தைக் காக்க நம் நாடு முழுவதும் ஒன்று திரண்டு எழுந்து நம் மாபெரும் போர் வீரர்கள் செயற்கரிய செயல்கள் புரிந்து, பலர் உயிரிழந்து, தொழி லாளர்களும் விவசாயிகளும், மாணவர்களும், மற்றவர்களும் ஆவன செய்து கட்டுப்பாட்டோடு தோள் கொடுத்துப் போராடிச் சுதந்திரத்தைக் காப்பாற்றி னோம்.

ஆனல் சமூகத் துறையில்தான் நாம் பின்னடைந்து விட்டோம். ஆண்களும், பெண்களும் சரிநிகர் சமமாக வாழ்வோம் இந்த நாட்டிலே என்றார்கள். உண்மை. இத்துறையில் முன்னேற்றம் உண்டு. காந்தியடிகள் இன்னும் கூறினர்கள். ''இந்துக்களையும், முகமதியர்களையும் பிணைக்கும் கருவியாக என்னை ஆக்கிக் கொள்ள நான் பெரிதும் முயற் சிக்கிறேன். அவசியமானல் என் இரத்தம் சிந்தியும் இதை அடைய ஆவல் கொண்டிருக்கிறேன். ஆனல் அதற்குமுன் இந்துக் களைப்போல் முஸ்லீம்களையும் நான் நேசிக்கிறேன் என்பதை அவர்கள் உணரச் செய்ய வேண்டும். என் மதம் இருசாரா ரையும் ஒரே மாதிரிதான் நேசிக் கச்சொல்லுகிறது. அதனல் இந்து முஸ்லீம் ஒற்றுமை ஏற்படுத்த வேண்டும்'' என்றார். வங்காளத் தில், குறிப்பாக நவகாளியில் முஸ்லீம்கள் உள்ளத்தைக் கவர்ந்தார். பெரிய பிரிட்டிஷ், இந்திய ராணுவம் செய்யமுடி யாத ஒன்றைப் பக்கிரி சாதித் தார். காந்தியடிகள் இந்து முஸ் லீம் ஒற்றுமையின் கலங்கரை விளக்கு என்பதை இரு வகுப் பினரும் உணர்ந்தனர்.

வகுப்பு ஒற்றுமைக்காக உயி ரையும் கொடுக்கத் தயாராக இருப்பதாகச் சொல்லிக் கொண் டிருந்த மகாத்மா இன வெறிக் குப் பலியானர். வெறியர்கள் விழித்தனர், வெறி அடங்கிற்று. வகுப்பு ஒற்றுமை வளர்ந்து நாட் டில் பல வருடங்கள் அமைதி நிலவியது. சீன, பாகிஸ்தான் படையெடுத்தபோது வகுப்பு வேற்றுமை யின்றி எதிரியை முறி யடித்தனர். இரண்டொரு ஆண்டு களாக மீண்டும் இந்த வகுப்பு உணர்ச்சி தலைதூக்க ஆரம்பித் திருக்கிறது. இத்தகைய சக்தி வளருமானல் நாட்டின் ஒற்று மைக்குத் தீங்கும் அமைதிக்குப் பங்கமும் ஏற்படும். 'காந்தியடி களின் நூற்றாண்டு விழாக்கொண் டாடும் இந்நாளில் இந்து முஸ்லீம் வகுப்பு ஒற்றுமையை நிலைநாட் டப் பாடுபடுவதே அவருக்கு நாம்

செய்யும் சிறந்த மரியாதையாகும். ஒரு ஊரிலோ, நகரத்திலோ, மாவட்டத்திலோ வாழும் சிறுபான்மை மக்கள் எந்த வகுப்பினராயினும் பயமின்றி வாழ வகை செய்ய நல்லதொரு சூழ்நிலையை உண்டாக்க வேண்டும். இதில் அரசு மட்டும் முழு வெற்றி காண முடியாது. இங்கே வசிக்கும் பெரும்பான்மைச் சமூகத்தினர் இதை உணர்ந்து விஷமிகளைக் களைந்து பொதுநலப் பணிகளில் ஒன்று சேர்ந்து நாட்டின் நலம் கருதி ஒற்றுமையை வளர்க்க வேண்டும். வகுப்பு வெறி பொல்லாதது. ஓரிடத்தில் இட்டால் பிரிதோரிடத்தில் எரியும். இத்தீ பரவாமல் தடுப்பதைக் காட்டிலும் இது பிடிக்காமல் காப்பதே சமூகத்தின் கடமை. இந்துக்கள் முஸ்லிம்களின் பொறுப்பு.

காந்தியடிகள் வலியுறுத்திய மற்றொன்று தீண்டாமை ஒழிப்பு. அரிஜன முன்னேற்றமின்றி நாடு முன்னேற்றமடைந்ததாகக் கூற இயலாது. தீண்டாமை இந்து மதத்துக்குப் பெரும் இழுக்கு; தீண்டாமையால் இந்து மதம் அழியும் என்பது அவர் முடிவு. தீண்டாமையை ஒவ்வொருவரும் தம் உள்ளத்திலிருந்து அகற்றவேண்டும் என்பதற்காக ஒரு இயக்கமே ஆரம்பித்தார். இயக்கமும் நன்கு வளர்ந்தது. கோவிலிலோ, பொதுவிடங்களிலோ, அரசியலிலோ தீண்டாமை சட்டபூர்வமாக ஒழிக்கப்பட்டதாயினும் பூர்ண வெற்றி என்று சொல்லுவதற்கில்லை. சட்டம் மட்டும் போதாது. சமூகத்தில் மனமாற்றம் ஏற்பட சமூக சீர்திருத்தவாதிகள் இந்த இயக்கத்தைத் தொடர்ந்து நடத்த வேண்டும். அமெரிக்காவில் நீக்ரோ பிரச்சினை இருக்கலாம். ஆனால் நம் நாட்டில் ஏன் இருக்க வேண்டும்? அமெரிக்காவால் முடியாததை நாம் காந்தியடிகளின் அன்பு வழியில் சென்று வெற்றியடைவோம். அண்மையில் ஸ்ரீநகரில் நடைபெற்ற தேசிய ஒருமைப்பாடு மாநாட்டிலே நம் நாட்டில் தேசிய ஒருமைப்பாட்டையும், ஒற்றுமையையும், கட்டுப்பாட்டையும் நிலைநிறுத்தப் பல அரிய யோசனைகளை வெளியிட்டார்கள். வகுப்பு ஒற்றுமைக்குத் தீங்கு விளைவிப்பனவற்றைத் தடுக்கவேண்டிய அளவு அதிகாரங்களை அரசு பெறவும் முடிவு செய்யப்பட்டது. பிரதேச வெறி, வகுப்பு வெறி, மொழி வெறி, ஜாதி வெறி முதலியவற்றால், பெற்ற சுதந்திரத்துக்கு ஆபத்து. இதைத் தடுப்பது ஒவ்வொரு இந்தியனின் கடமை. முக்கியமாக இளைஞர் சமுதாயம் விழிப்புடனிருந்து இத்தகைய சக்திகள் இனிமேல் தலையிடாமல் ஒடுக்கத் துடிக்க வேண்டும். காந்தி கொண்ட அஞ்சா நெஞ்சம், சத்தியத்தில் நம்பிக்கை, அன்பு வழி, தியாக உணர்ச்சி ஆகியவை என்றென்றும் நமக்கு வழி காட்டும். இவ்வழியே வெற்றிக்கு வழி.

உண்மை எனது தெய்வம்; அகிம்சை அத்தெய்வத்தை அடையும் வழி.

சினம் அகிம்சையின் பகைவன்; கர்வம் அகிம்சையை விழுங்கும் பூதம்.

— **காந்தியடிகள்**

காந்தியும் காமமும்

டாக்டர். தெ. பொ. மீனாட்சிசுந்தரனார், எம்.ஏ., பி.எல்., எம்.ஓ.எல்., டி.லிட்.

இதுவரையிலும் சமய வாழ்வுக்கு மட்டுமே இன்றியமையாதுவேண்டியன என்று உலகம் கருதி வந்த உண்மை, அன்பு முதலியவற்றைக் காந்தியடிகள், சமுதாயத்தில் எல்லாத் துறைகளிலும் உயர்நிலையாக்கியதோடு ஒருவர் இருவர் இன்றிப் பலரும் ஒருமுகமாக இவற்றை நிலைநிறுத்தப் பாடுபட வேண்டும் என்று வற்புறுத்தி அரசியற் கொள்கையையே அடியோடு மாற்றி விட்டார். இவர் கொள்கைக்காக உயிரையும் கொடுத்து உழைப்பதற்காக மார்ட்டின் லூதர் கிங் போன்றவர்கள் முன்வந்ததையும் காண்கிறோம். எனவே ஒருலகப் புரட்சிக்கே வித்திட்டார் காந்தியடிகள் என்பதை நாம் உணர வேண்டும்.

அண்ணல் காந்தியடிகள் தம் கொள்கையை அறிவாராய்ச்சி அடிப்படையில் எழுதி வைத்துப் போகவில்லை. அவர் சில நூல்களைத் தேர்ந்தெடுத்துக் கற்றார். அவற்றின் வழியே வாழ்வை நடத்த முயன்றார். அவர் வாழ்வே இந்த வகையில் சத்திய சோதனையாக அமைந்ததை அவரே தம் வாழ்க்கை வரலாற்றில் விளக்கியுள்ளார். அவர் வாழ்வே அவர் கொள்கையின் விளக்கம். அவர் செயல் வகையில் வாழ்ந்து கொண்டே போகும்போது கற்றதும் கேட்டதும் வாழ்ந்ததும் ஒன்றாகி அவர் கொள்கையாய் முன்னேறிச் சென்றன. அவ்ருடைய வாழ்வொளிக் கொள்கையாக, வாழ்வின் உயிர்நிலையாக அமைந்துவிட்டன. எனவே அவர் கொள்கையின் தோற்றத்தையும் வளர்ச்சியையும் முழுவடிவத்தையும் பொருளினையும் அறிய வேண்டுமானால் அவருடைய வாழ்வையும் அந்த வாழ்வின் சுற்றுப்புறச் சூழ்நிலையையும் ஆராய்ந்தறிய வேண்டும்.

குறிப்பிட்டதொரு நிலையில் ஒரு கொள்கையை அவர் கூறியிருந்தாலும், அந்த நிலைக்கு மட்டும் அக்கொள்கை பொருந்தியது என்று கொள்ளாமல், அதன் ஆழத்தை அறிந்து இந்த உலகத்துக்கு ஏற்றவாறு அக் கொள்கைக்கு அகன்ற நிலையில் பொருள் கொள்வதே பொருத்தமாகும்.

நூற்றாண்டு விழாக் கொண்டாடுகிற நாம் அவர் கொள்கையை நம் கால வாழ்வோடும் அதன் பல துறைகளோடும் பொருந்த வைத்து உணர்ந்து பின்பற்றுவதே தலையாய கடமையாகும். பிற கொள்கைகளோடு ஒருங்கு வைத்து ஆராயும்போது பல சிறப்புக்கள் தோன்றவரும். மேனாட்டார் ஆராய்ந்து வருவதைக் காண்கிறோம். மேனாட்டுப் பல்கலைக் கழகங்களில் இத்தகைய ஆராய்ச்சிகள் நிகழ்ந்து வருகின்றன. நாமும் அப்படிச் செய்ய வேண்டாவா?

இதனைக் கருதியே மதுரைப் பல்கலைக் கழகம் ஓராண்டில் முடியும் சான்றிதழ்ப் பயிற்சியையும் (Certificate Course in Gandhian Thought) அடுத்து ஓராண்டில் முடியும் உயர்நிலைச் சான்றிதழ்ப் பயிற்சியையும் (Diploma Course in Gandhian Thought) நிறுவ முயன்று வருகிறது. ஐயம் எல்லாம் தெளிய ஆராய்ந்தபோதுதான் ஒரு கொள்கை வேரூன்றி நம் மனத்தில் நிலைத்து நின்று நம் வாழ்வை உள்ளிருந்து இயக்கி வைக்க முடியும். இப் பயிற்சி பல கல்லூரிகளிலும் நிலையங்களிலும் பின்பற்றப்பெறும் என எண்ணுவோமாக.

பிரமச்சரியம்!

''சூலுக் கலகத்தில் காயம்பட்டவர்களுக்குப் பணி செய்து கொண்டிருந்தகாலை பிரமச்சரியம் பற்றிச் சிந்தித்தேன். தன் ஆத்மா முழுவதையும் அர்ப்பணித்து மனித சமுதாயத்துக்குத் தொண்டு செய்யும் நோக்கம்கொண்ட ஒருவர் பிரமச்சரியமின்றிச் சேவை செய்ய முடியாது என்பதை உணர்ந்தேன். அதாவது, உடலையும் ஆன்மாவையும் ஒருங்கே பேணி நான் உயிர் வாழ்தல் இயலாது என்பதை உணர்ந்தேன். அதனால் வாழ்க்கை முழுவதும் பிரமச்சரியத்தைக் கடைப்பிடிக்க முடிவு செய்தேன்.

'பிரமச்சரியம் இல்லாத வாழ்க்கை உயிரற்ற மிருக வாழ்க்கை போல் தோன்றுகிறது. மிருகத் தன்மைக்கு இயல்பாகவே தன்னடக்கம் கிடையாது. மனிதன் தன்னடக்கத்தை எவ்வளவு தூரம் கையாளுகிறானோ அந்த அளவுக்கே மனிதனாகிறான். நம்முடைய சமய நூல்களிலே மிகவும் மிகைப்படுத்திப் புகழப்பட்டதாக எனக்கு முன்னர் தோன்றிய பிரமச்சரியம் இப்பொழுது முழுதும் முறையானது என்றும் அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டது என்றும் தெளிவாகத் தெரிந்தது.

''அற்புதமான ஆற்றல் வாய்ந்த பிரமச்சரியம் எளிய செயலன்று என்றும் அது உடலைமட்டும் சார்ந்ததன்று என்றும் கண்டேன். அது உடல் அடக்கத்தில் தொடங்குகிறது; ஆனால் அத்தோடு முடிவதில்லை. அதன் முழுமை நிலையாவது, மாசு கலந்த ஒரு சிறிய எண்ணமும் உள்ளத்தில் எழாநிலையாகும்."

— காந்தியடிகள்

இளம் பருவத்தில் ....

1. போர்பந்தரில் காந்தியடிகள் பிறந்த இடம்
2. ஏழு வயதில்
3. இராஜ்கோட் தொடக்கப் பள்ளியில்
4. இலண்டனில் சட்டக் கல்வி பயின்ற பின்

பட உதவி :
மதுரை காந்தி நினைவுப் பொருட்காட்சி நிலையத்தார்.

தென்னாப்பிரிக்காவில்
காந்தியடிகள்

1. ஜோனெஸ்பெர்கில் வழக்கறிஞராக
2. ஜுலு கலகத்தின்போது தொண்டர் தலைவராக
3. நேட்டாலில் சத்தியாகிரகியாக
4. கத்தியவார் உடையில் (1915)

பட உதவி: மதுரை காந்தி நினைவுப் பொருட்காட்சி நிலையத்தார்.

ஆரம்பக் கல்வியில் வேலை அனுபவம்

திரு. கூ. அருணாசலம்

மனிதன், கூடி வாழும் மிருகம். குடும்பத்திலும் சமுதாயத்திலும் வாழும் மனிதன் நாளடைவில் வளர்ச்சி யடைகிறான். கூட்டு வாழ்வு, வளர்ச்சிக்கு உதவுகிறது. மற்றவர்களைப் பின்பற்றி, பெரியவர்களின் குறிப்புக்களை உணர்ந்து அண்டை அயலாரின் சுக துக்கங்களில் அனுதாபம் காட்டி வாழுதல் மனிதன் இயல்பு. பின்பற்றுதலும் குறிப்புணர்தலும் அனுதாபமும் மனிதனின் நடத்தையை மாற்றுகின்றன. இவற்றால் மனிதன் மாறி அமைகின்றான். இத்தகைய மாறுதல் காலப் போக்கில் மெதுவாகவே நடைபெறுவதைக் கண்டுள்ள மனிதன் தன்னுடைய வளர்ச்சியிலும், முன்னேற்றத்திலும் நிறைவு காண விரும்பிப் பள்ளிக்கூடப் பயிற்சி என்ற ஏற்பாட்டைக் கண்டுபிடித்தான். பலரின் அனுபவத்தால் பலர்கண்ட பலவித அனுபவங்களை எல்லாம் தொகுத்துப் புத்தக வடிவமாக்கி அதனையே வாசிக்கவும், எழுதவும், கணக்குப் போடவும், குறுகிய காலத்தில் விரைவாகவும் முறையாகவும், தெரிந்துகொள்ளவே, பள்ளிக்கூட ஏற்பாடு. இதன் பயனாய் நேரடி வாழ்க்கையின் மூலம் பெற்ற அறிவு வளர்ச்சி மறைமுகமாகச் சொல்லக் கேட்ட அனுபவங்களாக மாணவர்களுக்குக் கிடைக்கும். இப்படிச் செய்த போது நேரடி வாழ்க்கைக்கும் கல்விக்குமுள்ள தொடர்பு குறைந்தது. காதால் கேட்டவற்றைச் செயலாக்குவது சிரமமாக இருந்தது. கேட்டவை மனத்தில் பதிவதற்காக மறுபடியும் மறுபடியும் அவற்றைச் சொல்லி மனப்பாடம் செய்ய வேண்டியதாயிற்று. காலப் போக்கில் மாணவர்கள் அறிந்திருக்கிறார்களா என்று அளவிடப் பரிட்சிக்கும் பழக்கமும் பள்ளிகளில் நுழைந்தது. அப்போது கல்விக்கும் வாழ்வுக்கும் தொடர்பு அறவே இல்லாது போயிற்று. சமுதாயத்திலும், உழைப்பவர்கள் பலராகவும் அனுபவிப்பவர்கள் சிலராகவும் பிரிந்தார்கள். அனுபவிப்பவர்களே இலக்கியம் போன்ற கலைகளைப் பயின்று அதனை அனுபவிப்பதையே தமது வாழ்நாள் வேலையாகக் கொண்டார்கள். அதனால் சமூகத்தில் பிளவு அதிகம் உண்டானதோடு

மக்கள் அனைவரும் சரிசமமாக வளர்ச்சியடைய வாய்ப்பு இல்லாது போயிற்று.

வெறும் புத்தகப் படிப்பு, குழந்தையின் முழு வளர்ச்சிக்கு உதவாததைக் கண்ட சில அறிஞர்கள் மன வேதனை அடைந்தார்கள். அவர்களுடைய முயற்சியினால் சென்ற நூற்றாண்டின் இறுதியில் உடல் உழைப்புப் பயிற்சி (manual training) பாடத்திட்டத்தில் இடம் பெற்றது. உடல், மனம், உயிர் - மூன்றும் ஒருங்கே இணைந்த வளர்ச்சி இம்முயற்சியால் நடைபெறவில்லை. புத்தகப் படிப்பு மனத்தைப் பண்படுத்தியது. உடல் உழைப்பு தசைகளுக்குப் பயிற்சி கொடுத்துச் சில திறமைகளையும் குழந்தைக்கு அளித்தது. ஆனால் எல்லாவற்றையும் ஒருங்கெடுத்து உயிரூட்டும் சக்தி இப்புதிய ஏற்பாட்டிற்கு இல்லாது போயிற்று. வாழ்க்கைக்கு ஒரு சிறிதும் தொடர்பில்லாத இந்த உடல் உழைப்பு ஏற்பாட்டினால் பொருள் விரயமாயிற்றேயொழிய மாணவர்கள் முழு மனத்துடன் ஈடுபடவில்லை. ஆளுமை வளர்ச்சிக்கும் இதனால் அதிக உதவியில்லை. இதைப் பற்றிச் சிந்தித்து அறிஞர்கள், வாழ்க்கையிலுள்ளது போன்ற சில கைத்தொழில்களை (craft training) பாடத்திட்டத்தில் சேர்த்தால் தாம் கருதியது கைகூடுமென்று நினைத்தார்கள். அதுவும் சில காலம் கடந்தது. பள்ளிக்கும் சமூகத்திற்கும் தொடர்பற்ற நிலையில் மாணவனின் கல்வியில் ஒரு சிறு அம்சமாக இருந்த கைத்தொழில் பாடங்கள் பலனளிக்கவில்லை. எதிர்கால வாழ்க்கைக்குத் தயார் செய்வதே கல்வியின் நோக்கம் என்ற குறிக்கோளையுடைய ஆசிரியர்கள் தொழில் கல்விக்கான நேரத்தைக்கூடப் புத்தகக் கல்விக்கே பயன்படுத்தியதில் ஆச்சரியமில்லை. அறிவு ஒன்றே தான் மனிதன் வளர்ச்சிக்கு ஆதாரமென்று கருதிய இவர்கள் வேறு என்ன செய்திருக்க முடியும்?

கல்வியின் மூலம் சமுதாயத்தைச் சத்தியம், அன்பு இவைகளின் அடிப்படையில் மாற்றியமைக்க விரும்பிய காந்தியடிகள் தனது நெடுநாள் அனுபவ ஆராய்ச்சியின் பயனாகக் கல்வித் திட்டத்தில் தொழிலுக்கு இடம் கொடுப்பதற்கு மாறாக, தொழில் மூலமாகவே கல்வி நடைபெற வேண்மென்ற முடிவுக்கு வந்தார். இது தொழில் கல்வி அல்ல; தொழில்மூலம் நடைபெறுகிற கல்வி. கல்விக்கு ஆதாரமாகப் புத்தகங்கள் இருந்த இடத்தில் தொழில் இடம் பெற வேண்டுமென்பது அவருடைய கருத்து. நோக்கம் தொழில் கல்வி கற்பிப்பதல்ல, குழந்தையின் வளர்ச்சி.

ஆதாரக் கல்வி பல ஆண்டுகள் அமுலில் இருந்தது. உழைப்பைவிட வெறும் அறிவை அல்லது புத்தியை உயர்வாக மதித்தவர்களும் கடின உழைப்பிலிருந்து எவ்வாறெனினும் தப்ப விரும்பிய பொதுமக்களும், தொழிலைமையமாகக் கொண்ட ஆதாரக் கல்வியை அவ்வளவாக விரும்பவில்லை. புத்தி ஜீவிகள் இயந்திரங்களைக்கொண்டு மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யலாமென்று நம்பினர். இயந்திரங்கள் செய்ய முடியாத உழைப்பினை மக்களின் ஒருசாரார்

மீது போட இடையறாது முயன்று வந்தனர். இதனால் சமூகத்தில் அநீதி வளர்ந்தது. சமூக அமைப்பில், சூழ்ச்சியில் சிக்கிய சிலர் இது தமது தலைவிதி என்றுஉழைப்பினை ஏற்றனர். இவர்களும் உழைப்பிலிருந்து தப்பும் காலத்தை எதிர் நோக்கியே உழைப்பில் ஏனோ தானோ வென்று ஈடுபட்டனர். இதனால் சமூகத்தில் ஏற்பட்ட நஷ்டம் கொஞ்சநஞ்சமல்ல. இக் குறையைப் போக்குவதற்காகவேதான் காந்தியடிகள் தொழிலை மையமாகக் கொண்ட கல்வியைக் கண்டுபிடித்தார். உழைப்பினால் உண்டாகும் பொருள் அல்லது பண லாபம் எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியம் அல்லது அதைவிட முக்கியம், உழைப்பவருக்கு உழைப்பினால் உண்டாகும் செயல்திறனும், அப்பழக்கத்தினால் வரும் அறிவும். கலை அறிவை விட செயலறிவு குறைந்ததன்று. உழைப்பில் இரண்டுமே புதைந்து கிடக்கின்றன. சுதந்திர இந்தியாவில் இந்த உண்மையைச் சரிவர உணர முடியாமையினால் நாட்டிற்குத் தலைமை வகித்தவர்கள் உறுதியாகக் கல்வித்துறையில் வழிகாட்டத் தவறி விட்டனர் என்றே சொல்லவேண்டும். இன்னும் நம் நாட்டுக் கல்வி இரண்டும் கெட்டான் முறையிலேயே நடந்து வருகிறது.

அண்மையில் தேசியக் கல்வியை உருவாக்குவதற்காக டாக்டர் கோத்தாரியின் தலைமையில் பல நாட்டின் நிபுணர்களைக் கொண்ட கல்விக் குழு ஒன்றை அமைத்தார்கள். அக் குழுவினர் பல சிறந்த பரிந்துரைகள் செய்துள்ளனர். அவர்கள் தம்முன் வைத்த குறிக்கோள் ஒரு நவீன இயந்திர சமுதாயமானதால் அதற்கான வழி வகைகளையே பரிந்துரைத்துள்ளார்கள். காந்தியடிகள் கூறிய கைத் தொழில் மையக் கல்வி சமூகத்தைப் பின்நோக்கிக் கொண்டு போய்விடும் என்பது அவர்கள் கண்ட முடிவு. எனினும் சமுதாயத்திற்குப் பயன்தரும் உற்பத்தித் தொழிலை வற்புறுத்திய ஆதாரக் கல்வியை ஏனைய முறைகளைவிடச் சிறந்ததெனப் பாராட்டியுள்ளார்கள். முற்போக்கான உழைப்பும், கல்வியில் இடம் பெற வேண்டுமென்பது இவர்கள் துணிபு. கலை அறிவு, நூலறிவு, செயல்திறன் அல்லது வேலை அனுபவம், தொண்டு மனப்பான்மை இந்நான்கும் ஒருங்கே திரண்டது முழுக் கல்வி. இப்பண்புகள் எல்லா மனிதர்களுக்கும் இன்றியமையாதவை. எனவே, ஆரம்பப் பள்ளியிலும் சரி, உயர்தர மேற்படிப்பிலும் சரி, வேலை அனுபவம் (work experience) இன்றியமையாதது என்பது இவர்களது கூற்று. இதனை மாநில அரசு எவ்வளவு ஏற்பார்கள் என்று இப்போது திட்டவட்டமாகக்கூற முடியாது. எனினும் ஆதாரக் கல்விக்கு முழு ஆதரவு கிடைக்காத இக் காலத்தில் ஆதாரக் கல்வியே சிறந்தது ,என்று நம்பும் நண்பர்கள் இந்த "வேலை அனுபவ"த்தை எப்படிப் பயன்படுத்தலாம் என்றுசில ஆலோசனைகள் கூற விரும்புகின்றேன்.

வேலை அனுபவம் என்பது உற்பத்தித் தொழிலில் ஈடுபடுதல். வீட்டிலோ, தொழிற்சாலையிலோ வயலிலோ, பட்டறையிலோ அல்லது மூலப்பொருளைத் தூய்ப்

புப் பண்டமாக்கும் வேறு சூழ் நிலையிலோ நடைபெறும் உடல் உழைப்பைத் தொழில் அனுபவ மாகக் கொள்ளலாம். இத்தகைய வேலை அனுபவத்தைப் பொதுக் கல்வியிலும் சரி, தொழில் கல்வி யிலும் சரி, இணைந்த ஒரு அம்ச மாகக்கொள்ள வேண்டுமென்று கோத்தாரிக்கமிஷன் கூறுகின்றது.

பழங்காலச் சமுதாயங்களில் தொழில் செய்தே மனிதன் அறிவு பெற்ருன். ஆனுல் இத்தகைய தொழில், மனிதனின் முழு வளர்ச் சிக்கு உதவவில்லை. அதில் போது மான உந்தித் தள்ளும் வேகம் இல்லாததால் பூர்வீகக் குடிகளின் சமுதாய வாழ்க்கைகூட தேக்க நிலையிலேயே இருந்தது. பள்ளிக் கூடங்களில் வெறும் ஏட்டுப் படிப்பு • வற்புறுத்தப்பட்டதால் சமூகம் இரு கூறுகளாகப் பிளவு பட்டது சமுதாய ஒருமைப்பாட் டிற்குஉகந்த கருவிகளாகவே வேலை அனுபவம் இப்போது வற் புறுத்தப்படுகிறது. சிந்தனையும் செயலும் மாறி மாறி வருவதே தொழில் அனுபவம். வேலை அனுபவத்தில் கையாளப்படும் கருவிகள் அதிக உற்பத்தித் திறனுடையனவாகவும் தொழில் நுட்பத்தை உணர்த்த வல்லன வாகவும் இருக்கும்.• இதனுல் வருவாயும் அதிகரிக்கும். அறிவு வர்க்கத்தினரும் உழைப்பாளி களும் இதை விரும்பி ஏற்றுக் கொள்வார்க ளென்றே நம்பப் படுகிறது. இத்தகைய கல்வியில் ஆரம்ப நிலையில் படிப்பவர் கள் வளரும் சமுதாயத்தில் சிறந்த அங்கத்தினர்களாவதற்கு உதவியாயிருக்கும்.

வேலை அனுபவங்களை நான்கு பெரும் பிரிவுகளாகப்பிரிக்கலாம்:

1. வீட்டில் அம்மா - அப்பா விற்கு உதவியாகச் செய்யும் வேலைகள் - பெருக்குதல், மெழுகு தல், வெள்ளையடித்தல், சமைய லுக்குக் காய்கறிகள் முதலியன நறுக்குவதன் மூலமாக உதவி செய்தல், பாத்திரம் துலக்குதல், துணி துவைத்தல், தண்ணீர் இறைத்தல், ஆடுமாடுகளைப் பராமரித்தல், கைக் குழந்தை களைக் கவனித்தல் போன்றவை இதில் அடங்கும். இவற்றிற்குப் பண மதிப்பை யாரும் கணக்கிடுவ தில்லை. மனமொத்த இவ்வேலை களில் ஈடுபடுவதினுல் பெற்ருேரின் பாராட்டுக்கு ஆளாகிருர்கள். பெரியவகளைப் பார்த்து இவ்வேலை களை மேலும் மேலும் நன்ருகச் செய்பவர்கள் திறமை பெறு கிருர்கள். குடும்பத்திற்கு உதவி யும் ஆகிறது. இதில் தனியான ஆனந்தமும் உண்டாகிறது.

2. பகுதிநேர வேலைகள்: ஒய்வுக் காலத்தில் தொழிற்சாலை களிலோ கடைகளிலோ அல்லது வேறு நிறுவனங்களிலோ பகுதி நேர வேலை செய்வது பட்டணங் களில் நாம் காணும் காட்சி. வருடம் முழுவதும் கூட ஒரு சிலர் ஒரு மணி நேரம் அல்லது இரண்டு மணி நேரம் பத்திரிகை போடுவது, கடைகளில் கணக்கு எழுதுவது, வாகனங்களைத் துடைத்துத் துப்புரவு செய்வது, காவல் காப்பது, சிறிது நேரம் எடுபிடி வேலைகள் செய்வது போன்றவை பகுதிநேர வேலை களாகும். இவ்வேலைகளைப் பண வருவாயை எதிர்பார்த்தே செய் கிருேம். இத்தகைய வெலைகளில்

ஈடுபடுவதினுல் கிடைக்கும் ஊதியத்தோடு, பெரும் அனுபவங்களும் நற்பண்புகளும் ஏற்படுகின்றன. பிறருடன் ஒத்துப்போகும் வழக்கம் ஏற்படுகிறது. குறிப்பறிந்து நடந்துகொள்ளவும் எதையும் தாழ்ந்தது என்று நினைக்காமல் செய்யும் பண்பும் இயற்கையாகவே அமைகின்றன.

3. தனித்தவர்கள் எதிர்காலத்தில் செய்யப்போகிற சில வேலைகளுக்காக ஒரு அலுவலகத்திலோ தொழிற்சாலையிலோ செய்யும் வேலையும் இதனுள் அடங்கும். இப்பயிற்சியில் தொழிலாளி முதலாளி அமைப்பில் கருவிகளைக் கையாண்டு மூலப்பொருளைத் துய்க்கும் பொருளாக ஆக்கும் திறன் ஏற்படுகிறது. இதில் அளவறிந்து செயலாற்றும் பண்பு வளரும். வரவு-செலவு, இலாப-நஷ்டம், முதலீட்டுக்குத் தகுந்த பயன், துய்ப்பாளர்களின் விருப்பத்திற்கேற்ற பண்ட உற்பத்தி, செய்பொருளின் நேர்த்தி முதலியவற்றைப் பற்றி அறிய இங்கு வாய்ப்புண்டு.

4. குழுவாகச் சேர்ந்து திட்டமிட்டு வேலை செய்வதும் வேலை அனுபவத்தின் பால்பட்டதேயாகும். வீடுகட்டுவதில் சிலர் சாந்து குழைக்க வேண்டியதிருக்கிறது. சிலர் கல்மேல் கல் வைத்துக் கட்டிடத்தை உயர்த்துகிருர்கள். சிலர் சித்தாள் வேலை செய்கிருர்கள். இவர்கள் அனைவரும் நன்ருக வேலை செய்யும்போது தான் வேலை சிறக்கும். நவீன தொழிற்சாலைகளில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு பாகத்தையே செய்வதில் ஈடுபடுகிருர்கள். முடிவில் பல பாகங்களை ஒன்ருகப் பொருத்தி ஒரு இயந்திரம் உருவாகிறது. இதில் தனி மனிதரைவிட குழுவிற்கே சிறப்பு. தன்னலத்தைவிட குழு நலம் கருதும்பான்மை இதனுல் வளரும்.

மேலே கண்ட நான்கு விதமான தொழில் சந்தர்ப்பங்களில் எதனையும் கல்விக்குப் பயன்படுத்தலாம். நான்குமே சரியான அளவில் அமைவது விரும்பத்தக்கது. ஆசிரியர்கள் நல்ல முறையில் திட்டமிட்டுக் கண்காணித்து அளவிட்டுச் செயலாற்றினுல் தொழில் அனுபவம், விரும்புகின்ற பலனைத் தரும். வெறும் தொழிலைப் பாடப் புத்தகத்தில் ஒன்ருகச் சேர்த்து அதனைக் குறிப்பிட்ட நேரத்தில் செய்வதால் அதிலிலிருந்து கல்விப்பயன் எதுவும் உண்டாகாது. அது உயிரற்ற சடமாகவே இருக்கும். குழந்தைகள் இதனை ஒரு வேண்டாத சுமையாகவே கருதுவார்கள். குழந்தை வாழ்வில் இணைபிரியாத அம்சமாகத் தொழிலை இணைத்து அவர்களுடன் சேர்ந்து திட்டமிட்டுக் கண்காணித்து அளவிட்டு நடைபெறும் தொழில், கல்விக்கு உயிரூட்டும்; வளர்ச்சிக்கான வேகத்தையும் விருவிருப்பையும் நல்கும்.

திட்டமிட்டுச்செய்யும் வேலையே நல்ல பலனைத் தரும். திட்டமிடும் பணியில் ஆசிரியரும் மாணவரும் முழுப்பங்கு கொள்ளவேண்டும். பெற்ருேர் சமூகத்திற்கும் கல்வித் துறையினருக்கும் ஏற்புடைய திட்டமாக இருந்தால் வெற்றி நிச்சயம். இதில் ஏதாவது ஒன்று குறையினும் தோல்வி தான். வேலை அனுபவம் சமுதாயத்தின் பாராட்டுதலுக்கு உரியதாயிருக்க

வேண்டும். வகுப்பறையில் கற்கும் எண்ணிற்கும் எழுத்திற்கும் வேலை அனுபவத்துடன் தொடர்பு இருக்கும்படியும் திட்டம் வகுக்க வேண்டும். இப்படிச் செய்வது மாணவர்கள் ஆர்வத்துடன் வேலையில் ஈடுபட உதவும். எட்டறவு பட்டறவுக்கு உதவுகிறது என்று எண்ணம் வலுத்துச் செயலுக்கும் சொல்லுக்கும் உள்ள பிளவு குறைந்து ஒன்றிய ஆளுமைத்தன்மை வளர உதவும்.

முன்னர் சொன்னது போல வீட்டிலுள்ள வேலை அனுபவத்தையும் வகுப்பறையில் பயன்படுத்தலாம். பள்ளியில் செய்யக் கூடிய வேலைகளே திறமைகளை வளர்க்கப் பேருதவியாக இருக்கும். பள்ளியில் வாய்ப்பும் வசதியும் குறைவாக இருக்கும்போது அண்டை அயலிலுள்ள வேலை வாய்ப்புகளைப் பயன்படுத்தவும் திட்டமிடலாம்.

வேலை எந்த நிலையில் நடைபெற்றாலும் அது நன்றாகக் கண்காணிக்கப்பட வேண்டும். இங்குக் கூறும் கண்காணிப்புக்கும் முதலாளிகள் கண்காணிகளை வைத்து வேலை வாங்குவதற்கும் உள்ள வித்தியாசத்தை உணர வேண்டும். இங்கு நடைபெறும் கண்காணிப்பு, தவறுகளைச் செப்பம் செய்து வேலைத் திறனையும் பண்பையும் வளர்ப்பதற்காகவேயாம். கண்காணிப்பை (supervision) குழந்தைகள் விரும்பி வேண்டும்படி அமைக்க வேண்டும். இது ஒரு பழுவாக இருக்கக்கூடாது. ஆசிரியரே தான் கண்காணிக்க வேண்டுமென்பதில்லை. வீட்டு வேலையாயின் பெற்றோரோ, வெளிவேலையாயின் அதனை நடத்தும் உற்றாரோ அதற்கு உதவலாம். ஒரே சமயத்தில் உடன்படிக்கும் மாணவரும் இப் பணியினைச் செய்ய ஏற்பாடு செய்யலாம்.

வேலைசெய்யும் முன்னும் செய்யும்போதும் அதைப்பற்றிய குறிப்புக்கள் பதிவு செய்தல் மிக மிகு அவசியம். செய்த வேலையை அளவிட அதிலுள்ள நிறைகுறைகளைக் காண இது உதவும். சில சமயங்களில் மாணவர் இதனை வேண்டா வெறுப்புடன் செய்வர். ஆனால் இது பயன்படுவதைக் காணும்போது மகிழ்ச்சியடைகின்றனர்.

வேலைநடக்கும்போதும் முடிந்ததும், பல்வேறு நிலைகளில், குறிக்கோளுடன் ஒப்பிட்டு அளவிடப் படவேண்டும். இது வெளியார் ஒருவரோ அல்லது ஆசிரியரோ செய்வது விரும்பத்தக்கதாயினும் மாணவர்களே செய்வதுதான் சிறந்தது. மற்றவர்கள் அவர்களுக்கு உதவலாம். அளவிடும் போது தாம் செய்த செயலின் பயனைத் தெரியவும் தெரிவிக்கவும் பயிற்ற வேண்டும். நமது வேலைகளைப்பற்றி நாமே நிறைகுறை கூறவும் மற்றவர்களைக் கொண்டு குணம் குற்றம் கண்டு பிடித்துச் சொல்லச் செய்யவும் வேண்டும். இப் பழக்கம் வந்தவர்கள் பிறர்சொல்லும் குறைகளை மனம் கோணுது ஏற்றுத் திருந்த முயல்வர்.

முடிந்தவரை ஏனைய பாடங்களுடன் இணைந்த வேலை அனுபவமே நிலைத்த கல்விப் பயன் தரும். இந்த வேலை அனுபவத்தின் மூலம் பணம் பெறுவது முக்கியமல்ல. என்றாலும் பணத்

தைக் கணக்கிடுவதும் சமுதாய நலனைக் கணக்கிட ஒரு வழியாகும். இந்தப் பயிற்சி மேல் நிலைகளில் படிக்கும்போதே சம்பாதிப்பதற்கும் சம்பாதித்து அதைக் கொண்டு படிப்பதற்கும் வித்திடுவதாகும்.

பள்ளிகளில் வேலை அனுபவம் கொடுப்பது என்பது இலகுவானதல்ல என்பதையும் நான் இங்குக் கூறிவிட விரும்புகிறேன். இப்போது உள்ள பொருளாதார அமைப்பு இதற்கு விரோதமாக எதிராகச் செயல்படுகிறது. மனித சமுதாயத் தன்மையைப் புறக்கணித்து இலாப நோக்கு ஒன்றே குறியாகவுள்ள இவ்வமைப்பைக் கல்விக்குப் பயன்படுத்த முடியாது. கல்வியில் தாம் விரும்புவது அற'வழியில் தனி மனிதன் சமுதாய நலம் கருதி உழைத்து முன்னேறுதல். இதற்குத்தக்க ஆசிரியர்களை உண்டாக்குவது இரண்டாவது சிரமம். ஒருவேளை ஆசிரியர்களைப் பயிற்றிவிட்டாலும், இத்தகைய வேலை வாய்ப்புக்களைக் கண்காணித்துப் பள்ளிக்கு உதவும் தொழில்துறை நண்பர்கள் கிடைப்பது அரிது. எல்லாவற்றிற்குமேல் இதற்காக ஏற்படும் ஆரம்பச் செலவுகளைச் செய்ய அரசும் சமூகமும் இன்று தயாராக இருக்குமா என்பது. வேலை அனுபவம், நல்ல கருவிகள் இல்லாதபோது போலியானதாகவேதான் இருக்கும். போலி வேலை செய்வதை விட செய்யாமல் இருப்பது மேல்.

பள்ளிக் குழந்தைகளுக்கு வேலை அனுபவம் கொடுப்பதில் எத்தனையோ இடையூறுகள் இருந்தாலும் அவற்றைச் சமாளித்துக் கொண்டு அதற்கான எல்லா நடவடிக்கைகளும் எடுத்தால் தான் சமூகத்தில் இன்றுள்ள குறைகளான ஒழுங்கீனம், கட்டுப்பாடின்மை, குணக்கேடு, பலாத்காரப்போக்கு, சமூக விரோதச் செயல்களில் ஈடுபாடு இவைகளைக் குறைத்து நன்மக்களை உண்டாக்க முடியும். சூழ்நிலை சாதகமில்லாத போதே நல்ல வளர்ச்சி ஏற்படும். எனவே எதிர்காலத்தில் நம்பிக்கை வைத்துக் கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்த வேலை அனுபவம் கொடுக்க முனைவோமாக.

கொடியது எது?

நான் வாழவேண்டும் என்பதற்காக ஒரு கொடிய நச்சுப் பாம்பைக்கூடக் கொல்ல மாட்டேன். அது என்னைக் கடிக்கும் அபாயம் நேரும்பொழுதும் அதைக் கொல்ல நினையாமல் கடிபட்டு இறப்பதையே மேலாகக் கருதுவேன். கொடும்புலி, நச்சுப் பாம்புகள் முதலியன மனிதனுடைய உள்ளத்தில் உதிக்கும் கொடிய விரும்பத்தகாத எண்ணங்களுக்கு மாற்றாகக் கடவுளால் படைக்கப்பட்டவை. இந்த உயிர்களை ஒழிக்க எண்ணுவதற்கு முன்னர் நம் உள்ளத்தில் எழும் கொடிய எண்ணங்களை அகற்ற முயற்சி செய்யவேண்டும்.

— காந்தியடிகள்

காந்தியடிகள் சிந்தித்த சமுதாயம்

திரு. ரா. குருசாமி

இந்தியா கிராமங்கள் நிறைந்த நாடு. நம் நாட்டின் ஜனத் தொகையில் 82 சதவிகிதத்தினர் கிராமங்களிலேயே வசிக்கிறார்கள். இந்தியாவினுடைய ஆட்சி, கிராம மக்களுடைய ஆட்சியாகத் தான் இருக்கவேண்டும். அதாவது, நிலத்தில் உழுது பயிரிட்டு உற்பத்தி செய்யும் விவசாயி மக்களுடைய ஆட்சிதான் நடக்க வேண்டும்; ஆனால் துர்பாக்கிய வசமாக அவர்களுடைய ஆட்சி இல்லாமல் படித்தவர்கள், அறிவாளிகள், வியாபாரிகள், தொழிற்சாலை அதிபர்கள், அவர்களுக்குத் தொண்டு செய்யும் மக்கள் ஆகியவர்களைக் கொண்ட நகரங்களே இந்தியாவை ஆளுகின்றன. ஆகவே நகர மக்களுடைய நலன்களும், அவர்களுடைய தொழில்கள், வியாபாரங்கள் ஆகியவைகளுமே பிரதானமாக ஆட்சியினரால் கவனிக்கப்பட்டு வருகின்றன

ஆங்கிலேயருடைய ஆட்சிக்கு முன்பாக கிராம மக்கள் தங்களுக்கு வேண்டிய உணவு, உடை, குடியிருப்பு வசதிகள் மற்றும் இதர தேவைகள் யாவற்றிற்கும் அரசாங்கத்தை எதிர்பார்க்காமல் தாங்களாகவே . செய்து, விவசாயம், கைத்தொழில் யாவற்றிலும் வளர்ச்சி பெற்று உன்னத நிலையில் வாழ்ந்தார்கள். ஆங்கிலேயர் இந்தியாவைக் கைப்பற்றிய பிறகு, இங்கிலாந்தின் தொழில் வளர்ச்சிக்கும், வேலை வாய்ப்புக்கும் செல்வ வளர்ச்சிக்கும் இந்திய மூலப்பொருட்களைக் கொண்டுசெல்வதற்காகக் கிராம அமைப்புக்களை உடைத்து உற்பத்திச் சாதனங்களைத் தனி உடைமையாக்கி, விற்பது வாங்குவது என்ற வியாபாரப் போக்குக்காக நாணயச் செலாவணியை ஏற்படுத்திப் புதிய ஒரு திருப்பத்தை உண்டாக்கினார்கள். அதன்காரணமாக இந்தியச் செல்வம் இங்கிலாந்தை நோக்கிச் செல்லலாயிற்று. கிராமச் செல்வ நிலைகள் வறட்சியுற்றன. கிராமத் தொழில்கள் அழிந்தன. நிலச்சுவான்தார்கள் முதலாளிகளானார்கள். தரித்திரமும், வேலை இல்லாத் திண்டாட்டமும் உச்ச நிலையடைந்து, கிராம வாழ்க்கை அறியாமையும், தரித்திரமும் தாண்டவமாடக்கூடிய நிலையில் தாழ்வுற்றது.

தமிழகத்தில் காந்தியடிகள் ....



NOTICE.

A public meeting under the [illegible] of the Madras [illegible] will be held on Monday, the 26th October [illegible] in the Pachaiyappa's Hall, when Mr. M. [illegible] will address the meeting on the Grievances of British Indians in South Africa. Resolutions [illegible] will also be adopted.

The Hon'ble Mr. P. Ananda Charlu will preside.

All are cordially invited to attend.

[illegible]



Segaon, Wardha
7-3-3[illegible]

Dear Young Friend,

I was delighted to receive your handsome do[illegible] of Rs 4/13/- sent by you through Mr. Khaitan. It w[illegible] be used for the Harijan cause. May the spirit of service that actuated the donation continue [illegible] in all of you. [illegible]

மோ. க. [illegible]







1. சென்னையில் பொத
   கூட்ட அறிக்கை
   (26-10-189
2. தென்னாப்பிரிகாவில
   கஸ்தூரிபா, பி. (
   நாயுடு குடும்பம்
   ஆகியோருடன்
   (191
3. வள்ளியம்மாள்-
   தென்னாப்பிரிக்காவ
   உயிர்த் தியாகம்
   செய்த தமிழ்ச்-
   செல்வி
4. சென்னையில் கஸ்தூரிபா, ஜி. ஏ. நடேசன்
   யாகூப் உசேன் ஆகியோருடன்
5. மதுரையில் முழங்கால் துண்டு அணிய
   உறுதி கொண்ட பின்பு (1921)

6 அரிசன நலச் சுற்றுப் பயணம் கன்னியாகுமரியில் நீராடல் (1934)
7. அரிசன நலச் சுற்றுப் பயணம் திருச்செங்கோடு ஆசிரமத்தில் (1934)
8. தேவகோட்டை நாராயணனுக்கு எழுதிய கடிதம் –
   மகாத்மாவின் தமிழ்க் கையொப்பம்









9. அம்பத்தூர் இரயில் நிலையத்தில் திரு. கு. காமராசர் காந்தியடிகளை வரவேற்றல் (1946)

10. மதுரை மீனாட்சியம்மன் கோயிலுக்குத் தனி இரயிலில் பயணம் (1946)

11. இரயில் பெட்டியில் நின்றுகொண்டு மக்களுக்கு உரையாற்றல் (1946)

12. அரிசன நிதிக்காக நன்கொடை பெறுதல்

13. மீனாட்சியம்மன் கோயிலுக்குள்

14. பழனி பொதுக்கூட்டத்தில்

15. காந்தியடிகளின் தமிழ் எழுத்து

பட உதவி:
மதுரை காந்தி நினைவுப் பொருட்காட்சி நிலையத்தார்.

சுதந்தரம் கிடைத்த பிறகு அரசாங்க நிர்வாக அமைப்பில் எந்தவிதமான மாறுதலும் செய்யப்படவில்லை. இந்தியாவை ஆளுவதாகப் பாவனை காட்டி இந்தியாவின் மூலப்பொருட்களைச் சுரண்டி இங்கிலாந்தின் தேவைப் பொருட்களாக மாற்றி, இந்தியாவிலேயே விற்று, இதன் மூலமாக இந்திய மக்களை நிரந்தரமான அடிமைகளாகவும், ஏழைகளாகவும், அறியாமையில் ஆழ்ந்தவர்களாகவும் ஆக்கிய ஆங்கில ஆட்சி போன்றே இந்தியாவிலுள்ள நகரங்கள் இந்தியக் கிராமங்களை ஆட்சி செய்து வருகின்றன. இது காந்தியடிகள் கண்ட சுதந்திர ஆட்சியுமல்ல; ஜனநாயகமும் அல்ல.

ஆங்கில ஆட்சி மாறியவுடன் அரசாங்க நிர்வாக அமைப்பிலும் சமுதாய அமைப்பிலும் புரட்சிகரமான மாறுதலைச் செய்யத் தவறிவிட்டோம். அதன் காரணமாகப் பரம்பரையான சர்வ வல்லமையுள்ள உத்தியோக வர்க்கம் நிலைத்து முன்னைவிடப் பலமுடையதாகவும், சக்தி வாய்ந்ததாகவும் பெருகி, மக்களால் தாங்க முடியாததும், வருடா வருடம் அளவிலும், உருவிலும் அதிகமாகிக்கொண்டே வரும் நிர்வாக எந்திரத்திற்கான சம்பளப் பளுவால் மக்களை நசுக்கிக்கொண்டேயிருக்கிறது. எந்தக் கட்சியினர் அரசாங்கங்கள் ஏற்பட்டாலும் இந்த வெள்ளை யானை வளர்ப்புப் பிரச்சினைக்கு வழி காணவேண்டியிருக்கிறது. மக்களுடைய வளர்ச்சிக்காகப் பணம் கிடைப்பதற்குச் சிரமம் ஏற்படுகிறது.

ஜனநாயகம் என்ற பெயரால் நம் கட்சி அரசியல்கள் மூலம் நாடு ஆளப்பட்டு வருகிறது. அதனால் ஏற்படும் போட்டா போட்டிகளும் பதவி ஆசைகளும், தகராறுகளும், கட்சி விட்டுக் கட்சி மாறும் மனோபாவங்களும் இன்று வளர்ந்து ஜனநாயகப் பண்பாட்டையும், ஒழுக்கத்தையும் எப்படி நாசம் செய்து வருகின்றன என்பதைக் கண்கூடாகப் பார்க்கிறோம். கட்சி அரசியல் அவசியம்தானா என்பதைச் சிந்திக்கவேண்டிய தருணம் இப்பொழுது வந்திருக்கிறது.

கல்வி என்பது மனிதனுக்கு இயற்கையாக ஆண்டவனால் அளிக்கப்பட்ட, அறிவை விரிவுபடுத்துவதற்கான சாதனமாகும். அதற்கான வாய்ப்புக்களும், வசதிகளும், சந்தர்ப்பங்களும் எல்லா மக்களுக்கும் கிடைக்கும்படி செய்வது அரசாங்கத்தின் கடமையாகும். இன்று ஏராளமான இளைஞர்கள் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் படித்து வருகிறார்கள். அவர்கள் உழைத்து உற்பத்தி செய்து சம்பாதிப்பதற்குத் திறமையற்றவர்களாக உருவாக்கப்படுகிறார்கள். அவர்களுடைய கை, கால்கள் முடக்கப்பட்டு அறிவு மூளைக்குள் திணிக்கப்படுகிறது. அவர்கள் எல்லோரும் முதல் தேதி சம்பளம் வாங்கும் மேற்பார்வையாளராக, டாக்டர், வக்கீல், இன்ஜினியர்களாக, ஆசிரியர்களாக, சிறிய பெரிய உத்தியோகஸ்தர்களாக, கணக்கர்களாக, குமாஸ்தாக்களாக, ஆபீஸ் பையன்களாக விரும்புகிறார்களே தவிர யாரும் உழைத்து உற்பத்தி செய்ய விரும்பவில்லை. இங்கும் இவர்களை

ஏற்றத்தாழ்வு இல்லாத மனிதர்களாக மதித்து இவர்கள் தேவைக்கேற்பச் சம்பளம் கொடுப்பதில்லை. இவர்கள் படிப்புக்குச் தகுந்த எத்தனையோ விதமான கிரேடுகள் நிர்ணயிக்கப்பட்டு ஏற்றத் தாழ்வு மூலம் பலவிதமான சம்பளங்கள் கொடுக்கப்படுகின்றன. உத்தியோகங்கள் வரம்பிற்கு உட்பட்டு இருப்பதாலும், எல்லோரும் உயர்ந்த பதவிக்கு முயற்சிப்பதாலும், அது கிடைக்காத போது ஜாதியின் பெயரால், மதத்தின் பெயரால், மாகாணங்கள் அளவின் பெயரால், பங்கு போடும் நிலைமை வளர்ந்து இப்போது மொழிக்கிளர்ச்சி, மாகாண உரிமைக் கிளர்ச்சி, சேனைகள், உருவங்களில் தேச ஐக்கியத்திற்கு விரோதமான விஷ வித்துக்கள் நாடெங்கும் தூவப்படுகின்றன. படிப்பவர்கள் எல்லோருக்கும் வேலை கொடுக்க முடியாத நிலையில் அரசாங்கங்கள் திணறுகின்றன.

சமுதாயத்தில் உற்பத்தி செய்பவர்களுக்கும், ஆபீசர்களுக்கும் இருக்கப்பட்ட சம்பள வித்தியாசங்கள் திடுக்கிடும்படியான நிலையில் இருக்கின்றன. ஒரு விவசாயி நிலத்தில் தினசரி பாடுபட்டு 2 முதல் 2½ ரூபாய் வரை சம்பாதிக்க முடிகிறது. ஆனால் விவசாயத்தைப் பற்றி உபதேசம் செய்யும் ஒரு சர்க்கார் ஊழியர் 6 ரூபாய் வாங்குகிறார். அதே வேலை செய்யும் ஒரு ஆபீஸர் 12 ரூபாய் சம்பளம் பெறுகிறார். சமுதாயத்தில் உழைத்து உற்பத்தி செய்யக் கூடிய ஒரு கிராமவாசிக்கு எவ்வளவு கீழ்த்தரமான மரியாதை கொடுக்கப்படுகிறது; உற்பத்தி செய்யக்கூடிய கிராமவாசிக்கும், உற்பத்தி செய்யாத படித்தவனுக்கும் இருக்கக்கூடிய ஏற்றத்தாழ்வுகள் ஒருவரைக் கூலியாள் என்றும் மற்றொருவரை மேலாள் என்றும் ஆக்கிச் சமூகத்தில் ஏற்றத்தாழ்வுகளை ஏற்படுத்தி வருகிறது. கல்வி என்பது சமுதாயத்தின் தேவைகளுக்கு உற்பத்தி செய்வதில் திறமையுடனும், நுட்பமாகவும், குறுகிய காலத்திலும், புத்தியை விரிவுபடுத்திச் செய்வதற்கான சாதனமே தவிரச் சுரண்டுவதற்கோ, லாபம் சம்பாதிப்பதற்கோ ஆன ஒரு முறை ஆகாது. கல்விக்கூடங்கள், உடலால் உழைத்து வேலை செய்வதற்கு உதவாத, சமுதாயத்திற்குப் பாரமான, வெறும் புத்தியால் சம்பளம் வாங்குபவர்களை உற்பத்தி செய்யும் தொழிற்கூடங்களாக மாறிவருகின்றன. இன்றைக்குள்ள சமூக நிலையில் சம்பாதிக்கக் கூடியவர்கள், சம்பாத்தியம் இல்லாதவர்கள், முதலாளி, தொழிலாளி, பணக்காரன், ஏழை, படித்தவர், படிக்காதவர் என்ற பாகுபாடு நிரம்பி வர்க்கப் போராட்டத்திற்கான சூழ்நிலை பயங்கரமாக உருவாகிக்கொண்டிருக்கிறது. இது கம்யூனிசத் தத்துவம் வளர்வதற்கான சூழ்நிலையாகும். காந்தியடிகளால் உருவாக்கப்பட்ட தலைவர்களே காந்தியடிகளின் எண்ணங்களை அமுல் நடத்தத் தவறியதன் காரணமாகத் தேசம் பெரிய சிக்கலில் மாட்டிக்கொண்டிருக்கிறது. இச்சிக்கலை அவிழ்க்கும் திறமை அரசியல் தலைவர்கள் யாருக்கும் இல்லாமல், செய்வது அறியாமல் திணறுகிறார்கள். மக்கள் கட்டுப்பாடு சிதைந்து, சட்டம், அமைதி குறைந்து, கிளர்ச்சிகளும், வன்முறைகளும் வளர்ந்து வருகின்றன. காந்தியடிகளை மறந்த பாவத்தை நாம் அனுபவித்து வருகிறோம். காந்தியடிகள் காட்டிய வழி தவிர இன்றைய பிரச்

சினைகள் தீருவதற்கு வேறு வழியே கிடையாது.

அமெரிக்க முதலாளித்துவ நாட்டில் ஜனநாயகம் என்ற பெயரால் தனிப்பட்ட சுதந்திரம் இருந்த போதிலும் தனி மனிதன் முதலாளியாகி மற்றொருவனைச் சுரண்டுவதே பரவலாக இருந்து கொண்டிருக்கிறது. அதாவது தனிப்பட்ட முதலாளித்துவம் வளர்ச்சியடைவதற்கு வாய்ப்பு ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. ரஷ்ய நாட்டில் அரசாங்கமே முதலாளியாகித் திட்டமிட்டு மக்களைத் திட்டங்களை நிறைவேற்றும் கருவிகளாக ஆக்கியிருக்கிறது. ஆகவே அங்கு ஜனநாயகம் இல்லாத சர்க்கார் நிலவி வருகிறது. இங்கு உழைத்து உற்பத்தி செய்யும் அடிப்படையில் மக்களின் ஜனநாயக ஆட்சி உருவாக வழியில்லை. கம்யூனிஸத்திலோ, அமெரிக்க ஜனநாயகத்திலோ இல்லாத ஒன்றை நம் நாட்டின் பண்பாட்டிற்கும், நாகரிகத்திற்கும், கலாச்சாரத்திற்கும் ஏற்ற முறையில் காந்தியடிகள் உருவாக்கினார்கள். அதை அவர்கள் சர்வோதயம் என்று அழைத்தார்கள்.

1. எல்லோருடைய நலன்களில் தான் தனிப்பட்டவர்களுடைய நலன் அடங்கியிருக்கிறது.

2. தங்களுடைய உழைப்பினால் ஜீவனோபாயத்தைத் தேடிக் கொள்வதற்கு எல்லோருக்கும் ஒரேவிதமான உரிமை இருப்பதால் எந்தத்தொழில் செய்தாலும் அந்தத் தொழிலின் மதிப்பு சமமான நிலையில் இருக்கும். அதாவது ஒரு வக்கீலினுடைய ஊழியமும் ஒரு தோட்டியினுடைய ஊழியமும் சமமாகக் கருதப்பட்டு ஊதியம் ஒரே மாதிரியாகக் கொடுக்கப்படும்.

3. சரீர உழைப்புச் செய்யும் பாட்டாளி வாழ்க்கையும், குடியானவன் வாழ்க்கையும் தான் சிறந்த வாழ்க்கை.

இந்த மூன்று கொள்கைகளையும் கொண்டு காந்தியடிகள் தன்னுடைய புதிய சர்வோதய இயக்கத்தை நடத்த எண்ணினார். கிராம மக்களின் கேந்திரமாக இருக்கும் கிராமங்களின் நிலங்கள் கிராம சமுதாயத்திற்குச் சொந்தமாக்கிக் கிராம மக்களே கிராம சபை அமைத்துக் கிராம மக்களுக்கான தேவைகளைத் திட்டமிட்டு உற்பத்தி செய்து கிராம மக்களுக்குத் தேவைக்கேற்ப வினியோகித்து, எல்லோருக்கும் வேலை வாய்ப்பை அளிப்பதற்கான முறையில் சக்தி வாய்ந்த குடியரசாக மலர வேண்டுமென்று காந்தியடிகள் விரும்பினார்.

காந்தியடிகளுடைய வாரிசான வினோபா அடிகள் இன்று கிராமதான இயக்கத்தை நடத்தி வருகிறார்கள். தேசத்தின் பல பாகங்களில் இந்த இயக்கமானது வலுவடைந்து பல ஜில்லாக்களைச் சேர்ந்த கிராமங்கள் தானமாகிக் கொண்டே இருக்கின்றன. கிராமதான கிராமங்களிலுள்ளோர் தங்களுடைய நிலத்தில் 20-இல் ஒரு பங்கை நிலமில்லாதவர்களுக்குக் கொடுத்துவிட வேண்டும். மற்ற நிலங்கள் அவர்கள் பெயராலேயே பரம்பரையாக அனுபவிக்கும் ரீதியில் இருக்கும். ஆனால் நிலத்தைக் கிராமத்தை விட்டு வெளியே விற்கும் உரிமை அவர்களுக்கு இருக்காது. நாளடைவில் இந்த நிலங்களின் டிரஸ்டிகளாக அவர்கள்

கருதப்படுவார்கள். கிராமங்களிலுள்ள உற்பத்தி சாதனமாகிய நிலங்கள் அந்தக் கிராமத்தினுடைய மக்களுக்குச் சொந்தமாகும்போது, அந்த கிராமத்தினுடைய மக்கள் சபைகூடி அந்தக் கிராமத்தின் தேவைகளுக்காகத் திட்டமிடுகிறது. இன்று வேலையில்லாமலிருக்கும் எண்ணற்ற கிராமவாசிகளுக்கு வேலை வாய்ப்பளிப்பதற்கான ரீதியில் திட்டம் அமையும். விவசாயத்தை அதிகப்படுத்தி 3 போகங்கள் உற்பத்தி செய்வதற்கான தண்ணீர்த் தேவைகளைப் பற்றிக் கவனிப்பார்கள். குடிநீர்க் கிணறுகள் வெட்டுவது பற்றித் திட்டமிடுவார்கள். குளங்கள் வெட்டுவது பற்றி யோசிப்பார்கள். கிராமத் தேவைகளுக்கேற்ப உணவு தானியங்கள், காய்கறிகள், கீரைகள், பயறு வகைகள், எண்ணெய் வித்துக்கள், பருத்திபோன்ற மூலப் பொருட்கள் உற்பத்தி செய்வதற்கான திட்டம் உருவாகும். விவசாயத்திற்கு வேண்டிய கருவிகள், விதைகள், மருந்து வகைகள், உரங்கள் போன்றவை பற்றிக் கணக்கிட்டுத் தயார் செய்வார்கள். அதற்கான நிபுணர்கள் தேவைப்பட்டால் கிராமத்திலிருந்து ஒருவரைச் சம்பந்தப்பட்ட கல்வி நிலையத்திற்கு அனுப்பிப் படிக்க வைத்து அவரை வழிகாட்டியாகக் கொண்டு விவசாயத்தை அபிவிருத்தி செய்வார்கள். அந்த வழிகாட்டி, தானே வேலை செய்வதன் மூலமாக ஒரு விஸ்தரிப்பு ஊழியராக எந்தவிதமான விசேட ஊதியமும் இல்லாமல் வேலை செய்வதோடு விஞ்ஞான ரீதியான புதிய முறையில் மக்களுக்குப் பயிற்சியுமளிப்பார். இம்மாதிரி, கிராமங்களுக்கு வேண்டிய கால்நடைகள், கைத்தொழில்கள், கூட்டுறவுச் சங்கங்கள் முதலிய வேலைகளையெல்லாம் திட்டமிட்டுச் செய்யும்போது கிராமத்தில் உற்பத்தியாகக்கூடிய மூலப் பொருட்கள் வெளியே போகாமல் தடுக்கப்படுகிறது. தேவைப் பொருட்கள் கிராமத்திலேயே உற்பத்தி செய்யக்கூடிய ரீதியில் அமைவதால் நூற்றல், நெசவுத் தொழில், சாயமிடுதல், நெல் குத்துதல், எண்ணெய் ஆட்டுதல், தோல் பதனிடுதல், தோல் சாமான்கள் செய்தல், இரும்பு கொல் வேலை செய்தல், செங்கல் அறுத்தல், சுண்ணும்புக் காளவாய் போடுதல், வீடுகள் மற்றும் கட்டிடங்கள் கட்டுதல் போன்ற பல்வேறு தொழில்கள் வளர்ச்சியடைய ஏதுவாக இருக்கும். தொழில்களில் மின்சாரம் உபயோகப்படுத்துவது ஒரு கட்டுப்பாட்டுடன் நடக்கும் அதாவது சமுதாயத்தினுடைய நலன்களுக்காக மின்சாரம் உபயோகப்படுமேயொழிய தனிப்பட்ட லாப நோக்கத்துடன் செய்யப்படமாட்டாது. தொழில்களைக் கற்று அதை விஞ்ஞான ரீதியில் செயல்படுத்துவதற்கும் திறமையுள்ளவர்களாக ஆவதற்கும் தேவைப்படும் அறிவைப் பெறுவதற்குமான சாதனமாகவே கல்வி இருக்கும். படித்தவர்கள் உழைப்பாளிகளாக மாறுவார்கள். உற்பத்தி செய்யக்கூடிய எல்லாப் பொருட்களும் தேவைக்குத் தகுந்தபடி சமுதாயத்திற்குப் பகிர்ந்து அளிக்கப்படும். திட்டமிட்டு எல்லோருக்கும் வீட்டு வசதிகள் செய்து கொடுக்கப்படும். உணவுப் பொருட்களோ, உடை மற்றும் இதர தேவைப் பொருட்களோ யாவும் கிராமத்திலேயே செய்யப்பட்டு எல்லோருக்கும் போதுமான அளவு வழங்கப்படும். உற்பத்தி செய்ய முடியாத பொருட்

களைப் பண்டமாற்று மூலமாக வாங்குவதற்கு ஏற்பாடு செய்வார்கள். தொழிலிலோ, வேலையிலோ, கூலியிலோ படிப்பை ஒட்டியோ, திறமையை ஒட்டியோ, அறிவை ஒட்டியோ ஏற்றத்தாழ்வு இருக்காது. எல்லோருடைய திறமையும் சமுதாயத்தின் சேவைக்காக அர்ப்பணிக்கப்படுகின்றது. உடைமை போய்விடுவதால் விவகாரங்கள் குறைந்து நியாய சபைக்குப் போகவேண்டிய அவசியமே இருக்காது. ஏதாவது ஏற்படக்கூடிய சிறு விவகாரங்களைக் கிராம சபையே பைசல் செய்துவிடும். கிராமக் காவல் குறிப்பிட்ட அட்டவணைப்படி எடுக்கப்பட்ட நபர்களால் நிர்வகிக்கப்படும். ஆகவே கிராமங்களில் உற்பத்தி செய்யக்கூடிய செல்வம் வளர்ச்சியடையும். எல்லோருக்கும் வேலை கிடைக்கும். தேசம் பூராவும் அரசாங்க நிர்வாகத்திற்கோ, நியாய சபைகளுக்கோ, போலீசுக்கோ, நிர்வாக நிபுணர்களுக்கோ, குமாஸ்தாக்களுக்கோ செல வழிக்கும் பணம் பெருமளவில் குறைந்து செலவு மிச்சப்படும். மக்கள் சுபிட்சம் நிறைந்தவர்களாக இருப்பதால் ஒற்றுமையும் வலிமையுமுள்ளவர்களாக விளங்குவார்கள். எந்தவிதமான ஆக்கிரமிப்புக்கும், குழப்பங்களுக்கும் இடம் கொடுக்கமாட்டார்கள். ஒவ்வொரு கிராமமும் ஒரு சக்தி வாய்ந்த கோட்டையாக விளங்கும். இந்தச் சக்தி உருவாகும் போது ராணுவத்தின் அவசியம் இருக்காது. மக்களுடைய சக்தி யானது வளர்ச்சி பெற்றுப் பொருளாதாரத் துறையிலும், சமூகத் துறையிலும், அரசியலிலும், கலாச்சாரத்திலும் பெரும் புரட்சி ஏற்படும். அரசியல் கட்சிகளுக்கு அவசியம் இருக்காது. நகரங்கள் கிராம உபரிப் பொருட்களின் விற்பனைச் சந்தையாக விளங்கும். கிராமத் தொழில்களைப் பாதிக்ககாத பெரிய தொழில்கள், அரசாங்க ஆதரவில் நடக்கும். தொழிலாளர்கள் அதன் நிர்வாகத்தை டிரஸ்டிகளாக இருந்து கவனிப்பார்கள்.

இன்றைய நிலையில் நம்முடைய நாட்டில் அமைக்கப்பட்டுள்ள அமைப்பானது முதலாளித்துவ அமைப்பாகும். பணக்காரர்கள் பெரிய பணக்காரர்களாகவும், இல்லாதவர்கள் மிகவும் இல்லாதவர்களாகவும் ஆக்கும் ரீதியில் சமுதாயம் போய்க்கொண்டிருக்கிறது. இந்த அமைப்பை மாற்றி அமைக்கக் காந்தியடிகள் நிர்மாணத் திட்ட வேலைகள் செய்தார்கள். நிர்மாணத்திட்டங்கள் சரிவர நிறைவேற்றப்பட்டால் ஒரு வர்க்க பேதமில்லாத, ஜாதி பேதமில்லாத, சுரண்டலற்ற சமுதாயம் உருவாவதற்கு வாய்ப்பு உள்ளது. கிராம சமுதாயம் வளர்ச்சியடைவதற்கு வேண்டிய பலம் கொடுக்கும் ரீதியில் மாகாண, மத்திய அரசாங்கங்கள் இருக்கவேண்டுமேயொழிய மேலே இருந்து கீழே ஆளுவதற்கான ரீதியில் இருக்கக்கூடாது என்பதே காந்தியடிகளுடைய எண்ணம். ஆகவே இந்தியாவில் பிறந்த ஒவ்வொருவரும் உழைக்கக் கூடியவனாகவும், உற்பத்தி செய்யக்கூடியவனாகவும் ஆவதற்கான அறிவும், திறமையும், வாய்ப்பும், வசதியும் பெற நாம் முயற்சி செய்யவேண்டும். அப்படிப்பட்ட மக்கள் ஆட்சியே ஜனநாயக சோஷலிஸமாகும். இதுவே காந்தியடிகள் சிந்தித்த சமுதாயமாகும். அதை அடைவதற்கு நாம் எல்லோரும் கங்கணம் கட்டி உழைப்போமாக.

அண்ணலார் காட்டிய வழி

திரு. அ.மு. பரமசிவானந்தம், எம்.ஏ., எம்.லிட்.

உலகில் எத்தனையோ மக்கள் பிறக்கின்றனர். பிறந்து வாழ்ந்த அனைவரையும் உலகம் நினைத்துப் பார்ப்பதில்லை, எங்கோ சிலரைச் சில காலம் எண்ணுவர். ஆனால் எல்லோராலும் எக்காலத்திலும் போற்றப் பெறுகின்றவர் மிக மிகச் சிலரே. அவ்வாறு காலத்தை வென்று வாழும் அறத்தலைவர்களுள்ளே அண்ணல் காந்தி அடிகளார் தலைசிறந்தவராவர்.

உலகம் அறங்கூறும் நல்ல பண்பாட்டாளரை வாழவிடுவதில்லை. ஆயினும் அவர்களோ காலத்தை வென்று உலகம் உள்ளளவும் உயிர்கள் உள்ளளவும் நிலைபெற்று வாழ்ந்து, அறநெறியைக் கூறாமல் கூறிக்கொண்டிருக்கிறார்கள். 'மக்கள் மக்களாக வாழ' வழிகாட்டி விளக்கந் தந்த நல்ல அறவோரை உலகம் அழிக்கப் பார்த்ததே வரலாறு. இயேசு பெருமானைச் சிலுவையில் ஏற்றிக் கொன்றது உலகம்; முகமதுவைக் கல்லிட்டுத் துரத்திற்று; சாக்கிரடிஸை விடமிட்டுக் கொன்றது; சிலரை நெருப்பிட்டுப் பொசுக்கிற்று; அப்பரைக் கடு விடம் தந்து கொல்ல நினைத்தது; மணிவாசகரைக் கொதிக்கும் மணலில் உருட்டிற்று; ஆம்! அதே உலகம் இன்று "அறவழியே வாழ்' என்று வழி காட்டிய அண்ணல் காந்தியாரைக் குண்டிட்டுக் கொன்றது. எனவே உலகம் என்றும் நல்லவரை வாழவிட்டதில்லை-இனியும் விடுமா என்பதும் ஐயமே! என்றாலும் அவர்கள் அனைவரும் பொன்றாப் புகழோடு, நாளும் புதுநெறியும் புதுமணமும் பரப்பி நிலைத்து வாழ்கின்றார்கள்.

அண்ணல் காந்தி அடிகளார் நம்மொடு வாழ்ந்தவர். ஆம்! அவரொடு அவர் காலத்தில் வாழ்ந்தோம் என்ற பெருமை நமக்கு உண்டு. இன்று அவர் நூறாவது பிறந்த நாள் விழாவைக் கொண்டாடுகிறோம். அவர் புகழை நாட்டில் பரப்புகிறோம். மேடைகளில் பேசுகிறோம் - ஏடுகளில் தீட்டுகிறோம். 'அண்ணலார் காட்டிய வழி' ஆயிரக்கணக்கில்- ஏன்-இலட்சக் கணக்கில் விலை போகிறது. அனைத்தும் மகிழத்தக்க செயல்களே! ஆயினும்

அவற்றை எண்ணி, நாம் வாழ்வில் செய்ய மேற்கொண்டோமா? இக் கேள்விக்கு யாரே பதில் இறுப்பர்? மிகச் சிலரே விடை தரக் கூடும். அதுவும் நிறை நலம் தரும் விடையாக இருக்குமா என்பது ஐயமே! அண்ணல் காந்தியடிகள் எழுதியதைவிட அதன்படி வாழ்ந்து காட்டியதனுலேயே அவர் என்றும் இறவா ஏற்றம் பெற்ருர். 'அரியவாம் சொல்லிய வண்ணம் செயல்' என்ற அருமையை எளிமையாக்கித் தாம் எண்ணியபடி, சொல்லியபடி வாழ்ந்து காட்டினுர் அவர். எனவே அவர் என்றும் வாழும் இறை நிலையுற்றுத் திகழ்கின்ருர். இன்று அவர் பிறந்த நாளைக் கொண்டாடும் நாம் அவர் என்ன சொன்னுர் என்பதை எண்ணி, அதன் வழி வாழ ஓரளவாவது முயல வேண்டாமா? நாம் வாழ அண்ணலார் காட்டிய வழி என்ன?

காந்தியடிகளார் மக்கள் வாழ்வைத் தெய்வ நம்பிக்கையின் மேலும் தன்னம்பிக்கையாகிய 'ஆன்ம பலத்' தின் மேலும் அமைக்க விரும்பினுர். அவ்வாறே அவர் அமைத்துத் தம் வாழ்க்கை நெறியை வரையறுத்துக் கொண்டார். அதனுலேயே அவரால் எதற்கும் அஞ்சாது வாழமுடிந்தது. அதே வேளையில் சமுதாய வாழ்வுக்குத்தேவையான எளிமை தூய்மை, வாய்மை முதலிய நற்பண்புகளையும் தம் உயிராகக் கருதி வாழ்ந்தார். அவர்தம் சத்திய சோதனை வழியே அவர் காட்டிய நெறிகள் பலப்பல.

மனித வாழ்வு உண்மைக்கு-சத்தியத்துக்குக் கட்டுப்பட்டு நிற்பது. இந்தக் கட்டினை மனிதன் அறுத்தெறிவானுனல் அன்றே உலகம் சாம்பலாகி விடும். தனி வாழ்வாயினும் சமுதாய வாழ்வாயினும் இச்சத்திய நெறியாலேயே விளக்கம் பெறுதல் வேண்டும். இந்த அடிப்படையை உணராத காரணத்தாலோ—அன்றி உணர்ந்து மேற்கொள்ள விரும்பாததாலோதான் உலகில் எண்ணற்ற கொடுமைகள் நடைபெறுகின்றன. இக் கொடுமைகளைக் கண்டு கண்டு கருத்தழிந்த அண்ணலார் மேற்கொண்ட உண்ணுவிரதங்கள் பல—உணர்த்திய அற உரைகள் பல.

சத்தியத்தை நாடும் நல்லுயிர் எப்படி உலகில் தாழ்ந்து—மற்றவருக்கு வழிவிட்டு வாழவேண்டும் என அண்ணலார் காட்டுகிருர்.

'சத்தியத்தை நாடிச் செல்பவர் தூசிக்கும் தூசியாய்ப் பணிவு கொள்ளவேண்டும்'.

(சத்தியசோதனை — முன்னுரை — பக். IX)

இதனுல் பணிவுடைமையே பண்புடைமை என்ற உண்மையை அடிகளார் காட்டிவிட்டார். அவ்வாறே அவர் வாழ்ந்தார் என்பதையும் நம்மால் மறக்க முடியுமா? தெய்வத்தை வழிபடுபவருக்கு அண்ணலார் காட்டும் வழி இதுவே. 'சத்தியம் வேறு தெய்வம் வேறு இல்லை' என்பதை அவர் திட்டமாகச் சொல்லுகிருர். இறைவன் பொய்யர் மனத்தில் போகாதவன் என்ற உண்மையை அப்பர்,

'பொய்யனைத்தையும் விட்டலர்
புந்தியுள்
மெய்யனை

என்று 7-ஆம் நூற்றாண்டில் அழகு படக் காட்டிச் சென்றார். அப் பெரியவர் வரிசையில் இன்று நம்முடன் வாழ்ந்த அண்ணலார் அதே உண்மையைத் திட்டமாக வலியுறுத்துகிறார்'

'சத்தியத்தைத் தவிர வேறு கடவுள் இல்லை என்பதை, ஒரே மாதிரியான என் அனுபவங்கள் எனக்கு உறுதியாக உணர்த்து கின்றன' (சத்திய. பக். 509) என்று வாழ்வில்—அனுபவத்தில் பெற்ற உண்மையை அப்படியே எடுத்துக் காட்டுகின்றார். அத் துடன் அச் சத்தியமே வடிவான இறைவனைக் காண வேண்டு மாயின் நாம் என்ன செய்ய வேண்டும் என்பதையும் அவ்வாறு செய்யும் செயல் வழியே பெறும் இன்பத்தையும் அண்ணலார் வற் புறுத்துகின்றார். நாம் எளிமை யாக 'எல்லா உயிர்களையும் நம் உயிர் போல்' எண்ணி நோக்கி எதற்கும், எவருக்கும் தீங்கிழைக் காமல் வாழ்வோமானால், உல கெங்கும் நிறைந்து நலம் பரப்பும் அந்த மெய்மை ஒளி—சத்தியப் பெருவிளக்கு—இறைநிலை நம்முன் எதிர்ப்படும் என்பது உறுதி எனக் காட்டுகிறார். அவ்வாறு கண்ட அறிஞர் தம் வரலாறுகளை நாம் நன்கு அறிவோம். இதோ அவர் வாக்கு.

'அகிம்சையைப் பூரணமாக அடைந்தால் மாத்திரமே சத்தி யத்தின் பூரண உருவைக் காண முடியும்' (சத்திய.—பக். 510)

'பிரபஞ்சம் அனைத்தும் நிறைந்து நிற்பதான சத்திய சொரூபத்தை நேருக்கு நேராக ஒருவர் தரிசிக்க வேண்டுமாயின், மிகத் தாழ்ந்த உயிரையும் தன்னைப்போல் நேசிக்கத் தெரிந் தவராக அவர் இருக்கவேண்டும்.' (சத்திய.—பக். 510)

இத்தகைய அண்ணலார் அருள் வாக்கை உணர்ந்தமையாலே தான் அவர் காலத்தில் தமிழ் நாட்டைப் பாட்டால் தட்டி எழுப்பிய பாரதி,

'காக்கைக் குருவி எங்கள் சாதி—நீள்
கடலும் மலையும் எங்கள் கூட்டம்'

என்று எக்களித்துப் பாடினார்.

இத்தகைய அருள் உள்ளம் அனைவருக்கும் உண்டாவதில்லை. ஆயினும் உலக வாழ்வே இந்த அடிப்படையில்தான் அமைந்து கிடக்கிறது. உலகமே ஒன்றை ஒன்று பற்றி வாழ்வதிலேதான் அமைகின்றது. எல்லா உயிர் களையும் இறைவன் தோற்றமாகக் காணில் யாருக்கும் எதற்கும் தீங்கு செய்யத் தோன்றுமா? தோன்றாதே. பிறகு உலகில் 'இன் பமே எந்நாளும் துன்பமில்லை' என்ற நிலை உண்டாகாதா? இங்கே சத்திய சோதனையில் காட்டப் பெற்ற முக்தானந்தர் பாடல்தான் எனக்கும் நினைவுக்கு வருகிறது.

'நித்தம் யான் செய்வினையதனில்
நிமலன் தோற்றம்
காண்பேனேல்
அத்தன் அருளுக்குரியோனாய்
ஆனேன் என்று அகமகிழ்வேன்'
(பக். 87)

என்றபடி நம் செயல் அனைத் திலும் இறைவனைக் கண்டு, அப் படியே எல்லா உயிர்களிடத்தும் இறைநிலையைக் காணில் உலகில் ஒரு கொடுமையும் இல்லாநிலை உண்டாகும். அப்போது தீங்கை நன்மையால் வெல்லலாம்; மறத்தை அறத்தால் வெல்லலாம்; வன்பை அன்பால் வெல்லலாம். இந்த அடிப்படை மெய்மை வாழ்வில் அண்ணல் காந்தி அடி களார் வாழ்ந்தார். 'என்றும்

உலகப் பேரறிஞர்களோடு மகாத்மா

இலண்டன் வட்ட மேசை மாநாட்டில் (1931)



சுவிட்சர்லாந்தில் உரோமன் ரோலந்து அவர்களுடன்

புது தில்லி இராசப் பிரதிநிதி மாளிகையில்
லார்ட் மவுண்ட்பேட்டன், திருமதி. மவுண்ட்
பேட்டன் ஆகியோருடன்.

யாராலும் சாய்க்க முடியாது' என எண்ணிய உலகப் பேரரசாக விளங்கிய ஆங்கில ஆட்சி இந்திய மண்ணையே விட்டு நீங்க, அண்ணலார் அறப்போரே காரணமாக அமைந்ததன்றோ! புறவாழ்வு—அகவாழ்விலும் அதே நிலையில்தான் அண்ணலார் இருந்தார். அவர் உள்ளப் போராட்டங்களிலே மற எண்ணங்களை மாய்த்து, இறுதியில் அற எண்ணமே வெற்றிபெற்ற வகையினையும் வாழ்வினையும் அவர் சத்திய சோதனை நன்கு காட்டுகிறதே!

இத்தகைய அறநெறியில் நாம் வாழவும் நாட்டையும் உலகையும் வாழவிடவும் எண்ணற்ற தியாகங்களைச் செய்ய வேண்டியுள்ளது. உண்மையிலேயே நல்லவர்களுக்குத்தான் நாட்டில் துன்பமும் தொல்லையும் அதிகமாக வரும். இந்த உண்மையை அப்பரடிகள் 'நிறைந்துருகும் அடியாரை நைய வைத்தாய்' என்றும் நம்மாழ்வார்,

'நண்ணாதார் முறுவலிப்ப நல்லுற்றார்
கரைந்தேங்க
எண்ணாருத் துயர்விளைக்கும்
இவைஎன்ன உலகியற்கை'

என்றும் காட்டியுள்ளார். ஆம்! அறவழியே ஆக்கப் பணிபுரியும் நல்லவர்களுக்கு, வழியில் எண்ணற்ற சோதனைகள் உண்டாவது இயற்கையே. அச் சோதனைகளில் மனம் தளராது உண்மையைப் பற்றிச் செயலாற்ற வேண்டுவது மனிதனின் கடமை. இந்த உண்மையை அடிகளார்,

'சத்தியத்தைக் கொண்டு தாம் செய்யும் சோதனைகளில் எவ்வளவு தூரம் போக வேண்டி இருக்கிறது என்பதையும் சுதந்திரத்தை நாடுபவரிடமிருந்து அச் சுதந்திராதேவி என்னென்ன தியாகங்களை எதிர்பார்க்கின்றார் என்பதையும் காணல் வேண்டும்' (சத்திய—பக். 202) எனக் காட்டுவார். இவற்றுக்கெல்லாம் அவர்தம் வாழ்வையே 'சத்திய சோதனை' என்ற தலைப்பிலேதானே தீட்டியுள்ளார். இவ்வாறு அடிகளார் எழுதிக்காட்டி—காட்டியபடியே வாழ்ந்து—தியாகத் தீயில் மூழ்கி எழுந்த வரலாறு நாடறிந்ததன்றோ! இங்கே நான் அதிகமாக அதுபற்றிக் கூற வேண்டுவதில்லையே.

அண்ணலாரின் நூறாவது பிறந்த நாளைக் கொண்டாட நினைக்கின்ற நாம் அந்த அண்ணலாரின் அடி ஒன்றி, அவர் காட்டிய வழியை—சத்திய நெறியைப் பின்பற்ற வேண்டிய கடமையையே ஈண்டு நான் நினைவூட்டவே விரும்புகிறேன். அவர் வழியே ஒழுகுவது—ஒழுக முயல்வதுவே அவருக்கு நாம் செய்யும் தொண்டு. அவர் கண்டது அரசியல் சுதந்திர மட்டுமன்று; அரசியல் சுதந்திரம் தொடங்கி ஆத்ம சுதந்திரம் வரையில் மனிதன் ஒவ்வொரு நிலையிலேயும் பெறும் நல்ல விடுதலையினையே அவரது வாழ்க்கை ஏடு ஒவ்வொன்றும் நமக்கு நினைவூட்டுகின்றது. இன்று நாட்டில் பொருளாதாரம், வாழ்க்கை நிலை போன்ற பலவற்றில் நாம் விடுதலை பெற வேண்டியுள்ளோம்.

'எல்லாரும் எல்லாச் செல்வமும்
எய்தலாலே
இல்லாரும் இல்லை உடையார்
களும் இல்லைமாதோ'

என்ற கம்பன் வாக்கு நாட்டில் மலரும் வரையில் மக்களினம்-உயிரினம் அமைதி கண்டுவிட்டதாகக் கூற முடியாது. எனவே அண்ணல் விழாவினைக் கொண்டாடுகின்ற நாம்—அவர் தம் அடிச்சுவட்டினைப் பின்பற்றி அறவழியில்-உண்மை நெறியில் நம் வாழ்வைச் செலுத்த முயல்வோமாக!

காந்தியடிகள் காண விரும்பிய புதிய சமுதாயம்

திரு. கோ. வேங்கடாசலபதி

காந்தியடிகள் சாதி, இன பேதமற்ற ஒரு புதிய சமுதாய அமைப்பின் சித்திரம் இதுவெனப் பலமுறை பேசியும் எழுதியும் இருக்கிறார். இந்தப் புதிய சமுதாயத்தில் உயர்ந்தவர்கள், தாழ்ந்தவர்கள் என்பது இருக்காது. எல்லாப் பதவிகளுக்கும் சம அந்தஸ்தும் சம ஊதியமும் தான் இருக்கும். தேவைக்கும் அதிகமாக வைத்திருப்பவர்கள் தங்களுடைய வசதிகளைச் சொந்த நலனுக்காக வைத்துக்கொள்ளாமல் தேவைக்கும் குறைவாயுள்ளவர்களுக்குத் தொண்டு செய்வதற்காகத் தங்களிடம் அளிக்கப்பட்டுள்ள அறநிதியாகக் கருதுவார்கள். எந்த ஒரு தொழிலையும் சொந்த முன்னேற்றத்திற்காக அல்லாமல் சமுதாயத்துக்குச் சேவை செய்வதன் மூலம் திறமையை வெளிப்படுத்தவும், தங்களைத் தாங்களே உணரவும் உதவக்கூடிய ஒரு சாதனமாகக் கருதித் தேர்ந்தெடுப்பார்கள்.

இந்தச் சமுதாய அமைப்பில் எல்லாப் பதவிகளுக்கும் ஒரே அந்தஸ்தும் ஊதியமும் இருப்பதால், பரம்பரையாக வந்த திறமைகள் சொந்த லாப ஆசையில் பலியிடப்படமாட்டா. அதற்குப் பதிலாக, அவை சந்ததி சந்ததியாகப் பாதுகாத்து வளர்க்கப்படும். ஜீவனற்ற முறையில் வரம்பில்லாது நடத்தப்படும் போட்டிகளிடத்தில் சமுதாய சேவைக் கோட்பாடு இடம் பெறும். ஒவ்வொருவரும் போதுமான ஓய்வும், வாய்ப்பும், கல்வி கலாச்சார வசதிகளும் பெற்ற உழைப்பாளராக இருப்பார்கள். கைவேலைப்பாடுள்ள குடிசைத் தொழில்களும் சிறுசிறு தீவிரக் கூட்டுறவுப் பண்ணைகளும் நிறைந்த கவர்ச்சிமிக்க ஓர் உலகமாக அது இருக்கும். வகுப்புவாதத்துக்கோ சாதிக்கோ இடமிருக்காது. முடிவாகச் சொல்லப்போனால் அது ஒரு சுதேசி உலகம். அதில் பொருளாதார எல்லைகள் குறுகலாகவும், தனிப்பட்டவர் சுதந்திரத்தின் எல்லைகள் அதிகபட்ச அளவுக்கு விசாலமாகவும் வரையப்பட்டிருக்கும். ஒவ்வொருவரும் தங்களுடைய சுற்றுப்புறச் சூழ்நிலைகளுக்குப் பொறுப்பானவர்களாயிருப்பார்கள்; அதேபோன்று மொத்தமாக

எல்லோரும் சமூகத்துக்குப் பொறுப்பானவர்களாயிருப்பார்கள். 'ஒன்றையொன்று சார்ந்தது, ஒன்றை அளித்தால் தான் மற்றொன்றைப் பெற முடியும்' என்ற கொள்கையின் அடிப்படையில், உரிமைகளும் கடமைகளும் ஒழுங்குபடுத்தப்படும்; ஒரு முழு அங்கத்துக்கும் அதின் பாகத்துக்கும் மோதல் இருக்காது; தேசியம் என்பது குறுகிய, சுயநலமுள்ள, ஆக்கிரமிப்பு மனோபாவமுள்ள தத்துவமாகிவிடும் அபாயம் இருக்காது. சர்வ தேசியமானது வெறும் ஏட்டுச் சுரைக்காயாக இருக்காது.

இந்தப் புதிய சமுதாயத்தில் சிறிதும் பொருளற்றவர்களோ, பிச்சைக்காரர்களோ, இலட்சாதிபதிகளான முதலாளிகளோ அல்லது அரைப்பட்டினி கிடக்கும் தொழிலாளிகளோ இருக்கமாட்டார்கள். போதை அளிக்கும் மதுவோ மருந்தோ இருக்காது. ஆண்களுக்கு அளிக்கப்படும் மரியாதை பெண்களுக்கும் அளிக்கப்படும். ஆண்கள், பெண்கள் ஆகிய இருபாலாரின் கற்பும் பரிசுத்தமும் அக்கறையுடன் பாதுகாக்கப்படும். அங்குத் தீண்டாமை என்பது இருக்காது. எல்லா மதங்களுக்கும் சமத்துவமான மரியாதை அளிக்கப்படும். மக்கள் எல்லோரும் பெருமையுடனும் மகிழ்ச்சியுடனும் தாமாகவே முன்வந்து, உடல் உழைப்பு அளிப்பார்கள்.

இப்புதிய சமுதாயம் லட்சக்கணக்கான கிராம சமுதாயங்களாலான ஒன்றாக இருக்கும். கிராம சமுதாயத்தை, 'கிராம சுயராஜ்யம்' என்று காந்தியடிகள் பலவிடங்களில் குறிப்பிட்டிருக்கிறார். கிராம சுயராஜ்யத்தைப் பற்றிய காந்தியடிகளின் கருத்து என்னவென்றால், அது ஒரு பூரண குடியரசாக, தன்னுடைய ஜீவாதாரமான தேவைகளுக்காக அண்டை அயலார்களை எதிர்பார்க்காத, பூரண குடியரசாக இருக்கும். அதே சமயம் எது எதற்குப் பிறரைச் சார்ந்திருப்பது அவசியமோ அவைகளில் பிறரைச் சார்ந்திருக்கும். ஆகவே, ஒவ்வொரு கிராமமும் தனது உணவுக்குத் தேவையான பயிர்களையும், துணிக்குத் தேவையான பருத்தியையும் விளைவிப்பதில் முக்கிய கவனம் செலுத்தும். கால்நடைகளுக்கான மேய்ச்சல் நிலமும், வயதானவர்கள் ஓய்வு பெறுவதற்கும், குழந்தைகள் விளையாடுவதற்குமான இடமும் அந்தக் கிராமத்தில் இருந்து வரும். ஒரு நாடக அரங்கு, பள்ளிக்கூடம், பொது மண்டபம் ஆகியவைகளையும் கிராமம் பராமரித்து வரும். சுத்தமான தண்ணீர் விநியோக நிலையமும் கிராமத்துக்குச் சொந்தமாக இருக்கும். கல்வி கட்டாயமாக இருக்கும், முடிந்தவரை எல்லா நடவடிக்கைகளுமே கூட்டுறவின் அடிப்படையில் இருக்கும். வயது வந்த கிராம மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் பஞ்சாயத்தினரால் கிராம ஆட்சி நடைபெறும். அந்தந்தக் கிராம எல்லைக்குள் இவர்களுக்குப் போதுமான அதிகாரங்கள் இருக்கும். இந்தப் புதிய பஞ்சாயத்தே கிராம சட்ட சபையாகவும், நீதி மன்றமாகவும், ஆட்சிக் குழுவாகவும் இருந்து வரும். அங்குத் தனிப்பட்டவர் சுதந்திரத்தை அடிப்படையாகக்கொண்ட பரிபூரண ஜனநாயகமாக இருக்கும்.

மேலே குறிப்பிட்டுள்ள புதிய சமுதாயத்தை அமைப்பதற்கான ஒரு திட்டத்தையும் நாட்டு மக்களுக்குக் காந்தியடிகள் கொடுத்திருந்தார். அது ''நிர்மாணத் திட்டம்'' என்ற பெயரால் அழைக்கப்பட்டது. இந்தத் திட்டம் கதர் அபிவிருத்தி, கைத் தொழில் வளர்ச்சி, மத ஒற்றுமை, மாதர் முன்னேற்றம், ஹரிஜன சேவை, சரிசம உடைமை, தாய்மொழி, இந்தியப் பொது மொழி, மது விலக்கு, விவசாயிகள், மாணவர்கள், தொழிலாளர்கள், பசுப் பாது காப்பு முதலிய பல்வேறு அம்சங்களைக்கொண்டது.

இந்த நிர்மாணத் திட்டத்தை நிறைவேற்றி வைப்பதற்குரிய நிர்மான ஊழியர்களுக்கு இருக்க வேண்டிய தகுதிகள் என்ன என்பதைப் பற்றியும் காந்தியடிகள் பலமுறை பேசியும் எழுதியும் இருக்கிறார். கிராம ஊழியர்களிடத்தில் அன்பும், உண்மையும், புலனடக்கமும், பொருள் சேர்க்க வேண்டும் என்ற ஆசை இல்லாமையும், உடல் உழைப்பும், பயமின்மையும், சர்வ மத சமரசமும், எல்லோரையும் சமமாகப் பாவிக்கும் பரந்த உள்ளமும் இருக்க வேண்டும் என்று விரும்பினர்.

அரசியல் விடுதலைக்குக் காரணமாகவிருந்த காங்கிரஸ் மகாசபை கலைக்கப்பட்டு, அரசியல் நோக்கம் எதுவும் இல்லாமல் பொருளாதார, சமுதாய விடுதலைக்காக உழைக்கும் ''மக்கள் ஊழியர் சங்கமாக'' காங்கிரஸ் ஆக வேண்டுமென்றும் இந்தப் புதிய சங்கத்தின் லட்சியம் மேலே குறிப்பிட்டுள்ள புதிய சமுதாயத்தையும், புதிய கிராமங்களையும் நிர்மாணிப்பதாக இருக்க வேண்டுமென்றும் எண்ணியிருந்தார் என்பது காந்தியடிகள் இம்மண்ணுலகிலிருந்து, மறைவதற்கு முன்தினம் அவர் எழுதிவைத்துள்ள இறுதிச் சாசனத்தின் மூலமாகத் தெரிய வருகிறது.

காந்தியடிகளின் அந்திம காலத்திய உள்ளக்கிடக்கை எதுவாக இருந்தது என்பதை நன்கு தெரிந்து, அதைச் செயலாற்றுவதற்கு உறுதி செய்துகொள்வதைவிட காந்தி நூற்றுண்டு விழாவின்போது அதிகமாகச் செய்வதற்கு வேறு என்ன இருக்க முடியும்?

ஏற்றதொரு குடிசைத் தொழில்

குடிசைத் தொழில் ஒன்றும் இல்லாத இந்திய விவசாயி கையறு நிலையில் தவிக்க விடப்படுகிறுன். வானம் பார்த்த பூமியிலிருந்து கிடைக்கும் வருமானம் அவனுக்கு நிறைவாழ்வு அளிக்கமுடியாது. அவனுக்கு ஒரு துணைத் தொழில் தேவை. நூல் நூற்றலே அவனுக்கேற்ற எளிதான, மலிவான, சிறந்த துணைத்தொழில் ஆகும்.

ஆலைப்பெருக்கம் செல்வமும் வேலையும் ஒருசில இடங்களில் குவியவே வழி செய்யும். அதனுல் குழப்பமும் கேடுமே விளையும்.

— காந்தியடிகள்

காந்தீயம் என்னும் மூலதனம்

திரு. நா. பார்த்தசாரதி

ஒரு காலத்தில் புத்தரிடமிருந்தும், மற்றொரு காலத்தில் சங்கரரிடமிருந்தும், இன்னொரு காலத்தில் திருவள்ளுவரிடமிருந்தும், கடந்தகாலத்தில் இந்த நாட்டுக்கு மூலதனமான சிந்தனைகள் கிடைத்ததைப் போல அண்மைக் காலத்தில் வாய்மையான சிந்தனை மூலதனத்தை அளித்தவர் காந்தியடிகள். இந்த நூற்றுண்டைச் சேர்ந்த இந்தியனுக்குக் கிடைத்திருக்கும் மிகப் பெரிய மூலதனம் இது. காந்தீயம் என்னும் இந்த மூலதனம் தனக்குக் கிடைத்திருப்பதை ஒவ்வோர் இந்தியனும் இப்போது உணர்ந்திருப்பதை விட இன்னும் முழு அளவில் உணர வேண்டும். சிந்தனை மூலதனத்தை அளித்துவிட்டுச் செல்லும் தலைவர்கள் தாம் மறைந்த பிறகும் தமது நாட்டிற்கு வழிகாட்டும் ஆற்றல் படைத்தோர் ஆவர். சுதந்திரப் போராட்ட காலத்திற்கு முன்னும், பின்னும், இந்தியாவில் எத்தனையோ பெருந்தலைவர்களும், அறிஞர்களும், மேதைகளும் தோன்றியிருக்கிருர்கள். ஆனல் சில பல அரசியல் மாறுதல்களைத் தவிர அவர்கள் விட்டுச் சென்ற தத்துவங்களோ வேறெவையுமில்லை. காந்தியடிகள் ஒருவரே காந்தீயத்தை வாரிசாக விட்டுச் சென்றவர். மிக உயர்ந்த தத்துவங்களையும் சிந்தனைகளையும் வாரிசாக விட்டுச் செல்கிறவன் அதன் மூலம் தேசத்திற்குச் செய்கிற சேவையை வேறெவரும் வேறெதன் மூலமும் செய்துவிட முடியாது. பழைய தலைமுறைகளின் தத்துவமும், புதிய தலைமுறையின் வேகமும் சந்தித்த இடத்தில் இருசாராருமே ஏமாற்றமின்றி ஒப்புக்கொள்ள ஏற்றதாக இன்றைய இந்தியாவுக்குக் கிடைத்திருக்கும் ஒரே தத்துவம் காந்தீயம். திருவள்ளுவர் எழுதி அளித்தவற்றை நம் கண்முன்னுல் வாழ்ந்து விளக்கியவர் காந்தியடிகள். பரிமேலழகர் உள்ளிட்ட பதின்மரும் திருக்குறளுக்கு எழுதி உரையளித்தார் என்ருல், காந்தியடிகள் திருக்குறளுக்கு வாழ்ந்து உரையளித்தவர். எழுதியளிக்கும் உரைகளைவிட வாழ்ந்தளிக்கும் உரை சிறந்தது.

இருபது ஆண்டுகளுக்கு முன்னுல் சுதந்திரம் பெற்ற சமயத்தில் இந்த நாட்டின் முன் விரிந்திருந்த பிரச்சினைகள் வேறு விதமானவை. இன்று, இருபது ஆண்டுகளுக்குப் பின் நமக்கு முன் விரிந்திருக்கும் பிரச்சினைகள் வேறு விதமானவை. இரண்டிற்குமே காந்தீயம் மருந்தாக முடியுமானுல் அந்த மருந்து எவ்வளவு ஆற்றல் வாய்ந்ததாக இருக்க முடியும். இருபது ஆண்டுகளுக்கு முன்னுலும் அந்த மருந்துக்குத்தான் நோய் தீர்க்கும் ஆற்றல் இருந்தது; இருபது ஆண்டுகளுக்குப் பின்னுல் இன்றும் அந்த மருந்துக்குத்தான் நோய் தீர்க்கும் ஆற்றல் இருக்கிறது.

மற்றைய தலைவர்களைப் போல் அல்லாமல் அரசியல் பிரச்சினைகளுக்கும், சமூகப் பிரச்சினைகளுக்கும் சேர்த்தே மருந்து கண்டவர் காந்தியடிகள். சில தலைவர்களின் தத்துவங்களும் சிந்தனைகளும் அரசியல் பிரச்சினைகளுக்குத்தான் விடிவுகாண முடியும். வேறு சில தலைவர்களின் சித்தாந்தங்கள் சந்தர்ப்பவசமான (Time serving) பிரச்சினைகளுக்குமட்டுமே பரிகாரமாக அமையும். இன்னும் தலைவர்களின் முடிவுகள் ஒரு குறிப்பிட்ட பரிகாரம் காண்பதோடு வேறு பல துறைகளில் இல்லாத புதிய பல பிரச்சினைகளை உண்டாக்கி விட்டுவிடும்.

ஆனுல் காந்தீயமோ இந்தியாவின் அரசியல், சமுதாய, ஆன்மீக, பொருளாதரப் பிரச்சினைகள் அனைத்தையும் அளாவி நிற்கிற பெருந் தத்துவமாக இருக்கிறது. பழமை-புதுமை ஆகிய இரண்டு பெரிய தலைமுறைகளை இணைக்கும் பாலமாகவும் இருக்கிறது. இத்தகைய பெருமை மிகு தத்துவத்தைப் படைக்கும் தலைவர் வேறெவரும் அண்மைக் காலத்தில் வேறெங்கும் தோன்றவே இல்லை. ஐரோப்பாவிலும், பிற மேற்கு நாடுகளிலும் கூட அரசியலுக்கும், ஆன்மீகத்திற்கும் தொடர்பு கண்ட தலைவர்கள் இல்லை. அரசியல் என்ற கடலுக்கு ஆன்மீகம் என்ற கட்டுப்பாடான கரையைக் கண்டவர் காந்தியடிகள்.

**'தற்காப்புக்கு அடுத்தவனைக்
கொல்லும் சக்தி தேவையில்லை.
தானே சாவதற்குரிய மன உறுதி
தான் தேவை.**

என்று அரசியல் புரட்சிக்கும் ஓர் அமைதியான வழியைக் கண்டு பிடித்துக் கொடுத்தவர் காந்தியடிகள். அரசியல் இயக்கத்தில் ஈடுபட்டவனே தவம் செய்கிறவனின் பெருமையையும், திருப்தியையும் அடையச் செய்தவர் இந்தியாவிலேயே காந்தியடிகள் ஒருவர்தான். •

**'உற்ற நோய் நோன்றல் உயிர்க்கு
உறுகண் செய்யாமை
அற்றே தவத்திற் குரு' – என்று**

திருவள்ளுவர் தவத்திற்குக் கூறிய இலக்கணத்தை அகிம்சை, சாத்வீக எதிர்ப்பு, உண்ணு நோன்பு ஆகியவற்றின் மூலமாகக் கடைப்பிடித்து அரசியலுக்கே தவம் செய்யும் பெருமையைத் தேட முயன்ற புதுமைக்காகவே காந்தீயத்தின் பெருமையைக் கொண்டாடலாம்.

காந்தீயத்தில் அமைந்திருக்கும் எளிமை காரணமாகவே அதைத் தவத்தோடு ஒப்பிடுவதும்

இயலும். பெரிய நகரங்களையும், பல இலட்சக்கணக்கான மக்களையுமே அரசியல் மாறுதல்களை விளைவிக்க வல்ல கருவிகளாக மற்ற நாடுகளின் அரசியல் இயக்கத் தலைவர்கள் நினைத்து வந்த வேளையில்,

''கிராமங்கள் அழிந்தால் இந்தியாவே அழிந்துவிடும்''— என்று நாட்டுப் புறத்து மக்களையும் சாதனமாகக் கருதி அழைத்துக் கொண்ட பெருமைக்குரியது காந்தீயம் ஒன்றே. காந்தீயத் தத்துவத்தின் அடிப்படை இந்தியப் பண்பாட்டின் வழிவழி வந்த தன்மைகளைப் பலமாகக் கொண்டிருப்பது என்பதை இப்படிச் சில பிரிவுகளைக் கொண்டே இனங் கண்டுகொள்ள முடியும்.

''மிருக பலத்தினால் எந்த மதத்தையும் காப்பாற்றிவிட முடியாது''-

என்று காந்தீயம் நம்பியது. இவற்றை எல்லாம் சேர்த்துக் கூர்ந்து கவனிக்கும்போது காந்தீயம் என்பது வேறு எந்த அரசியல் தத்துவங்களையும் போல் இரவல் வாங்கப்பட்ட வெளிநாட்டுத் தூண்டுதலை உடையதல்ல. இந்த மண்ணிலேயே பிறந்து, இந்த மண்ணின் அசல் தேசியத் தன்மைகளை உடைய ஒரே தத்துவம் காந்தீயம்தான் என்று தெரிகிறது.

காந்தியடிகளுக்கு முன்பும் இந்த நாட்டிலே சமுதாய, சமய, ஆன்மீக சித்தாந்தங்கள் உண்டு. ஆனால் இந்த நாட்டின் முதல் அரசியல் சித்தாந்தம் காந்தியடிகளால்தான் பிறந்தது. இந்த நாட்டின் கருணை மயமான முதல் அரசியல் மதம் காந்தீயம் என்ற பெயரில்தான் உண்டாயிற்று.

''அன்பும் அகிம்சையும் உள்ளத்தில் ஊறியிருந்தால் அன்றிச் சேவை செய்வதென்பது சாத்தியமில்லை''

என்று இந்திய அரசியல் வாதிக்கு மிக எளிய ஆரம்பப் பாடம் சொல்லிக் கொடுத்ததே காந்தீயம்தான். அஹிம்சையால் காரியங்களைச் சாதித்து வெற்றிபெற முடியுமா என்று பரபரப்பு நிறைந்த இன்றைய அரசியல் வாதிக்கு ஏற்படும் சந்தேகத்துக்கு அன்றே பதில் சொல்வது போல்,

''ஆண்டவனின் அருளும் பலமுமின்றி அகிம்சாவாதியால் எதுவும் செய்ய முடியாது''-

என்று வற்புறுத்திக் கூறியிருக்கிறார். அகிம்சை, ஆண்டவன் அருள், சத்யாக்கிரகம், என்று வரும் சொற்களிலேயே ஓர் இந்தியப் பண்பாட்டின் அடிப்படை பலமாக அமைந்திருப்பதை நாம் கண்டுகொள்ள முடிகிறது. கதர், குடிசைத்தொழில் போன்றவற்றைக்கூட நாட்டின் இருவகை மக்கட் கூட்டத்தையும் இணைக்கும் சாதனமாகவே காந்தியடிகள் தொடங்கினார்.

''கிராமங்களுக்கும் நகரங்களுக்கும் இடையே நல்லுறவை ஏற்படுத்தக் கதர் ஒரு முயற்சி''- என்று கூறியிருப்பதிலிருந்தே இது தெரிகிறது. இந்திய அரசியல் நகர்களையும், நகர்ப்புறங்களையும் வைத்து நிகழ்வதில்லை,, அதில் இந்தியாவின் நாட்டுப் புறங்களுக்கும், கிராமங்களுக்கும், பெரும் பங்கு இருக்கிறது என்பதைப் புரிந்து கொண்ட ஒரே அரசியல்

சித்தாந்தம் காந்தியம்தான். அதனால்தான் காந்தியடிகள், "கிராமங்கள் அழிந்தால் இந்தியாவே அழிந்துவிடும்''- என்றார். வேறு பலருக்கு ஆயுதபலமும், பரபரப்பும் நிறைந்த இன்றைய உலகத்துக்கு 'சத்தியாக்கிரகம்' பொருந்துமா, பொருந்தாதா என்ற சந்தேகம் ஏற்பட்டது. அந்த வீண் சந்தேகத்தை அறவே போக்குகிறவர் போல் காந்தியடிகள், ''சத்தியாக்கிரகம் என்பது எல்லாக் காலத்துக்கும் பொருந்திவரக்கூடிய நியதி''- என்று தெளிவாகச் சொல்லி வைத்திருக்கிறார். ஒவ்வொரு நாட்டுக்கும் உலக அரங்கில் தனக்குச் சொந்தமான 'தேசிய அரசியல் தன்மை' என்று காண்பித்துக்கொள்ள ஓர் சித்தாந்தம் வேண்டும். அப்படியே இந்தியாவும் தன்னுடைய அனைத்துலக அடையாளமாக (International Identity) உலகுக்குக் காண்பிக்க ஏற்றது காந்தியம் ஒன்றே. காந்திக்கு முன்னும் பின்னும் இத்தகைய சமுதாய அரசியல் தத்துவங்களை ஆன்மீக அடிப்படையில் ஆக்கியளித்த தலைவர் வேறெவருமில்லை. எனவே காந்தியத்துவம் ஒன்றே இந்தியாவின் கருணைமயமான அரசியல் மூலதனமாகிறது. சமதர்மம், சமதர்மம் என்று இப்போது யார்யாரோ புதிதாக வந்து இந்தியாவுக்குச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். உலகுக்கே முதன்முதலாகக் கருணை மயமான சமதர்மத்தை அளித்த நாடே இந்தியாதான்.

''பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல்
நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை''

என்று வள்ளுவர் சொல்லாத சமதர்மமா?

''அன்பு என்பது எதையும் பிறரிடமிருந்து கேட்பது இல்லை. கொடுக்கிறது'' என்று காந்தியம் கண்ட சமதர்மத்தைவிடப் பெரிய சமதர்மத்தையா- அந்நிய நாடுகளின் வரட்டுத் தத்துவங்கள் நமக்குச் சொல்லி கொடுத்துவிடப் போகின்றன? 'தற்காப்புக்கு அடுத்தவனைக் கொல்லும் சக்தி தேவையில்லை. தானே சாவதற்குரிய மனஉறுதிதான் தேவை' -என்று காந்தியடிகள் கூறியிருப்பதிலுள்ள தியாகத் தன்மையைவிடவா வெளிநாடுகளின் கிளிப்பிள்ளை சமதர்மம் பெரியது? நமக்கு வேண்டியது காந்திய சமதர்மமே! இந்தியா வறுமைப் படலாம். பல்லாயிரம் கோடி ரூபாய்கள் அந்நிய நாடுகளிடம் கடன் படலாம். அந்நிய நாடுகளால் ஏமாற்றப் படலாம். மோசம் செய்யப்படலாம். ஆனால் எல்லா ஆபத்துக்களிலிருந்தும் பிழைப்பதற்கு இன்னும் ஒரே ஒரு பெரிய மூலதனம் இந்தியாவில் மீதமிருக்கிறது. கருணை மயமான அந்த மூலதனத்தின் பெயர்தான் காந்தியம். அது நம்மிடமிருக்கிறவரை, 'எல்லாக் காலத்துக்கும் பொருந்திவரக்கூடிய நியதி ஒன்று நம்மிடமிருக்கிறது' - என்று தாராளமாக நாம் நம்பலாம்.

வழக்குரைஞர்களின் கடமை என்ன! உண்மையை விளங்கக் கூறி நீதிபதிகளுக்கு உதவுவதே அவர்கள் கடமை. குற்றவாளியைக் குற்றமற்றவன் என்று நிரூபிப்பதன்று.

— காந்தியடிகள்

காந்தியப் பொருளாதாரம்

திரு. வீ. செல்வராஜ்

அருளிலார்க்கு அவ்வுலகமில்லை என்றார் திருவள்ளுவர். அவ்வுலகம் மாத்திரமல்ல. இவ்வுலகமும் இல்லை என்கிறார் காந்தியடிகள். ஏனெனில் அருளுடன் கூடிய உறவில்லாத பொருள் பொய்ப் பொருளே. பொய்ப் பொருள் எவ்வாறு இன்பம் தர இயலும்? அருளுடன் கூடிய பொருளே மெய்ப் பொருள். அதுவே இன்பம் பயக்கும். இதுவே ஆன்மீகப் பொருளாதாரம். இதுவே காந்தியப் பொருளாதாரம்.

மனிதனை வெறும் பொருளாதாரப் பிராணியாக மதிக்கிறது மேற்கத்தியப் பொருளாதாரம். இது நகர நாகரிகச் சிந்தனையுடையது. இதற்கு மாற்று, கிராமிய நாகரிகச் சிந்தனை. மனிதனை சின்மயனாக மதிக்கும் கிழக்கத்திய சிந்தனையை இது குறிக்கும். காந்தியடிகளின் சிந்தனை நாகரிக கிராமிய பாவனையுடையதாகும்.

உணவு, உடை, வீடு, மற்றும் இதர தேவைகள் எல்லாம் மனிதனுக்குத் தேவைப்படுகின்றன. ஆனால் இவற்றுக்காகவே மனிதன் வாழவில்லை. உணவு மனிதனுக்கே தவிர உணவுக்காகவே மனிதன் இல்லை. ஒரு பொருளை உற்பத்தி செய்வதற்கு மனிதன் தேவைப்படுவதைப் போலவே, அப்பொருளைப் பயன்படுத்தவும், மனிதன் தேவை என்ற கண்ணோட்டமுடையது மேற்கத்தியப் பொருளாதாரம். ஒரு பொருளின் உற்பத்திக்கும் நுகர்ச்சிக்கும் மனிதன், தேவை—அந்த அளவுக்கே அவனுக்கு மரியாதை!

இந்தப் பாவனையின் பயனாக, ஒரு பொருளின் உற்பத்திக்கு மனிதன் தேவைப்படாதபோது அவன் உதாசீனப்படுத்தப்படுகிறான். மனித உழைப்புத் தேவைப்படாத அளவிற்கு ஒரு இயந்திரத்தின் உதவி கிடைக்குமானால், மனித உழைப்பு அகற்றப்படுவதை நகர நாகரிகம் பொருட்படுத்துவதில்லை.

இதே போல் ஒரு பொருள் மனிதனுக்கு அத்தியாவசியமாகத் தேவைப்படாதபோதும் அதைக் கவர்ச்சியாக்கியோ, சுவைபடச் செய்தோ, மயக்கியோ, அவனை நிர்ப்பந்தப்படுத்தியோ அவன்

அத்தேவையை ஏற்கும் அளவிற்குத் தேவைப்படுகிறான். அத்தியாவசியப் பொருள்களை விட ஆடம்பரப் பொருள்களின் தேவையை மதிக்கும் அளவிற்கு மனிதன் மயக்கப்படுகிறான். யுத்தக் கருவிகளை வாங்கும் அளவிற்கு மனிதன் நிர்ப்பந்தப்படுத்தப் படுகிறான். காலனி ஆதிக்கம் பிறக்கிறது. யுத்தம் நடைபெறுகிறது. இவை எல்லாமே நகரநாகரிக பாவனையில் பிறந்த பொருளாதார நடவடிக்கைகளே!

விற்காமற் கெட்டுப் போன ஒரு சரக்கைக் கவர்ச்சியான விளம்பரத்தில் மயங்கி அதையும் ஒரு தேவைப் பொருளாக மனிதன் ஏற்கிறான். அல்லது அதன் விலையிலே உள்ள மலிவிலே மயங்கி ஏற்கிறான். புதிய உத்திகளையும் புதிய மோஸ்தர்களையும், புதிய சூழ்நிலைகளையும் சிருஷ்டிப்பதன் மூலம் மனிதனை ஒரு சரக்கு மூட்டையாக்க முயன்றுகொண்டே இருப்பதுதான் நகர நாகரிக பாவனையுள்ள மேற்கத்தியப் பொருளாதாரச் சிந்தனை. அதற்கேற்ப ஆடும் பொம்மையாக மனிதன் அதற்குத் தேவைப் படுகிறான்.

காந்தியப் பொருளாதார சிந்தனையில் மனிதன் ஒரு சுதந்திர புருஷனாக மதிக்கப்படுகிறான். அவன் ஆன்மீகப் பொருளாதார வாழ்வை ஏற்கும் சின்மயன். ஒவ்வொரு மனிதனும் தனித்தனிச் சிறப்பு வாய்ந்த ஆளாக (individual) சிருஷ்டியாகி யிருக்கிறான். இத்தனிச் சிறப்பைத்தான் கீதை சுதர்மம் என்ற அழகான சொல்லிலே வடிவம் தருகிறது. இந்தச் சுதர்மத்திற்குக் காந்தியடிகள் பொருளாதார வடிவம் தந்து, அதற்கு சுதேசி என்று பெயரிட்டிருக்கிறார். சுதர்மத்தின் கடமை உணர்வோடு கூடிய ஆறுதல் தரும் சுதேசியாக வாழுவதை மறந்து, ஆவல் காரணமாகப் பரதேசியாக அலைந்து அல்லற்படவேண்டாம் என்று காந்தியடிகள் எச்சரிக்கிறார்.

என் தாயை நான் நேசிக்கிறேன். அவள் அழகானவளோ, அழகில்லாதவளோ அவளே என் தாய். அவளை என் தாயாகப் பெற்றது என் இஷ்டத்திற்கு உட்பட்டு நடைபெற்றதல்ல. நான் பிறப்பதற்கு முன்னரே என் சக்திக்கு அப்பாற்பட்ட ஒரு சக்தியின் கருணையால் — அவளை நான் தாயாகப் பெற்றிருக்கிறேன். இங்குதான் சுதர்மத்தின் சூக்குமம் பொதிந்திருக்கிறது. இதை நான் எவ்வாறு தவிர்க்க முடியும்? இதைத் தவிர்க்க முனையும் ஒவ்வொரு செயலும் முயற்சியும் என்னை அவதிக்குள்ளாக்கும்; அதிருப்தியைத் தரும்; என் வாழ்க்கையை மயக்கும். இந்த மாயையிலிருந்து விடுபட்டுச் சுதர்மத்தை ஏற்பதுதான் சத்திய வாழ்க்கை.

சுதர்மத்திலிருந்து தோன்றிய சுதேசி தர்மமும் இதையே நமக்குப் போதிக்கிறது. அண்டை வீட்டானை நேசிக்காதவன் அயலானை நேசிப்பது எங்ஙனம்? என் அருகே உள்ள சகோதரன் உற்பத்தி செய்யும் துணியை மதிக்காத ஒருவன் அமெரிக்காவில் தயாராகும் துணியை நாடுவதால் சுதேசித் தருமத்தினின்றும் தவறுகிறான். அவன் அவ்வாறு தவறு செய்யத் தூண்டுவது எது?

கவர்ச்சி ஒரு காரணமாக இருக்கலாம். மலிவு மற்றொரு காரணமாக இருக்கலாம். கவர்ச்சிக்கும் மலிவுக்கும் ஆளாகி, மாயவலைக்குட்பட்ட அந்த மனிதன் இறுதியில் அண்டை வீட்டானை வறுமைக்குள்ளாக்குவதன் மூலம் தன்னைச் சுற்றியுள்ள சமுதாயத்தைப் பாதிப்புக்குள்ளாக்கி, அதனால், மறைமுகமாக உருவாகும் பல்வேறு சிக்கலுக்கு ஆளாகி, அல்லற்படுகிறான். கவர்ச்சியான மலிவான அமெரிக்கத்துணி உடுத்தியதால் அவனுக்கு மீந்திருப்பது அதிருப்தியும் அவதியுமே. இதற்கு மாற்று, சுதேசி தர்மம். இந்தச் சுதேசி தர்மத்தை மையமாகக் கொண்டது கதர் கிராமத் தொழில் இயக்கம்.

சுதர்மத்தோடு பிறக்கும் இந்தச் சுதந்திர மனிதன் அதனின்றும் தவறி அவனது சுதந்திரத்தையும் இழக்கக் காரணமாக இருப்பது மாயை; இதுவே அறியாமை. இந்த அறியாமை, ஆவலாகவும், அதிக உற்பத்தி என்னும் ஆத்திரமாகவும், மலிவான உற்பத்தி என்னும் மயக்கமாகவும், விரைவான உற்பத்தி என்னும் பதைபதைப்பாகவும் அவனை அல்லற்படுத்துகிறது. இறுதியில் இதுவே அவனைக் குவியல் முறை உற்பத்தி என்னும் கூண்டுக்குள்ளே தள்ளி அடிமையாக்கி விடுகிறது.

குவியல் முறைப் பொருளாதாரத்தில் உற்பத்திக்கும் நுகர்ச்சிக்கும் இடையில் மனிதாபிமான உறவு ஏதுமில்லை. ஹோட்டலில் உள்ள, சரக்கு மாஸ்டருக்கும் சாப்பிடுவோருக்கும் என்ன உறவு? மரத்துப்போன இந்த அமைப்பை உருவாக்குவது குவியல் முறை உற்பத்தி. வீட்டுப் பணியாரத்தைப்போல் உற்பத்திக்கும் நுகர்வுக்கும் இடையே அன்பையும் மனிதாபிமானத்தையும் இழையோடச் செய்வது காந்தியடிகளின் பரவல்முறைப் பொருளாதாரம். இதில் எளிமை உண்டு; ஏழ்மை இல்லை. சுபிட்சம் உண்டு; சுரண்டல் இல்லை. சிக்கனம் உண்டு; சிக்கல் இல்லை. தொழில் உறவு உண்டு; தொழில் தகராறு இல்லை. பரிவு உண்டு; பகட்டு இல்லை.

மனிதன் வெறும் பொருளாதாரப் பிராணியல்ல. ஆன்மீகப் பொருளாதாரத்தின் மூலம் அமரர் நிலைக்கு உயர வல்லவன்; அவ்வுலகிற்குரிய அருளை இவ்வுலகிலேயே பெற வல்லவன். இதற்கு வழி காட்டுவது காந்தியப் பொருளாதாரம். இது இவ்வுலகிற்கேதுவான பொருளையும் அருளையும் ஒருங்கே தரவல்லதாகும். காந்தியப் பொருளாதாரம் பற்றி விபரமாகத் தெரிய விரும்புகிறவர்கள் காந்தி நூல் ஐந்தாம் தொகுப்பில் காண்க.

உணவைப் பொறுத்தமட்டில் நாவடக்கம் ஆன்மாவுக்கு நல்லது. தன்னடக்கம் உள்ளவரின் வாழ்க்கைமுறை எப்படி ஒரு சுகபோகியின் வாழ்க்கைக்கு வேறுபட்டிருக்க வேண்டுமோ அப்படியே அவர்களின் உணவும் வேறுபட்டிருக்க வேண்டும்.

— காந்தியடிகள்

மகாத்மா தரிசனம்

"சாவி"

சில ஆண்டுகளுக்குமுன் கவியரசர் ரவீந்தரநாத் தாகூரின் சாந்திநிகேதனைப் பார்த்துவிட்டு வருவதற்காகப் போயிருந்தேன். அங்கே அவருடன் நெருங்கிப் பழகிய சீனப்பேரறிஞர் டான்-யூன்-ஷான்- சீன பவனத்தில் தங்கியிருந்தார். அவரைக் கண்டு உரையாடிய போது காந்திமகாத்மாவுடன் அவர் பழகிய விவரங்களை என்னிடம் விவரித்தார்.

''தாங்கள் எதற்காக, எந்த நோக்கத்துடன் எப்போது இந்தியாவுக்கு வந்தீர்கள்; காந்தியுடனும், தாகூருடனும் எவ்வாறு தொடர்புகொண்டீர்கள்?'' என்று அந்த அறிஞரிடம் நான் கேட்டேன். அவர் கூறினார்:

''முதலில் சாந்திநிகேதனில் குருதேவருடன் சில காலம் தங்கியிருப்பது, சத்தியாகிரக ஆசிரமமான சபர்மதியில் இரண்டு, மூன்று வருடங்கள் தங்கியிருப்பது, முடியுமானால் அப்புறம் எப்போதுமே அவரைப் பின்தொடர்வது.......

இந்திய தேசத்துக்குப் புறப்படுமுன் நான் போட்ட திட்டம் இதுதான்.

ஆனால் நம் திட்டப்படி எல்லாமே நடந்து விடுகிறதா? இரண்டுவருட காலத்துக்குமேல் சாந்திநிகேதனில் தங்கிய பிறகு 1930-ல் குளிர்காலத்தில், திடீரென்று திபேத்துக்குப் போகும்படி நேர்ந்தது. திபேத்திலிருந்து இந்தியாவுக்குத் திரும்பியதும், குடும்பக் காரியமாக நான் உடனே சீனாவுக்குப் புறப்பட்டு வரவேண்டும் என்று அழைப்பு வந்தது. ஆனாலும் காந்திஜியைப் பார்க்காமல் இந்தியாவை விட்டுப் போவதில்லை என்று முடிவு செய்து கொண்டேன்.

திபேத்தில் நான் 13-வது தலாய்லாமாவின் அரண்மனையில் தங்கியிருந்த சமயம், அவரும், அவருடைய மந்திரிகளும் இந்தியாவைப்பற்றி என்னிடம் கேட்ட கேள்விகள் எல்லாவற்றிற்கும்

பதில் கூறினேன். எங்கள் சம்பாஷணைக்கிடையில் நான் கவியரசர் தாகூரும் காந்திஜியும் இந்தியாவில் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள் என்பது பற்றியும் இவ்விருவருடைய ஆத்ம ஒளி இந்தியாவின் எதிர் காலத்தை எவ்வாறு மாற்றியமைக்கப் போகிறது என்பதையும் விளக்கினேன்.

முக்கியமாக காந்திஜியின் சத்தியாக்கிரக இயக்கம்பற்றியும், அவருடைய எளிய வாழ்க்கையைப்பற்றியும் அறிந்துகொள்வதில் தலாய்-லாமா விருப்பம் காட்டினார். அதுமட்டுமல்ல. காந்திஜிக்குத் தம் கையாலேயே ஒரு கடிதம் எழுதிக்கொடுத்து அக்கடிதத்தை நான் இந்தியாவுக்குச் சென்றதும் காந்திஜியிடம் சேர்ப்பிக்க வேண்டுமென்றும் கூறினார். எனவே, இந்தப் பிரதயேகத் தூது, காந்திஜியைச் சந்திக்க வேண்டுமென்ற என் நீண்ட ஆவலை மேலும் தூண்டிவிட்டது.

லாஷாவிலிருந்து சாந்திநிகேதனுக்குத் திரும்பியதும் என் ஆவலைத் தெரியப்படுத்தி, காந்திஜிக்கு ஒரு கடிதம் எழுதினேன். காந்திஜியிடமிருந்து உடனே பதில் கிடைத்து விட்டது. டெல்லியில் எனக்குச் சௌகரியமான ஏதாவது ஒரு தேதியில் சீக்கிரமே சந்திக்கலாம் என்று அக் கடிதத்தில் கண்டிருந்தது.

டில்லிக்குப் போகும் வழியில் கங்கை நதிக்கரையில் உள்ள புத்தகயா, ராஜகிரி, நலாந்தா, சாரநாத், லும்பினி, குஷினகரா, சிரவஸ்தி போன்ற புத்த ஸ்தலங்களைத் தரிசித்துவிட்டுப் போவதென முடிவு செய்தேன். இந்த ஸ்தலங்களையெல்லாம், சுற்றிப் பார்த்துக்கொண்டு நான் டில்லியை அடைவதற்குள், காந்திஜி தம்முடைய சத்தியாகிரக ஆசிரமமான சபர்மதிக்குச் சென்றுவிட்டிருந்தார். நானும் அவரைத் தொடர்ந்து சபர்மதிக்குச் சென்றேன். சபர்மதியில் சில காலம் தங்கியிருக்க வேண்டுமென்பது என்னுடைய முதல் திட்டமாகையாலும், அது நிறைவேறாமல் போய்விட்டதாலும், இப்போது அந்த இடத்தைக் காண்பதற்காவது ஒரு வாய்ப்புக் கிடைத்ததே என்பது பற்றி மிக்க மகிழ்ச்சியடைந்தேன்.

நான் அந்த ஆசிரமத்தை அடைந்தபோது காந்திஜி அவசரமாக ஒரு முக்கிய ஜோலியை முன்னிட்டு பர்தோலிக்குப் போய் விட்டிருந்தார். ஆயினும் திரு. நாரண்தாஸ் கே. காந்தி என்னும் ஆசிரமச் செயலாளர் என்னிடம் மிகவும் அன்புகாட்டி உபசரித்ததுடன் காந்திஜிக்குத் தந்திமூலம் தகவலும் அனுப்பினார். காந்திஜி உடனே என்னைப் பர்தோலிக்கு வரும்படியும், பர்தோலியில் தாம் சில தினங்கள் தங்கியிருக்கக்கூடும் என்றும் பதில் தெரிவித்திருந்தார். நான் பர்தோலிக்குப் புறப்பட்டுச் சென்றேன். சபர்மதியிலிருந்து பர்தோலிக்குப் போக சூரத் ஸ்டேஷனில் ரயில் மாறவேண்டும். சூரத் ஸ்டேஷன் வெயிட்டிங் ரூமில் நான் உட்கார்ந்திருந்த சமயம் எனக்கு ஒரு வேடிக்கையான அனுபவம் கிட்டியது. என்னைப் பின்தொடர்ந்து வந்த சி.ஐ.டி ஒருவர் என் பெயர் நான் எங்கிருந்து வருகிறேன் இந்தியாவில் என்ன வேலை

காந்திஜியைப் பார்க்கச் செல்லும் நோக்கம் முதலிய விவரங்கள் விசாரித்துத் தெரிந்து கொண்டார். நான் உண்மையைச் சொன்னதும் அவர் திருப்தி அடைந்து திரும்பிப் போய் விட்டார். அவர் சென்ற சில நிமிடங்களுக்குள் இன்னெருவர் வந்து என்னைப் பார்த்து வணக்கம் தெரிவித்தபடியே ''மகாத்மா காந்தியைக் காணவா பர்தோலிக்குப் போகிறீர்கள்?'' என்று கேட்டார்.

சற்றும் எதிர்பாராத இந்தக் கேள்வியைப் புதிய மனிதர் என்னைக் கேட்டதும் எனக்கு ஏதோ மாதிரி இருந்தது. ஒரு வேளை இவரும் ஒரு சி.ஐ.டி.யோ என்று எண்ணித் தயங்கினேன்.

ஆயினும் அவர் என் பதிலுக்குக் காத்திராமல் ''நான் கூட மகாத்மாவைக் கண்டு என் வணக்கத்தைச் செலுத்திவிட்டு வரவே பர்தோலி போய்க்கோண்டிருக்கிறேன். அமெரிக்காவில் 10 வருடங்கள் தங்கியிருந்த பிறகு நான் சமீபத்தில் தான் இந்தியாவுக்குத் திரும்பி வந்துள்ளேன்.''

''அங்கே நான் ஒரு மாணவனுகச் சென்றேன். பிறகு வர்த்தகத்துறையில் ஈடுபட்டேன். என் பெயர் துவா. நாம் இரண்டு பேரும் சேர்ந்து மகாத்மாஜியிடம் போகலாம்'' என்று கூறிச் சில அறிமுகக் கடிதங்களையும் என்னிடம் காட்டினுர்.

பர்தோலி ஸ்வராஜ் ஆசிரமத்தில் நாங்கள் தங்குவதற்கு மிகச் சுத்தமான ஒரு அறையை ஏற்பாடு செய்திருந்தார்கள். சில நிமிடங்களுக் கெல்லாம் காந்திஜியின் குமாரர் தேவதாஸ் காந்தி எங்களைக் காண வந்தார். எத்தனை நாட்கள் நாங்கள் தங்க முடியுமென்று எங்கள் இருவரையும் தனித்தனியாக விசாரித்தார்.

பம்பாயில் தமக்கு அவசர வேலையிருப்பதால் காந்திஜியைப் பார்த்ததும் அன்று மாலை ரயிலுக்கோ மறுநாள் காலை ரயிலுக்கோ, தாம் திரும்பச் செல்ல விரும்புவதாக நண்பர் துவா கூறினுர்.

''எனக்கு அவசரமில்லை, காந்திஜிக்கு எப்போது சௌகரியமோ அப்போது பார்க்கிறேன்'' என்றேன் நான்.

''ரொம்ப நல்ல காரியம்!'' என்று கூறிவிட்டுச் சென்ற தேவதாஸ் அரைமணி நேரத்துக்கெல்லாம் திரும்பி வந்து, ''காந்திஜி துவாவை இன்று மாலையும், என்னை நாளைக் காலையும் சந்திக்க விரும்புகிறுர். தங்களுக்கு விருப்பம் இருப்பின் இன்று மாலையும், துவாவுடன், பாபுஜியைப் பார்க்கலாம்'' என்றுர்.

''காந்திஜி விருப்பப்படி மறுநாள் காலையே அவரைச் சந்திக்கிறேன்'' என்று கூறிவிட்டேன் நான்.

''காலையிலும், மாலையிலும் காந்திஜி பிரார்த்தனை செய்கிறுர். தாங்கள் அதில் கலந்து கொள்ள விரும்புகிறீர்களா?''

''நிச்சயமாகக் கலந்து கொள்கிறேன்'' என்றேன்.

மறுநாள் 1931, ஏப்ரல், 7-ஆம் தேதி விடியற்காலை 4 மணிக்குக் குறித்த நேரத்தில் தொடங்கிய பிரார்த்தனை ½ மணி நேரத்தில் முடிந்து விட்டது. பிரார்த்தனை முடிந்ததும் நான் என் அறைக்குத் திரும்பிவிட்டேன். அப்போது இருட்டாக இருந்தாலும் நீண்ட நெடுந்தூரம் பிரயாணம் செய்த களைப்புத் தீராததாலும் மறுபடியும் தூங்கிவிட்டேன். துவா புறப்பட்டுச் சென்றுவிட்டார். காலையில் 10 மணிக்குத் தேவதாஸ் என்னைக் காந்திஜியிடம் அழைத்துச் சென்றார். காந்திஜி ஒரு கட்டிடத்தின் மாடியறை ஒன்றில் தங்கியிருந்தார். அந்த அறை வெகு சுத்தமாகக் காணப்பட்டது. நாற்காலி மேஜை எதுவுமே இல்லை. ஒரு பெரிய பாய். கதர் துணியால் உறையிடப்பட்ட நீளமான துண்டு ஒன்று.

நான் வாயிற்படி அருகே செல்லும்போதே அவர் என்னைக்கண்டு கொண்டு, ''கம் இன், கம் இன்'', என்று அன்புடன் அழைத்தார். நான் மரியாதையோடு மௌனமாகவும் பவ்வியமாகவும் அவரை வணங்கினேன். அவர் தான் பேசத் தொடங்கினார்.

''நான் தங்களை நீண்ட நாட்களாக எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன். முதலில் டில்லியில் அப்புறம் சபர்மதியில்... தங்களுக்கு என்னவோ ஏதோ என்று கவலைப்பட்டுக்கொண்டிருந்தேன். கடைசியாகத் தாங்கள் வந்துவிட்டீர்கள். ..மிக்க மகிழ்ச்சி!'' என்றார்.

''தங்கள் அன்புக்கு மிக்க நன்றி! வரும் வழியில் புத்த ஸ்தலங்களைச் சுற்றிப் பார்த்துக் கொண்டு வந்ததால் ரொம்பவும் கால தாமதமாகிவிட்டது. இதற்காகத் தாங்கள் என்னை மன்னிக்க வேண்டும்.''

''இதற்காகத் தாங்கள் வருத்தப்பட தேவையில்லை. இப்போது சொல்லுங்கள். தாங்கள் எத்தனை நாட்கள் இங்கே தங்கியிருக்க முடியும்?''

''முக்கியமாகத் தங்களுக்கு என் வணக்கத்தைச் செலுத்தி விட்டுப் போகவே வந்தேன். நான் வந்த காரியம் முடிந்து விட்டது. ஆகையால் இன்று மாலையோ, நாளை காலையோ ரயிலைப்பிடித்துப் பம்பாய்க்குப் போகலாம் என எண்ணுகிறேன்.

''அப்புறம்?''

''பம்பாயிலிருந்து சென்னை, சென்னையிலிருந்து கல்கத்தா, கல்கத்தாவிலிருந்து சைனா...''

''இந்த இடங்களுக்கெல்லாம் தாங்கள் ஏற்கனவே டிக்கட்டுகள் 'புக்' செய்து விட்டீர்களா?'' சிரித்துக்கொண்டே வேடிக்கையாகக் கேட்ட காந்திஜி, "தங்களுக்கு அவசரமில்லை, மெதுவாகப் போகலாம்'' என்று தேவதாஸ் கூறினாரே! நல்ல வேளையாக நான் தங்களை நேற்றே பார்க்கவில்லை. பார்த்திருந்தால் இன்று காலையிலே புறப்பட்டு விட்டிருப்பீர்கள்!'' என்றார். நாங்கள் சிரித்து விட்டோம்.

''அப்படியானல் என்னைத் தங்களுடனேயே எப்போதும் தங்கியிருக்கச் சொல்கிறீர்களா?'' என்று கேட்டேன் நான்.

''அவ்வளவு எதிர்பார்க்கவில்லை. நான் இங்கே தங்கியிருக்கும்வரை தாங்களும் இருந்துவிட்டுப் போகலாம் என்றே எண்ணுகிறேன்.''

''இதை எனக்குக் கிடைத்த பெருமையாகவும், சலுகையாகவும் நான் கருதுகிறேன். தங்கள் விருப்பப்படியே நடந்து கொள்கிறேன்.''

''இன்று காலை தங்களை 'வாக்கிங்' அழைத்துச் செல்ல நினைத்தேன். ஆனல் தாங்கள் தூங்கிவிட்டீர்கள் போலிருக்கிறது...''

காந்திஜி அவ்வாறு கூறியதும், வெட்கமாகப் போய்விட்டது. எனக்கு என்ன பதில் சொல்வதென்றே தெரியவில்லை. ''என்னை எழுப்பச் சொல்வதுதானே?'' என்று வருத்தத்துடன் கேட்டேன்.

என் சங்கடத்தைப் புரிந்து கொண்டார் அவர். 'பரவாயில்லை, அதைப்பற்றி வருத்தப்படாதீர்கள். இந்தக் கடும் கோடையில் இத்தனை இடங்களுக்குச் சென்றுவிட்டு வந்த தாங்கள், ஓய்வெடுத்துக் கொண்டது மிகவும் நல்லது. விடியற்காலம் நல்ல இனிய கனவுகள் கண்டிருப்பீர்கள். அதனுல்தான் அந்த நேரத்தில் தங்கள் தூக்கத்தைக் கெடுக்க விரும்பவில்லை!'' என்ருர்.

நாங்கள் மீண்டும் சிரிக்கத் தொடங்கி விட்டோம். பிறகு, திபேத் மாமுனிவர் 13-வது தலாய்லாமா என்னிடம் கொடுத்தனுப்பிய கடிதத்தைக் காந்திஜியிடம் மரியாதையுடன் சமர்ப்பித்து அந்தக் கடிதத்தை நான் எப்படிக் கொண்டுவந்தேன் மதகுரு தலாய்லாமாவிற்கும் எனக்கும் உள்ள தொடர்பு இவைபற்றிய விவரங்களைக் கூறினேன்.

காந்திஜி மிக்க மகிழ்ச்சியுடன் ''தலாய்-லாமா என்ன எழுதியிருக்கிருர்? கடிதம் திபேத் மொழியில் எழுதப்பட்டிருக்கிறதா?'' என்று கேட்டார்.

''திபேத் மொழியில் தான் எழுதப்பட்டிருக்க வேண்டும். ஏனெனில் தலாய்லாமாவிற்கு வேறு எந்த நாட்டு மொழியும் தெரியாது. அவரே கடிதத்தைத் தம் கைப்பட எழுதியிருப்பதால் அது திபேத் மொழியாகத்தான் இருக்கவேண்டும். அந்த மகானுக்கும், தங்களுக்கும் உண்மைத் தூதுவன் என்ற முறையில் நான் கடிதத்திலுள்ள விஷயத்தைப் பார்க்கவில்லை. பார்க்கவும் கூடாது.'' என்றேன்.

''ரொம்பசரி, இப்போது தாங்கள் பார்க்கலாம்'' என்று சிரித்துக்கொண்டே கூறிய காந்திஜி கடிதத்தைப் பிரித்தார். பிரித்தவர், ''தாங்கள் கூறியது சரிதான். திபேத்தில்தான் எழுதப்பட்டிருக்கிறது. தங்களால் எனக்கு மொழி பெயர்த்துச் சொல்ல முடியுமா?'' என்று கேட்டார்.

''எனக்குத் திபேத் மொழி தெரியாது. லாஷாவில்

இந்தியத் தலைவர்களோடு



1. திருமதி அன்னிபெசண்ட். திரு. சீனிவாச சாஸ்திரி ஆகியோருடன்
2. தில்லி உண்ணாவிரதத்தின்போது இந்திரா நேரு (1924)
3. தண்டி உப்புச் சத்தியாக்கிரகம் - திருமதி சரோஜினி நாயுடுவோடு (1930)
4. பம்பாய் காங்கிரசு மாநாட்டில் இராசேந்திரபிரசாத்,மாளவியா ஆகியோருடன்(1934)
5. பெய்ஸ்பூர் காங்கிரசு மாநாட்டில் தலைவர் நேரு, இராசேந்திரபிரசாத் ஆகியோருடன்
6. அரிபுரா காங்கிரசு மாநாட்டில் தலைவர் சுபாஸ் சந்திர போஸ், சர்தார் படேல் ஆகியோருடன் (1938)



7. முதல் சத்தியாக்கிரகி (தனிப்பட்ட முறையில்) விநோபாபாவேவுடன்

8. சாந்தினிகேதனில் கஸ்தூரிபாவுடன் கவிஞர் தாகூரை சந்தித்தபோது (1940)

9. அகில இந்திய காங்கிரசு கமிட்டிக் கூட்டத்தில் ஜவகர்லால் நேரு, கிருபளானி ஆகியோருடன் (8-8-1942)

10. முஸ்லீம் தலைவர் ஜின்னாவுடன் (1944)

11. அகில இந்தியக் காங்கிரசு கமிட்டிக் கூட்டத்தில் ஜவகர்லால் நேரு, சர்தார்படேல் ஆகியோருடன் (பம்பாய்-1946)





இருக்கும்போது திபேத் மொழிகளைத்தான் கற்றுக்கொண்டேன்" ....என்றேன்.

"அப்படியானுல் இந்தக் கடிதத்திலுள்ள விஷயம் எனக்கு எப்போதுமே தெரியப் போவதில்லை" என்று சிரித்தார் காந்திஜி.

கடிதத்தைக் காந்திஜியால் படிக்கமுடியவில்லை என்ற போதிலும், அந்தக் கடிதத்தின் மதிப்பை அவர் முற்றிலும் உணர்ந்திருந்தார்.

''தயவுசெய்து இக் கடிதம் கிடைத்ததாகப் பதில் கடிதம் எழுதிப்போடுவீர்களா?'' என்று கேட்டேன்.

''ஓ... யெஸ்! நிச்சயமாக எழுதுகிறேன். ஆனுல் இக்கடிதத்திற்கு என்னுல் பதில் எழுத முடியாது. ஏனெனில் இதிலுள்ள விஷயம் என்னவென்று எனக்குத் தெரியாது. எனக்கு திபேத் மொழி தெரியாதாகையால் நான் குஜராத் மொழியில் பதில் எழுதிப் போடப்போகிறேன். அப்போதுதான் தலாய்-லாமாவும் என்னைப்போல் பாஷை தெரியாமல் விழித்துத் திண்டாடுவார். நான் இங்கே சிரிப்பதைப் போல அவரும் சிரிப்பார்'' என்ருர்.

''பாஷை தெரியாத போதிலும் நீங்கள் இருவருமே ஒருவரையொருவர் நன்கு அறிந்துகொண்டிருக்கிறீர்கள். புத்தர் பிரான் கூறியதுபோல் ஞானிகள் ஒருவரையொருவர் இதயத்தால் அறிந்து கொள்கிருர்கள். வார்த்தைகளாலல்ல'' என்றேன் நான்.

காந்திஜி என்னைப் புன்முறுவலுடன் நோக்கிஞர். பிறகு நாங்கள் இருவரும் சைனுவைப் பற்றியும் இந்தியாவைப் பற்றியும் பேசினேம். இரு தேசங்களுக்கிடையே உள்ள பழமையான நெருங்கிய நட்பு, ஆத்மீகத் தொடர்பு, கலாச்சார தொடர்பு இவற்றை வலுப்படுத்துவதன் முக்கியம் பற்றிப் பேசினேம். சீன நாகரிகம், சீன கலாச்சாரம், சீன மக்களிடம் தமக்குள்ள அன்பு பற்றி காந்திஜி கூறிஞர். தென் ஆப்பிரிக்காவில் இருந்த போது பல சீன நண்பர்கள் தம்முடைய சத்தியாக்கிரக இயக்கத்தை ஆதரித்ததைப் பற்றியும் கூறிஞர்.

''சீன மக்கள் இந்திய நாட்டின் இரு பெரியார்களை மிகவும் போற்றி நேசிக்கிருர்கள். அந்த இருவர் தாங்களும், குருதேவர் ரவீந்திரநாத தாகூரும் தான். உங்கள் இருவரையும் அவர்கள் போதிசத்துவர்களாக மதித்து வணங்குகிருர்கள். குருதேவர் 1924-ல் சீனுவுக்கு விஜயம் செய்தார். அதேபோலவே தாங்களும் விஜயம் செய்ய வேண்டுமென்று சீன மக்கள் நீண்ட காலமாக ஆசைப்பட்டுக் கொண்டிருக்கிருர்கள்.''

''எனக்கும் அந்த மாபெரும் தேசத்திற்கு வரவேண்டுமென்று ஆசைதான். இந்தியாவுக்குச் சுதந்திரம் கிடைத்தாலன்றி நான் வருவதற்கில்லை. எப்படியும் என் வாழ்நாட்களுக்குள் ஒரு முறை வந்துவிடலாமென்று நம்புகிறேன்'' என்ருர்.

''தாங்கள் நீடூழி வாழ வேண்டும். இந்தியாவுக்குச் சீக்கிரமே சுதந்திரம் கிடைக்கவேண்டும்'' என்றேன்.

அதிக நேரமாகிவிட்டதால் காந்திஜியிடம் விடை பெற்றுக் கொண்டேன்.

அன்றுமாலை நாங்கள் தங்கியிருந்த இடத்திலிருந்து வெகு தூரத்திலுள்ள ஒரு கிராமத்தில் பொதுக்கூட்டத்திற்கு ஏற்பாடு செய்திருந்தார்கள். அந்தக் கூட்டத்துக்கு என்னையும் வரும்படி காந்திஜி சொல்லியனுப்பினார். நானும் காந்திஜியும் பாதி தூரம் நடந்தும், பாதி தூரம் காரிலும் சென்று அந்தக் கிராமத்தை அடைந்தோம்.

போகும் வழியில் காந்திஜி என்னைப்பார்த்து ''தாங்கள் சைவ உணவுக்காரரா?'' என்று விசாரித்தார்.

''இல்லை, இன்னும் சைவ உணவுக்காரனாக வில்லை. ஆனால் புலாலைக் காட்டிலும் சைவ உணவையே நான் விரும்புகிறேன்'' என்றேன்.

''அப்படியானால் தாங்கள் புலால் உண்பதை அடியோடு நிறுத்திவிட்டு, முழு சைவ உணவுக்காரராகவே ஆகி விடுங்களேன்'' என்றார் காந்திஜி.

''சில நாட்களாகவே நான் சைவ உணவு மட்டுமே சாப்பிடுவதற்கு முயன்று வருகிறேன். தாங்கள் இப்போது கூறிய புத்திமதிப்படி இனி, எப்போதுமே சைவ உணவுதான் சாப்பிடப் போகிறேன். தங்களைச் சந்தித்த இந்த முக்கிய நாளின் ஞாபகார்த்தமாக அதை மதிப்பேன்'' என்றேன். காந்திஜி மகிழ்ச்சியுடன் வெற்றி பெறவேண்டுமென வாழ்த்தினார்.

மறுநாள் அவருடைய மௌன தினம். ஆயினும் அவர் தன் தினசரி அலுவல்களைத் தொடர்ந்து செய்து கொண்டுதானிருந்தார். திடீரென்று அவர் சூரத்துக்கு அவசரமாகப் போக வேண்டிய வேலை வந்து விட்டதால் அவர் வேலைகள் தடைப்பட்டன. நானும் அன்றே பர்தோலியை விட்டுப் புறப்படுவதென முடிவு செய்தேன். புறப்படுமுன் காந்திஜியைச் சந்தித்து சீன மாணவர்களுக்கு அவர் கையால் வாழ்த்துச் செய்தி ஒன்று எழுதித்தரும்படி கேட்டுக் கொண்டேன்.

தலாய்-லாமாவுக்குக் கடிதம், சீன மாணவர்களுக்குச் செய்தி இவ் விரண்டையும் சில தினங்களுக்குள் என் கல்கத்தா விலாசத்துக்கு எழுத்து மூலம் அனுப்பி வைப்பதாகத் தெரிவித்தார். என் கல்கத்தா விலாசத்தையும் கேட்டிருந்தார். அத்துடன் அன்று அவர் புறப்படும் ரயிலிலேயே என்னையும் புறப்படச் சொல்லியிருந்தார். சூரத்தில்தான் நான் ரயில் மாறவேண்டும் என்பது அவருக்குத் தெரியும்.

சூரத்தில் அவரிடம் விடை பெற்றுக் கொண்டபோது அவர் என் கைகளைப் பிடித்துக்கொண்டு, புன்முறுவலுடன் தலையசைத்து என்னைப் பார்த்தபோது நான் குழந்தைபோல் அழுதுவிட்டேன்.

பின்னர் நான் பம்பாய், சென்னை முதலிய இடங்களுக்குச் சென்றுவிட்டு 1931, மே 6-ஆம் நாள் கல்கத்தா சென்றதும் காந்திஜி சீன மாணவர்களுக்கு

அனுப்பியிருந்த செய்தியும், தலாய்-லாமாவுக்கு எழுதியிருந்த கடிதமும் எனக்காகக் காத்திருந்தன. தாம் கூறியபடியே அவர் தலாய்-லாமாவுக்குக் குஜராத்தி மொழியிலேயே தம் கைப்பட எழுதியிருந்தார். நான் அந்தக் கடிதத்தைத் தலாய்-லாமாவுக்கு 'போஸ்ட்' செய்து விட்டேன். •

சீன மாணவர்களுக்கு அனுப்பியிருந்த செய்தியைக் காந்திஜி ஆங்கிலத்தில் எழுதியிருந்தார். அந்தச் செய்தியை நானே சீனுவுக்கு நேரில் எடுத்துச் சென்றேன். சீனுவில் உள்ள முக்கிய பத்திரிகைகள் எல்லாவற்றிலும் காந்திஜியின் அந்தச் செய்தி வெளியாயிற்று. அதுவே சீனுவுக்குக் காந்திஜி அனுப்பிய முதல் செய்தி!'

குருதேவர் ரவீந்திரநாத் தாகூர், டான்-யூன்-ஹான் என்னும் சீனப் பேரறிஞரை 1927-ல் மலாயாவில் சந்தித்தார். 'சர்வ தேசக் கூட்டுறவின் மூலமே உலக சமாதானத்தை அடையமுடியும்' என்னும் குருதேவரின் குரல் இவரைக் கவர்ந்தது. 1928-ல் குருதேவரைத் தேடி சாந்தி நிகேதனுக்கு வந்து சேர்ந்தார். அன்று முதல் இன்று வரை சாந்தி நிகேதனிலேயே தங்கியிருக்கிருர். குருதேவரின் விசுவ பாரதியில் 1937-ல் சீனபவனத்தை நிறுவி, அதன் தலைவராக இருந்து இவர் ஆற்றிவரும் பணிகள் ஒப்பற்றவை. சீன இந்திய கலாச்சார உறவை ஏற்படுத்துவதையே தமது வாழ்க்கையின் இலட்சியமாகக் கொண்டவர். பௌத்த மத நூல்களில் ஆழ்ந்த பற்றுக் கொண்டவர்.

தாகூருடன் நெருங்கிய நட்புப் பூண்டு வாழ்ந்த அரும்பெரும் மகான் காந்திஜி, நேருஜி, இவ்விரு தலைவர்களின் அன்புக்கும் நன்மதிப்புக்கும் பாத்திரமானவர்.

ஆன்மிகப் பயிற்சி அளிப்பது எப்படி?

''நூல்களின் மூலம் ஒருவர் ஆன்மிகப் பயிற்சி அளிக்க முடியாது. உடலுக்குப் பயிற்சி உடல் பயிற்சியின் மூலமும், அறிவுக்குப் பயிற்சி அறிவுப் பயிற்சியின் மூலமும் கற்பிக்கப்படவேண்டியிருப்பது போல, ஆன்மாவுக்குப் பயிற்சி ஆன்மப் பயிற்சியின் மூலம்தான் இயலும். அந்த ஆன்மப் பயிற்சி அதைப் புகட்டும் ஆசிரியரின் வாழ்க்கையையும் ஒழுக்கத்தையும் முற்றிலும் பொறுத்ததாகும். ஆசிரியர், மாணவர்கள் இடையில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் தமது நெறி முறையில் யாண்டும் கண்ணும் கருத்துமாய் இருக்கவேண்டும்.

''ஒரு கோழை ஆசிரியர் தம் மாணவர்களை வீரர்கள் ஆக்குவதில் ஒருக்காலும் வெற்றி காணமுடியாது. தன்னடக்கம் அறியாதவர், தன்னடக்கத்தின் மதிப்பைப் பற்றித் தம் மாணவர்களுக்கு ஒருக்காலும் கற்பிக்கமுடியாது. எனவே என்னுடன் வாழும் பிள்ளைகளுக்கும் பெண்களுக்கும் நான் ஒரு நிலையான பாடப் பொருளாக இருக்கவேண்டும் என்பதைக் கண்டேன். இவ்வாறு மாணவர்கள் எனக்கு ஆசிரியராக ஆனார்கள்.

— காந்தியடிகள்

காந்தியடிகளின் தமிழகக் காதல்

"நஜன்"

காந்தியடிகளுக்கும் தமிழ் நாட்டிற்கும் ஆதிமுதற் கொண்டே நெருங்கிய தொடர்பு உண்டு. தமிழர்களையும் தமிழ் நாட்டைப் பற்றியும் அவர் நன்கறிந்திருந்தார். தமிழர்களுடன் நெருங்கி உறவாட அவர்கள் மொழியைக் கற்கவேண்டும் என்று தமிழையும் கற்க முயன்ருர். தமிழ் நாடும் அவர் கிழித்த கோட்டைத் தாண்டியதேயில்லை. காந்தியடிகளை 'அரை நிர்வாண பக்கிரி' யாக்கியதே தமிழகம் தான்.

அமெரிக்கா எழுத்தாளரான ஜான் கந்தர் (Guenther) காந்தியடிகளைக்குறித்து எழுதும் போது "ஒரே மனிதர் மகாத்மாவாகவும் அவதார புருஷராகவும் உலகறிந்த ராஜதந்திரியாகவும் இருப்பது மானிட விதிகளை மீறியது" என்கிருர். அதிமேதைகளான வள்ளுவரையும் ஆழ்வார்களையும் நாயன்மார்களையும் சங்கர, ராமானுஜ, மத்வர்களையும் கண்டிருக்கும் தமிழகத்திற்கோ ஜான் கந்தருக்கு ஏற்பட்டுள்ள ஐயம் ஏற்படக் காரணமில்லை. அந்த மேதைகளிலும் காரியவாதியான காந்தியடிகளை அதிமேதையாக தரிசித்திருக்கிறது தமிழ்நாடு.

காந்தியடிகள் தென்னுப்பிரிக்காவில் இருக்கும்போதே தமிழர்களின் 'குணுதிசயம் தெரிந்து அவர்களைச் சிறப்பாகப் பாராட்டலானுர். கூலியாட்களாகவும் தொழிலாளர்களாகவும் அங்கேயிருந்த தமிழர் பலர் தம்முடன் கலந்து அஹிம்ஸா போராட்டம் நடத்தியதைக் காந்தியடிகள் பெரிதும் பாராட்டியிருக்கிருர். அவர்களைத் தமிழ் வீரர்கள் என்றே மதித்திருக்கிருர். அந்தத் தமிழர்கள் மீதுள்ள அபிமானம் தமிழகக் காதலாகவும், தமிழ் மொழிக் காதலாகவும் கூட மகாத்மாவின் உள்ளத்தில் தழைத்ததுண்டு. இது குறித்துக் காந்தியடிகளே "மாடர்ன் ரிவ்யூ" என்கிற கல்கத்தா ஆங்கில மாத சஞ்சிகையில் பின் வருமாறு எழுதியிருக்கிருர்.

"இந்த டிரான்ஸ்வால் கிளர்ச்சியில் தமிழர்கள் செய்த செயலைப் போல வேறு எந்த இந்தியச் சாதியினரும் செய்ய வில்லை. ஆதலால் வேறு காரணம்

இல்லாவிட்டாலும் அவர்களுக்கு என் திருப்தியை உணர்த்துவதற்காகவாவது நான் அவர்களுடைய புத்தகங்களை ஊன்றிப்படிக்க வேண்டும். சென்ற மாதம் அவர்கள் மொழியான தமிழைக் கவனமாகப் படித்து வந்தேன். அதைப் படிக்கப் படிக்க அம்மொழியிலுள்ள அழகு அதிகமாகத் தெரிகிறது. நேர்த்தியான மொழி இது; அமுதம் போன்றது. தமிழர்களிடையே முன்னாளிலும் இந்நாளிலும் பல ஞானிகளும் அறிவாளிகளும் இருந்திருக்கிறார்கள். இந்தியா முழுவதும் ஒருமைப்பாட்டை அடைய வேண்டுமானால் சென்னை ராஜ்யத்திற்கு வெளியில் உள்ளவர்களும் தமிழ் மொழியைக் கற்க வேண்டும்.''

காந்தியடிகள் தென்னாப்பிரிக்காவில் இருந்தபோதே தமிழ் கற்க ஆரம்பித்தார். 'தமிழ் சுயபாட போதினி' என்ற நூலைக் கொண்டே அவர் தமிழ் கற்க ஆரம்பித்துவிட்டதுடன், தன் முயற்சியில் வெற்றியும் கண்டார். இதைக் குறித்து அவர் தன் சுயசரிதையில் எழுதியிருப்பதாவது:

''இந்தத் தமிழும், தெலுங்கும் தெரியாதது கையொடிந்தது போல இருக்கிறது. எந்தத் தமிழரைக் கண்டாலும் தென்னாப்பிரிக்காவில் தன்னலமின்றி உடல், பொருள், ஆவி எல்லாவற்றையும் அர்ப்பணித்துச் சேவை செய்த தமிழர்களின் நினைவே எனக்கு வருகிறது. தென்னாப்பிரிக்கத் தமிழர்கள் பலருக்கு எழுதப் படிக்கத் தெரியாது. எனக்கு அவர்கள் மொழி தெரியாதது அவர்களுடன் உறவாடவும், அவர்கள் அன்பைப் பெறவும் தடையாக இருந்ததில்லை. இருந்தாலும் நான் தமிழ் கற்றால்தான் அவர்களுடன் இதய பூர்வமாகக் கலந்து உறவாட முடியும்.''

தென்னாப்பிரிக்காவிலுள்ள டால்ஸ்டாய் பண்ணையில் தமிழர் குழந்தைகளுக்குத் தமிழ் அரிச்சுவடியைக் காந்தியடிகள் கற்பித்து வந்திருக்கிறார். ''தென்னாப்பிரிக்காவில் நான் சேவை செய்ய நேரிட்டது என் பாக்கியம் அதனால்தான் தமிழர்கள்மீது எனக்கு விசேட உரிமை ஏற்பட்டுள்ளது'' என்று காந்தியடிகள் குறிப்பிட்டிருக்கிறார்.

தென்னாப்பிரிக்காவில் காந்தியடிகள் நடத்திய சத்யாக்கிரகப் போராட்டத்தைப் பாராட்டிக் காந்தியடிகளுக்குச் சென்னை விக்டோரியா பப்ளிக் ஹாலில் 1916ல் ஒரு பாராட்டுரை வழங்கப்பட்டது அப்போது அவர் பதிலளித்ததாவது:

''என்னை இவ்வளவு பாராட்டியிருக்கிறார்கள். இதில் பத்தில் ஒரு பங்குக்கு வேண்டுமானால் நான் அருகதையாகலாம். ஆனால் போராட்டத்தில் உயிர் நீத்த தியாகிகளுக்குத்தான் பெரும்பாலான பாராட்டுக்கள் உரித்தானவை. நாகப்பன், நாராயணசாமி இருவரும் இளைஞர்கள். எல்லாக் கஷ்டங்களையும், எல்லா அவமரியாதைகளையும் இவர்கள் தாய் நாட்டுக்காக ஏற்றவர்கள். பதினாறு வயதான வள்ளியம்மையின் சேவையை எந்த முறையில் நீங்கள் பாராட்டப்போகிறீர்கள்? மாரிட்ஸ்பர்க் சிறையிலிருந்து அவள் வெளிவந்தபோது

எலும்பும் தோலுமாக இருந்தாள். அவள் சிறையில் பெற்ற நோய் காரணமாக ஒரே மாதத்தில் இறந்து விட்டாள்.

''நான் அவர்களைக் கவர்ந்து இப் போராட்டத்தில் ஈடுபடுத்தினேன் என்று நீங்கள் பாராட்டுகிறீர்கள். ஆனால் சூது வாது தெரியாத இவர்கள் என் மீது நம்பிக்கை கொண்டு தன்னலமின்றிக் கஷ்டங்களைப் பொருட்படுத்தாமல் சேவை செய்ய முன் வந்தது எனக்குத் தன்னம்பிக்கையை அளித்தது. எனக்கு நீங்கள் அளிக்கும் இந்தக் கௌரவத்தை எல்லாம் அந்தத் தியாகிகளுக்கே அளிக்கவேண்டும்.''

தமிழ் நாட்டில் திருவள்ளுவர், மெய்ப்பொருள் நாயனர் போன்ற மகான்கள் சத்தியத்தையும் அஹிம்ஸையையும் வாழ்க்கையில் கடைப்பிடித்துக் காட்டியிருந்தபோதிலும் அந்நிய ஆட்சியை எதிர்த்துக் காந்தியடிகள் நடத்திய அஹிம்ஸா தர்மப் போராட்டம் உலகத்திலேயே முற்றிலும் புதிது. இதற்குத் தமிழகம் என்றுமே மனப்பூர்வமான ஆதரவை அளித்து வந்தது.

காந்திஜி சந்தித்த முதல் தமிழர்

காந்திஜி பாரிஸ்டர் வேலை தொடங்கி நான்கு மாதம் இருக்கும். அப்போதுதான் முதன் முதலில் ஒரு தமிழரை அவர் தென்னுப்பிரிக்காவில் சந்தித்தார். ஒருநாள் இத்தமிழர் கந்தல் உடையுடனும் மண்டைக் காயத்திலிருந்து வழியும் ரத்தத்துடனும் முன்பற்களில் இரண்டை இழந்து மிகப் பரிதாபமாகக் காட்சி அளித்தார்.

விசாரித்ததில் அவருடைய எஜமானன் அவரைத் தண்டித்ததின் விளைவு அது என்று தெரிந்தது. பாலசுந்தரம் என்ற அத் தமிழர் டர்பனில் ஒரு வெள்ளைக்கார முதலாளியிடம் சேவை செய்பவர். கூலிக்கு வேலை செய்பவர்களை இவ்வளவு மிருகத் தன்மையுடன் முதலாளி நடத்தியிருப்பது காந்திஜிக்கு வேதனையை அளித்தது.

காந்திஜி முதல்வேலையாக ஒரு டாக்டரை வரவழைத்து அவரிடமிருந்து ஒரு சர்டிபிகேட் பெற்றுக் காயமடைந்தவரை ஒரு மாஜிஸ்திரேட்டிடம் அழைத்துச் சென்ருர். அடித்த முதலாளிக்குத் தண்டனை வாங்கிக் கொடுப்பது அவர் நோக்கம் அல்ல. அம்முதலாளியிடமிருந்து பாலசுந்தரத்தை விடுவித்து வேறு ஒருவரிடம் அவரை வேலைக்கு வைத்தார் காந்திஜி. இது முதற்கொண்டு கூலி வேலைக்காகத் தென்னுப்பிரிக்காவுக்கு வந்துள்ள அவ்வளவு பேர்களின் அன்பையும் காந்திஜி கவர்ந்து விட்டார்.

உண்ணுவிரதம் இருப்பதும் அதுபோன்ற கட்டுத் திட்டங்களும் புலனடக்கத்திற்கான சாதனங்களில் ஒன்ருகும். அதுவே அனைத்தும் அன்று. உடலோடு சேர்ந்து உள்ளமும் பட்டினி விரதத்தை மேற்கொள்ளாவிடில் அது நயவஞ்சகத்திலும் அழிவிலுமே முடியும்.

— காந்தியடிகள்

வீரப் போர்த் தலைவன்

அகிலன்

உலக வ்ரலாறு காணாத பேரதிசயம் ஒன்று இந்த நூற்றாண்டின் முற்பகுதியில் இந்த நாட்டில் நடந்திருக்கிறது. ஆனால் அந்த அதிசயத்தை இன்றைக்கு வயது முதிர்ந்தவர்களில் பலர் மறந்துவிட்டனர்; வளர்ந்து வரும் இளைய தலைமுறையினருக்கோ அதுபற்றி ஏதுந் தெரியாது; தெரிவிக்கப்படவில்லை. இந்த நிலையில் இவர்கள் இரு சாராருக்கும் இடையில் இருக்கும் நான் அந்த அதிசயத்தைப்பற்றி என்னுடைய நினைவில் இருப்பவற்றை இங்குக் கூறவிரும்புகிறேன்.

இந்த அதிசயம் காந்தியடிகள் இந்த மண்ணில் வாழ்ந்தது, இந்த நாட்டில் நிலவிய பலவகைத் தீமைகளோடும் பலமுனைகளில் போராடியது, வெற்றிபெற்றது, மாண்டு மடிந்தது போன்ற பல நிகழ்ச்சிகளைக் கொண்டதாகும்.

பல நூற்றாண்டுகளின் அறியாமை இந்த நாட்டில் வேரூன்றிச் செழித்து வளர்ந்திருந்தன. ஏட்டில் எழுதப்பெற்ற, உயர்ந்த வாழ்க்கைத் தத்துவங்களுக்கும் அன்றாட நடைமுறைகளுக்கும் அறவே தொடர்பில்லை.

வெள்ளைக்காரர்களிடமிருந்து நாட்டை விடுவிக்க முயன்றவர் பலர் காந்தியடிகளுக்கு முன்பே தோன்றியிருந்தனர். ஆனால் அவர்களில் யாரும் நம்முடைய பழைய சமுதாய அமைப்பே நம்மில் பெரும்பாலோரை அடிமைகளாக நடத்திவந்ததைக் கவனிக்கவும் இல்லை; பொருட்படுத்தவுமில்லை. பிறப்பின் மூலமே இங்கு ஆண்டானும் அடிமையும் உருவாகிக் கொண்டிருந்த்னர்.

வாழத் தெரியாத மந்தைகளின் கூட்டமாக, சமயம், சாதி, மொழி, இனம் என்ற எத்தனையோ பிரிவுகளைக் கூர்மையான கத்திகளாய்த் தீட்டிக் கொண்டு தங்களுக்குள்ளேயே போராடிக் கொண்டிருந்தது இந்தியரின் கூட்டம். இந்த மந்தைகளின் கூட்டத்தை இப்படியே தங்களுக்குள் மோதவிட்டுக் கொண்டு, இவற்றின் முதுகிலேறிச் சவாரி செய்தபடியே இரத்தத்தை உறிஞ்சிக் கொண்டிருந்தான் ஆங்கிலேயன்.

சூரியன் மறையாத சாம்ராஜ்யம் அப்போது ஆங்கிலேயனின்

சாம்ராஜ்யம். உலகத்திலேயே முதன்மையானதாக, வலிமை மிகுந்ததாக, வளர்ந்துவிட்ட சாம்ராஜ்யம். உலகத்தின் பெருஞ் செல்வம் இங்கிலாந்தில் தொழிற் புரட்சியை மலரச்செய்து கொண்டிருந்தது; ஆயுத பலத்துக்கு ஓர் அளவே இல்லை; மனித பலத்தைப் பற்றியோ அவன் கவலைப் பட்டதே இல்லை. நம்முடைய நாட்டுப் போர் வீரர்களும், உலகில் அவனுடைய காலனி ஆதிக்கத்துக்கு உட்பட்டிருந்த பல்வேறு நாடுகளின் போர் வீரர்களும், வெள்ளையனின் வெற்றிக்காகப் போராடவும் உயிர் துறக்கவும் தயாராக இருந்தார்கள்.

காந்தியடிகளின் போராட்டங்கள் எந்தச் சூழ்நிலையில், எப்படிப்பட்ட பகைவனோடு, எப்படிப்பட்ட மக்களை வைத்துக்கொண்டு தொடங்கப் பெற்றன என்பது தெரிய வேண்டுமென்பதற்காகவே இங்கு நான் இவற்றைக் குறிப்பிட்டிருக்கிறேன். ஆனால், காந்தியடிகள் தமது இறுதிப் போரில் வெற்றி பெற்று விட்டார் என்பதுதான் உலக வரலாறு காணாத பேரதிசயம். ஆயுத பலமில்லாமல், பண வலிமையில்லாமல், தங்களுக்குள் அடித்துக் கொண்டு வாழ்ந்த ஒழுங்கும் கட்டுப்பாடும் பயிற்சியுமில்லாத ஒரு கூட்டத்தை வைத்துக் கொண்டு அவர் வெற்றி பெற்றிருக்கிறார்.

இது இந்த நாட்டு இளைஞர்கள் ஆராய்ந்து பார்க்க வேண்டிய ஒன்றாகும். அதிலும் குறிப்பாக நாட்டின் எதிர்கால அரசியல் சமுதாயப் பொருளாதாரத் துறையில் ஆர்வங்கொண்டவர்கள் செய்ய வேண்டிய செயலாகும். ஏன், தலைவனாக வரத் துடிக்கும் இளைஞன் ஒவ்வொருவனும் கட்டாயமாகக் காந்தியடிகளின் தலைமைப் பண்புகளையும் வெற்றியின் இரகசியங்களையும் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியம்.

தீபாவளிக் காலங்களில் வானத்தில் பூத்துச் சொரிந்து உடனே மடியும் மத்தாப்பூக்களைப் போன்ற தலைவர்கள் உலகில் ஏராளம், ஏராளம்! காற்றில் பெரிதாகப் பறக்கும் பலூன்களைப் போல் சில ஆண்டுகள் வெளிச்சம் போட்டுவிட்டு, ஊசி முனையின் ஒரே ஒரு குத்தைத் தாங்காமல் உயிர் விடும் சொத்தைகளைப் போன்றவர்களுக்கும் எங்கும் பஞ்சமில்லை. மக்களை வழி நடத்துவதற்குப் பதிலாக, அவர்கள் போகும் போக்கில் அவர்களுக்குப் பின்னே செல்பவர்களும் பலப் பலர்.

இந்த நிலையில் நாடு தனது ஒவ்வொரு வீட்டுக்கும், ஒவ்வொரு தெருவுக்கும் ஊருக்கும் கூட ஒரு தலைவனை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது. அடுத்த நாளையோ, அடுத்த ஐந்து ஆண்டுகளையோ மட்டும் பார்க்கும் குறுகிய பார்வையில்லாத, அடுத்த தலைமுறையைப் பார்க்கும் அளவுக்குத் தொலை நோக்குள்ள இளைஞர்களே இப்போது நாட்டின் அவசரத் தேவை.

ஆகவே, இந்தத் தலைமுறையினரைச் சுதந்திர மண்ணில் பிறக்கச் செய்த அந்த உத்தமத் தலைவனுடைய சில பண்புகளை மட்டும் இங்கே எடுத்துக் கூறுகிறேன். நான் அடிமை மண்ணில்

பிறந்து சுதந்திர மண்ணில் வாழ்பவன். அடிமை மண்ணில் நான் இளைஞனாக வளர்ந்தபோது, இன்று சுதந்திர மண்ணில் பிறந்து வளர்ந்துள்ள இளைஞர்களுக்குள்ள வாய்ப்புக்களில் நூற்றில் ஒரு பங்குகூட இல்லை. ஆனால் வாய்ப்புக்கள் இருந்தும்கூட பல புதிய இடர்ப்பாடுகளும், துன்பங்களும் அவர்களுக்கு இருக்கத்தான் செய்கின்றன. அவற்றோடு போராடி வெற்றி பெறுவதற்கு அவர்கள் தாம் முன்வர வேண்டும். அதனால் தான் நான் அவர்களுக்காக இதை எழுதுகிறேன்.

1. தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ளுதல்

ஒவ்வொரு நாளும் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் எழுந்து, குறிப்பிட்ட வேலைகளைச் செய்து பழக்கப்படுத்திக் கொள்ளுதல். பொறிகளையும், புலன்களையும், மனத்தையும் குறிப்பிட்ட நோக்கத்தின் வழியே செலுத்தப் பழகுதல். இராணுவம் இன்று உலகத்தின் வலிமையான சாதனமாய்க் கருதப்படுவதற்குக் காரணம், அதனிடமுள்ள ஆயுதம் மட்டிலுமல்ல. அதைச் சேர்ந்த ஒவ்வொருவருக்கும் தம்மைக் கட்டுப்படுத்திப் பயன்படுத்தும் பயிற்சி ஒவ்வொரு நாளும் அளிக்கப் பெறுகிறது. காந்தியடிகள் இராணுவ வீரரைவிடத் தம்மை மிகுதியாய்க் கட்டுப்படுத்திப் பழக்கிக் கொண்டவர். ஆகவே தான் இராணுவ பலத்தையே அவரால் ஆயுதங்களின்றி வெற்றி கொள்ள முடிந்தது. தம்மைக் கட்டுப்படுத்திக்கொள்ள முடியாதவர்களால், நெடுநாள் பிறரைக் கட்டுப்படுத்தி வழி நடத்திச் செல்ல முடியாது.

2. தீமைகளை இனம் கண்டு கொண்டு அவற்றின் காரணங்களை ஆராயும் திறன்

நாட்டின் அடிமைத்தனத்துக்கு வெள்ளைக்காரனை மட்டும் அவர் குறை கூறிக் கொண்டிருக்கவில்லை. நம்மவர்களின் ஒற்றுமையின்மை, உயர்வு தாழ்வு மனப்பான்மை, பெண்ணடிமைத்தனம், பொருளாதார – சமுதாயச் சுரண்டல் முறை, அறியாமை, இவ்வளவும் இன்னும் பலவும் காரணங்கள் என்பதை அவர் ஆராய்ந்தறிந்தார். ஆராய்ந்தறிவது என்பது படிப்பதன் வாயிலாகவும், நேரில் சென்று பார்ப்பதன் வாயிலாகவும், கேட்பதன் மூலமாகவும், தாமே அநுபவிப்பதன் காரணமாகவும் நடைமுறை உண்மைகளைக் கண்டுபிடித்து, அவற்றின் காரணங்களைச் சிந்தித்துப் பார்ப்பதாகும். இவ்வளவு வழிகளின் வாயிலாகவும் அவர் தீமைகளை இனம் கண்டு ஆராய்ந்திருக்கிறார் என்பது அவர் வரலாற்றைப் படிப்போருக்குத் தெரியும்.

3. அஞ்சாமையும் முந்திச் செயல் புரிதலும்

எந்த நாட்டிலும் எந்தத் தலைவனும் தீமைகளோடு போரிடத் துணிவதன் மூலமே உருவாகிறான். கோழைகள் தலைவர்களாக நிலைத்ததில்லை. தீமைகளை ஆராய்ந்தால் போதாது; எடுத்துத் துணிவோடு பிறரிடம் கூறினால் போதாது; அதை எதிர்ப்பதற்கு முறையான செயல் திட்டங்களை வகுத்துக்கொண்டு களத்தில் இறங்கிவிட வேண்டும். காந்தியடிகள் இளம் வக்கீலாகத் தென்னாப்பிரிக்காவுக்குச் செல்வதற்கு முன்பாகவே அங்கு நிற ஒதுக்கல்,

இன வெறி, கறுப்பு நிறத் தவருக்கு அவமானம் இவ்வளவும் இருக்கத்தான் செய்தன. ஆனல் காந்தியடிகளே அவற்றைத் தீமைகள் எனக் கண்டார்! முந்திக் கொண்டு போராடச் செயலில் இறங்கிவிட்டார். போராட்டத்தில் இறங்கிய போதே அவரை ஒரே குண்டினுல் வெள்ளையன் எவனுவது தீர்த்துக் கட்டியிருக்க முடியும். இது அவருக்குத் தெரியாததல்ல. சாவைத் துச்சமென மதிக்கும் மனத் திண்மை தலைவனுக்கு வேண்டும். இதற்கு மற்ருெரு உதாரணம் கோடீஸ்வரக் குடும்பத்தில் பிறந்தும், அஞ்சாமல் தலைமைச் செயல் புரிந்து நிற வெறிக்குப் பலியான ராபர்ட் கென்னடியாகும். காந்தியடிகளுக்கு முன்பு பல தலைவர்கள் இருந்தும், காந்தியடிகளைப் பின்பற்றியதற்கான காரணத்தை நேரு கூறுகிருர்: ''அச்சம் என்ற உணர்ச்சியே அவரிடம் இல்லை; மற்றவர்கள், பேச்சில் காலம் கழித்து வந்தபோது, இவர் ஒருவரே முந்திக்கொண்டு செயல் புரிவதில் முனைந்து நின்ருர்; ஆகவே என்னைக் கவர்ந்த தலைவர் ஆனுர் இவர்.''

4. நடத்திய போர்களில் சில

தென்னுப்பிரிக்காவில் முதல் வகுப்பு டிக்கட் வாங்கி ரெயிலில் பிரயாணம் செய்தபோது, வெள்ளையனுல் வெளியில் இழுத்து விடப்பட்டு இரவெல்லாம் குளிரில் நடுங்கியபோதும், மூன்ரும் வகுப்பில் பிரயாணம் செய்ய மறுத்து அவதிப்பட்டார். மனிதனுக்கு மனிதன் சமம் என்ற தனி மனிதக் கொள்கைப் போர் அது. அடுத்து, கோச் வண்டி ஓட்டும் முரடனிடம் அடிபட்டார் வண்டியில் சமமான இடம் கேட்டு. தன்னுரிமைப் போராட்டத்தில், யாருமே துணையில்லாதபோது, போராடிப் பயிற்சி பெற்ற அவர் பிறகு அங்கேயே தமது நாட்டினருக்காகப் போராடினுர். இந்தியாவுக்கு வந்து வெள்ளைத் தோட்ட முதலாளிகளுடன் தோட்டத் தொழிலாளர்களுக்காகப் போராடினுர். சத்தியாக்கிரகமென்று நாடு தழுவிய போராட்டம் நடத்தினுர். மேலை நாடுகளின் மில் துணிகளைத் தெருக்களில் போட்டுக் கொளுத்தச்சொல்லி, கைராட்டினத்தால் லட்சோப லட்சம் இந்திய மக்களுக்குத் தொழில் தந்து, அவர்களை உழைக்கப் பழக்கினுர். தீண்டாமையை ஒழிக்க எல்லோரையும் நாடெங்கும் ஒரே பந்தியில் அமர்த்தி உண்ணச் செய்தார். கோவில்களில் நுழைய முடியாத தீண்டாமைக்கெதிரே முரசு கொட்டினுர். கள்ளுக் கடைகளுக்கு எதிரான போராட்டங்களைத் தூண்டினுர். சட்டத்தை மீறி உப்பெடுக்கச் செய்தார். 1942ல், ''வெள்ளையனே வெளியேறு'' என்று அவனுக்குக் கட்டளையிட்டு, 'செய்து முடி, அல்லது செத்து மடி' என்று இந்தியர்களின் கூட்டத்தைச் செயலில் தள்ளிவிட்டார்.—கடைசியாக சமய வேற்றுமை வெறியை ஒழிப்பதற்கான போராட்டத்தில் அவர் தம்முயிரையே பலி கொடுத்துக் கொண்டார். — இளைஞர்கள் தீமைக்கு எதிராக அவர் நடத்திய போர்களை முறைப்படுத்தி வகைப்படுத்தி ஆராய்வது அவசியம்; இன்றைய தீமைகளுக்கெதிரே அவர்களால் அறத்தின் வலிமையால் போராடி வெற்றி கொள்ள முடியும்.

5. வெற்றியின் இரகசியம்

தலைவர்களாக வந்து, கடைசி வரையிலும் தலைவர்களாகவே வாழ்ந்து மடிபவர்கள் காந்தியடிகளிடம் தெரிந்து கொள்ள வேண்டிய வெற்றியின் இரகசியம் ஒன்றிருக்கிறது. அதுதான் கலப்படமற்ற தன்னலமின்மை. அவர் மக்களிடமிருந்து தமக்காகத் தேடிக்கொண்டது அற்பத்திலும் அற்பமானது. கொடுத்ததோ, கோடி கோடியாய்க் கொட்டிக் கொடுத்தாலும் வாங்கமுடியாத தேசம். பண மூட்டைகள் அவர் காலடியில் காத்துக் கிடந்தார்கள்; பதவிகள் மண்டியிட்டு அவரிடம் தண்டனிட்டன. எளிய உணவு, எளிய உடை, எளிய குடிசை வாழ்வு தேடிக் கொண்டார். வெள்ளையருடன் சமமாய் முதல் வகுப்பில் பிரயாணம் செய்யப் போராடியவர் மூன்றாம் வகுப்பிலேயே நாடெங்கும் பிரயாணம் செய்தார். அவருடைய மரணத்தின் பின் விட்டுச்சென்ற அவருக்குச் சொந்தமான சொத்துக்கள்:— இரண்டு ஜோடிச் செருப்புகள், மூக்குக் கண்ணாடி, இடுப்பில் அவர் தொங்கவிட்டிருந்த கடிகாரம் ஒன்று, சோற்றுக் கிண்ணமும் சிறு கரண்டியும், கீதை நூல், மூன்று குரங்குகள் சேர்ந்த பொம்மை ஒன்று—இவ்வளவே! காந்தியடிகளுக்கு இந்த நாட்டில் சொந்த வீடில்லை; சொந்தக் காரில்லை; சொந்தமாகச் சொத்து எதுவுமே இல்லை.

ஆனால், நாம் இன்று அநுபவிக்கும் சொத்துக்கள் யாவுமே அந்த 'ஆண்டிப் பண்டாரம்' நமக்குத் தேடித் தந்தவை. அந்த 'அரை நிர்வாணப் பக்கிரி' நம்முடைய நாட்டையும் அதன் எல்லாச் செல்வங்களையும் நமக்கு அளித்து விட்டு, நம்மை இந்த நாட்டு மன்னர்களாக்கி விட்டுப் போய் விட்டார். மன்னர்களாகிய நாம் மீண்டும் அடிமைகளாக, மந்தைக் கூட்டங்களாக மாறிவிடக் கூடாது.

இளைஞனுக்கோர் அழைப்பு

நமது குடியாட்சி முறைக்கு இப்போது நாடெங்கிலும் அறைகூவல்கள் எழுந்து கொண்டிருக்கின்றன. காரணம், அடிப்படைக் காரணம், இரண்டே இரண்டு. நாம் பரம்பரையாகப் பட்டினி கிடந்த நாட்டைச் சேர்ந்தவர்கள். ஆகவே அந்தப் பயம் இன்னும் பலரிடம் போகவில்லை. வழிகாட்ட வேண்டியவர்களே பத்துத் தலைமுறைக்குப் பணம் சேர்க்கப் பல குறுக்கு வழிகளையெல்லாம் பின்பற்றுகிறார்கள். பொய், வஞ்சனை, சூது, ஏமாற்று இப்படியெல்லாம் பொருள் தேட ஆசைப் படுகிறார்கள். அடுத்தது பதவிப் போட்டி. இதுவும் பணம் தேடும் பொருட்டே அளவுக்கு மீறிய வெறியாக நாடெங்கும் தலைவிரித்தாடுகிறது. அடிமையிலே உழன்ற பரம்பரையாகையால் அதிலும் இப்போது ஒரு பேராசை. ஒன்றுக்கொன்று தொடர்புள்ள இந்த இரு பேராசைகளுமே குடியாட்சிக்கு வெடிவைக்கக் கூடியவை. மீண்டும் தடியாட்சி நாட்டில் வரக் கூடிய ஆபத்துக்கு வழி கோலுபவை. சிறந்த எதிர் காலத்தை நோக்க உரிமையுள்ள இளைஞர்களுக்கு இது எச்சரிக்கையாகும்.

காந்தியடிகளின் திருவடிகளைக் கஸ்தூரிபா நீராட்டுதல்.

ஆகவே, நாட்டின் அச்சம், ஊழல், பேராசை, சோம்பல், அமைதியின்மை இவற்றுக்கெதிரே ஆக்கவழியில் போராட இளைஞர் கூட்டம் இப்போது தேவை. காந்தியடிகள் ஆதி மனிதர். நாம் ஆதி மனிதராக வேண்டுமென்பதில்லை. அவரைப் போல் துறவியாக மாறிப் பாடுபட வேண்டுமென்பதில்லை. குறைந்த பட்ச அளவுக்கு மனிதர்களாகவாவது அவர் வழியில் நடந்து, நாட்டை நடத்திச் செல்ல முன்வரவேண்டும்.

தன்னைக் கட்டுப் படுத்திக் கொள்ளுதல், தீமைகளை ஆராய்தல், அஞ்சாமையும் முந்திச் செயல் புரியும் தன்மையும், செயல் திறன், வெற்றியில் நம்பிக்கை — முதலிய பண்புகளைக் கொண்ட சிறந்த இலட்சியத் தலைவர்களை உருவாக்க வல்லவர் காந்தியடிகள். — தயவு செய்து தமிழ் நாட்டு இளைஞர்களில் சிலராவது அவரைப் பின்பற்ற முயல்வார்களாக. ஏனென்றால் நாடு எதிர்காலத்தில் அத்தகையோரைத்தான் பின் பற்றத் துடித்துக் கொண்டிருக்கிறது.

உள்ளம் கவர்ந்த நூல்

''இரயில் பயணத்தின் போது, இரஸ்கின் எழுதிய'' ''முழுநலம் (''Unto this last) என்னும் நூலைப் படிக்கும் வாய்ப்புப் பெற்றேன். அதை விரித்த பின்னர் கீழே வைக்கவே முடியவில்லை. இந்த அரிய நூலில் என் உறுதிப்பாடுகளில் சில மிளிர்வதைக் கண்டேன். எனவே தான், அது என்னை அவ்வளவு கவர்ந்தது. மனித உள்ளத்தில் பொதிந்து கிடக்கும் நல்லவற்றை வெளிப்படச் செய்பவனே கவிஞனாவான். கவிஞர்கள், எல்லோரையும் ஒரே மாதிரி உணர்ச்சியுறச் செய்வதில்லை. ஏனெனில் எல்லோரும் ஒரே மாதிரியான நிலையில் வளர்ந்திருப்பதில் 'முழுநலம்' என்னும் நூலில் இருந்து நான் அறிந்து கொண்டவை:

(1) தனிப்பட்ட ஒருவரின் நலம் எல்லோருடைய நலத்திலும் அடங்கியுள்ளது.

(2) வழக்குரைஞன் வேலைக்கும் நாவிதன் வேலைக்கும் மதிப்பு ஒன்றே. ஏனெனில் ஒவ்வொருவருக்கும் தங்கள் உழைப்பின் மூலம் வாழ்க்கையை நடத்தச் சம்பாதிக்கச் சம உரிமை உண்டு.

(3) உழைப்பை அடிப்படையாகக் கொண்ட வாழ்க்கையே வாழத் தகுந்த வாழ்க்கையாகும்.

இவற்றில் முதலில் உள்ளது எனக்கு முன்னரே தெரியும். இரண்டாவதை மங்கலாக உணர்ந்திருந்தேன். மூன்றாவது எனக்குப் புலப்படவே இல்லை. இரண்டாவதும் மூன்றாவதும் முதலாவதில் அடங்கியுள்ளது என்பதை ''முழுநலம்'' என்ற நூல் எனக்கு உணர்த்தியது. இக்கொள்கைகளை வாழ்க்கையில் கடைப்பிடிக்கும் உறுதியோடு துயில் எழுந்தேன்.

சுவைமிக்க சில நிகழ்ச்சிகள்

டாக்டர் தா. ஏ. ஞானமூர்த்தி, எம் ஏ., பிஎச் டி.



பிறரால் செய்தற்கரிய செயல்களைச் செய்கின்றவர்கள் பெரியவர்களாவர் என்று திருவள்ளுவர் பெரியவர்களுடைய இயல்பைத் நன்கு ஆராய்ந்து தெளிந்து கூறுகிறார். ''செயற்கரிய செய்வார் பெரியர்'' என்பன வள்ளுவப் பெருந்தகையின் பொன்மொழிகள். காந்தியடிகள் இவ்வுலகில் வாழ்ந்த காலத்தில் அவராற்றிய செயல் ஒவ்வொன்றும் அருஞ் செயலேயாம். அவர் செய்த சிறு செயல்களும் பெருஞ்செயல்களும் அவர்தம் அருந்திறனையும் பெருந் தகைப் பண்பையும் என்றும் மாறா வாழ்க்கை உண்மைகளையும் இன்றும் உணர்த்திக் கொண்டிருக் கின்றன; என்றும் [illegible] உணர்த்தி நிற்கும் என்பது ஒருதலை.

அவருடைய வாழ்க்கை வரலாறு ஒரு சாத்துவீகப் புரட்சியின் வரலாறு எனலாம். அருட்புரட்சியென்றும் அதனைக் கூறலாம். அவரியற்றிய ஒவ்வொரு செயலும் அவர்தம் ஆழ்ந்த அருளுள்ளத்தினின்றும் முகிழ்த்து வெளிப்பட்டதாம். தென்னாப்பிரிக்காவில் வெள்ளையர்களால் விலங்கினங்களுக்கு ஒப்பாக நடத்தப் பெற்ற இந்தியர்களின் உரிமைக்காக அவர் போராடிய பெருவீரம், இந்தியாவிற்குத் திரும்பி நாட்டின் விடுதலைப் போராட்டத்தில் இறங்கி அவர் ஆங்கில ஏகாதிபத்தியத்தை எதிர்த்து நிகழ்த்திய ஒத்துழையாமை இயக்கம், உப்புச் சத்தியாகிரகம், ''வெள்ளையனே வெளியேறு'' என்ற இயக்கம் இன்னோரன்னவை நம் நாட்டையும் உலகத்தையும் உய்விக்க ஆற்றிய அருஞ்செயல்கள் அல்லவோ?

அவர் வாழ்க்கையில் நிகழ்ந்த நிகழ்ச்சிகள் ஒவ்வொன்றும் மக்களை நன்னெறிப்படுத்தி உயர்த்தும் தன்மையதாம். கணக்கிலடங்கா அந்நிகழ்ச்சிகள் அவருடைய அருள் உள்ளத்தின் தன்னொழுக்கத் தன்மையையும் பெரும் துன்ப நிலையிலும் சிறிதும் மனம் கலங்காத உறுதிப்பாட்டையும் சிரித்தே இடுக்கண்களைப் போக்கவல்ல பான்மையையும் கூர்த்த மதிநுட்பத்தையும் ஆகிய இன்னோரன்ன அரிய இயல்புகளை உணர்த்துகின்றன. அவற்றுள் சிலவற்றை ஈண்டுக் காண்போம்.

1937-ஆம் ஆண்டு மார்ச்சு திங்களில் காந்தியடிகள் அனைத்திந்திய இந்தி சாகித்திய மாநாட்டில் கலந்துகொள்ளச் சென்னைக்கு இரயிலில் பயணம் செய்து கொண்டிருந்தார். ஒவ்வொரு இரயில்

திருவடிகளைக் கஸ்தூரிபா நீராட்டுதல்

நிலையத்திலும் அவரைக் காண்பதற்காகப் பெருங் கூட்டம் கூடியிருந்தது. காங்கிரசு மாநில ஆட்சிப் பதவியை ஏற்கலாமா? வேண்டாமா? என்பது பற்றித் திட்டமான முடிவு எடுக்கப்படாத காலம் அது. இரயில் காலையில் பெசவாடா நிலையத்தை அடைந்தது. காந்தியடிகளைக் காணப் பெருந்திரளான கூட்டம் அங்குக் கூடியிருந்தது. ஒரு பத்திரிக்கை நிருபர் அக்கூட்டத்திற்குள் புகுந்து தட்டுத் தடுமாறிக் காந்தியடிகளை அடைந்து, ''காங்கிரசு பதவி ஏற்குமா?'' என்று திடீரென ஒரு வினாவைக் கேட்டார். காந்தியடிகள் அதற்கு எப்படிப் பதிலுரைத்தாலும் உடனே அது உலகெங்கும் விளம்பரமாகிவிடும். அவர் பேசாமல் அமைதியாக இருந்தாலும் அதற்கும் ஒரு பொருள் கற்பித்து விளம்பரப்படுத்திவிடுவார்கள். காந்தியடிகள் மிகத்திறமையாக அந்நிலையைச் சமாளித்தார்.

''ஏன், தாங்கள் அமைச்சராக விரும்புகிறீர்களா?'' என்று காந்தியடிகள் நிருபரைத் திருப்பிக் கேட்டார். அங்குக் கூடியிருந்த கூட்டத்தினர் அனைவரும் 'கொல்' என்று சிரித்தார்கள். பாவம், நிருபர் இருந்த இடம் தெரியாமல் மறைந்து போனார்.

1931-ஆம் ஆண்டு வட்டமேசை மாநாட்டிற்காகக் காந்தியடிகள் இலண்டனுக்குச் சென்றிருந்தார். சர்ச்சில் சொற்படி ''அரை நிருவாணப் பக்கிரி'' ஆங்கிலப் பேரரசுடன் உரை நிகழ்த்தச் சென்றிருப்பதைக் குறித்து உலகம் முழுவதும் ஒரு பரபரப்பு ஏற்பட்டிருந்தது. மாநாட்டுத் தொடக்க நாளில் காந்தியடிகள் நிகழ்த்த வேண்டிய சொற்பொழிவு பற்றி அப்பொழுது அவரோடு சென்றிருந்த ஜி. டி. பிர்லா அவர்கள் அவருக்கு நினைவுபடுத்தி அச்சொற்பொழிவுக்குரிய கருத்துக்களை நன்கு சிந்தித்து வைத்துக் கொள்ளுமாறு கூறினார்.

ஆம்; உண்மைதான், நான் பேசவேண்டியதைப் பற்றிச் சிந்திக்க வேண்டும்'' என்றார் காந்தியடிகள். அடுத்த நாளும் பிர்லா அவர்கள் அவருக்கு அதுபற்றி நினைவுபடுத்தினார். ''ஐயோ! அதற்கு நேரமே கிடைக்கவில்லையே? கடவுள் சமயத்தில் எனக்குச் சிறந்த கருத்துக்களைக் கொடுத்து உதவுவார். சாதாரண மனிதர்களைப் போலவே நாம் பேசவேண்டும். யான் தனித்திறமை வாய்ந்தவனாகத் தோற்றமளிக்க விரும்பவில்லை. நான் சொல்லவேண்டியதெல்லாம் என்ன? 'எங்களுக்கு விடுதலை வேண்டும்' என்று சொல்ல வேண்டும்' அவ்வளவுதானே?'' என்றார் மகாத்மா.

முன்பாகவே சிறிதும் சிந்திக்காமல் காந்தியடிகள் முதல் வட்டமேசை மாநாட்டிற்குச் சென்றார். அவர் தம் சொற்பொழிவை யாற்றினார். சொற்கள் மணிமணியாக அவர்தம் திருவாயினின்றும் உதிர்ந்தன. அனைவரும் மிக்க கவனத்தோடு அவர் சொற்பொழிவைச் செவிமடுத்தார்கள். அவருடைய சொற்பொழிவே அன்றைய சொற்பொழிவுகள் அனைத்திலும் மிகச் சிறந்ததெனப் போற்றப்பட்டது.

மகாத்மா அவர்கள் மகன்வாடியில் தங்கியிருந்தபோது சுமார்

பதினேழு வயதுள்ள ஓர் இளைஞன் அவரிடம் வந்தான். நரம்புக்கோளாறினால் அவனுடைய கைகால்கள் நடுங்கிக் கொண்டேயிருந்தன. உதவி செய்பவர் தனக்கு யாரும் இல்லாமையால் காந்தியடிகளோடு தங்கியிருக்க அனுமதிக்குமாறு அவன் வேண்டினான். உடற்குறையுள்ள ஒவ்வொருவரையும் ஏற்றுக்கொள்ளத் தமக்கு வசதியில்லையென்று காந்தியடிகள் மறுத்தார். ஆனால் அவ்விளைஞன் அறையின் கதவிடத்தே அசையாமல் காலையிலிருந்து மாலை வரை அமர்ந்திருந்தான். இச்செய்தியைக் காந்தியடிகளிடம் சென்று சிலர் கூறி அச் சிறுவனை எப்படியாவது அவ்விடத்தை விட்டு அகற்றவேண்டும் என்று வற்புறுத்திக் கூறினார்கள். அதற்குக் காந்தியடிகள் "நானே அவனை இவ்விடத்தினின்றும் துரத்திவிட்டால் ஆதரவுக்கு வேறு யாரிடத்தில் அவன் செல்லுவான்? அவன் இங்கேயே இருக்கட்டும்" என்று சொல்லி அவனுக்குச் சமையலறையில் காய்கறிகளைச் சுத்தப்படுத்துவதும் வெட்டுவதும் ஆகிய வேலையைத் தந்தார். நாளடைவில் அவன் கைகால் நடுக்கம் தீர்ந்துவிட்டது. பிறகு அவன் தொழில் நுட்பக் கல்விக்காக அமெரிக்காவிற்கு அனுப்பப்பட்டான்.

இதனின்றும் மகாத்மா அவர்களின் பெருங்கருணைத்திறன் புலனாகிறது.

மகன்வாடி என்ற இடத்தில் அனைத்திந்திய கிராமக் கைத்தொழில் சங்கம் நிறுவப்பட்ட போது அங்குக் காந்தியடிகள் சென்று சில நாட்கள் தங்கியிருந்தார். அங்குத் தங்கியிருந்த உறுப்பினர்களே அன்றாட வேலைகளைச் செய்ய வேண்டும். அவ்வேலைகளில் ஒன்று பெரிய சமையல் பாத்திரங்களைத் தேய்த்துச் சுத்தமாக்குவதாகும். ஒருநாள் பாத்திரங்களைத் தேய்க்கும் வேலை காந்தியடிகளுக்கு உரியதாயிற்று. எனவே அவரும் அவரோடு ஜே. சி. குமரப்பா அவர்களும் பாத்திரங்களைத் தேய்க்கும்வேலையில் ஈடுபட்டிருந்தனர். திடீரென அன்னை கஸ்தூரிபாய் அங்கு வந்தார். மகாத்மா அவர்கள் பாத்திரந் தேய்க்கின்ற காட்சியை அவ்வம்மையாரால் பொறுக்க முடியவில்லை. அவர்கள் காந்தியடிகளை நோக்கி, "உங்களைப் போன்ற பெரியவர்கள் செய்ய வேண்டிய வேலையன்று இது; தாங்கள் இன்னும் முக்கியமான வேலைகளில் ஈடுபடவேண்டும்" என்று குஜராத்தி மொழியில் சீற்றத்தோடு உரைத்து அவ்விடத்தை விட்டு உடனே அவரை எழுந்து போகும்படியாகச் சொன்னார்கள். அதோடு காந்தியடிகள் கையிலிருந்த பாத்திரத்தை வெடுக்கெனப் பிடுங்கிக் கொண்டார்கள். காந்தியடிகளுக்கு ஒன்றும் புரியவில்லை. அவருடைய ஒரு கையில் தேங்காய் நார் இருந்தது. மற்றொரு கை முழுதும் பாத்திரந் தேய்த்ததினால் அழுக்குப் படிந்திருந்தது. அதோடு அவர் வாய் திறந்து சிரித்த வணணம் குமரப்பாவை நோக்கி, "குமரப்பா! உனக்கொரு கவலையுமில்லை; உம்மை இவ்வாறு ஆட்டிப் படைக்க உனக்கு மனைவியில்லை. குடும்ப அமைதிக்காக நான் என் மனைவிக்கு அடங்கி நடக்க வேண்டும்; நான் செல்கிறேன்; என்னைப்

பொறுத்தருள்க; எனக்குப் பதிலாக என் மனைவி உம்மோடிருந்து பாத்திரத்தைத் தேய்ப்பார்'' என்று கூறி அகன்றார்.

சபர்மதி ஆசிரமத்தில் தங்கியிருந்தபோது இராஜ்கோட் சத்தியாகிரகத்தில் கலந்துகொள்ளத் தாம் செல்லவேண்டுமென்று அன்னை கஸ்தூரிபா அவர்கள் வற்புறுத்தினார்கள். அப்போது தம் மகன் ராம்தாஸ் காந்தி அவர்களின் சிறுமகன் அவ்வம்மையார் பாதுகாப்பில் இருந்தான். அச் சிறுவன் ஒரு விநாடி கூடத் தன் பாட்டி கஸ்தூரிபாவைப் பிரியமாட்டான். ஆனால் கஸ்தூரிபா இராஜ்கோட்டிற்குச் சென்ற பிறகு அச் சிறுவன் 'பாட்டி', 'பாட்டி' யென்று ஓயாமல் அழுதான். இது காந்தியடிகளுக்குத் தெரிவிக்கப்பட்டது. அவர் அச் சிறுவனைத் தம்மிடம் அழைத்து வருமாறு கூறினார். பாட்டியிடம் விரைவில் அவனைச் சேர்ப்பிப்பதாக அவர் அச்சிறுவனிடம் கூறினார். அதைக் கேட்டதும் சிறுவன் புன்னகை பூத்தான். காந்தியடிகள் அவனிடம் ஒரு மணி மாலையைக் கொடுத்துத் துருவனின் கதையைக் கூறினார். துருவன் எப்படி அமர்ந்து கடவுள் தியானத்தில் ஆழ்ந்தானோ அதே போல அச்சிறுவனும் பாட்டியை நினைந்து தியானத்தில் ஆழ்ந்தால் பாட்டியை அடையலாம் என்று கூறினார். பாட்டியென்று சொல்லும் ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு மணியைத் தள்ளவேண்டும் என்றார் அவ்வாறே அச் சிறுவன் கண்ணை மூடி மணிகளை எண்ணிய வண்ணம் பாட்டி தியானத்தில் ஆழ்ந்தான். அங்கிருந்தவர்களுக்கு அமைதி ஏற்பட்டு அவரவர்கள் தம் வேலையைக் கவனித்தனர். அப்போதைக்கப்போது அச்சிறுவன் கண்ணைத் திறந்து ''இன்னும் பாட்டி வரவில்லையே'' என்பான். காந்தியடிகள் ''உன்னுடைய தியானம் இப்படித் தடைப்படக்கூடாது; தடைப்பட்டால் பாட்டி வரமாட்டாள்'' என்று சற்றுக் கடுமையாகக் கூறினார். இவ்வேடிக்கை இரண்டு மூன்று நாட்கள் நடந்தது. இதற்குள் சிறுவனைக் காந்தியடிகள் டேராடூனிலிருந்த அவன் தாயிடம் அனுப்ப ஏற்பாடு செய்தார்.

தம் பெருந்துன்ப நிலையிலும் காந்தியடிகள் மன அமைதியை இழப்பதில்லை. அப்போதும் வழக்கம்போல் நகைச்சுவையுடன் உரையாடுவார். அவர் தம் அருமை மனைவி கஸ்தூரிபாவின் உயிர் உடலைவிட்டு நீங்கியது; ஈமச் சடங்கு நடைபெறும் நாள்; வந்த பலரோடும் காந்தியடிகள் சிரித்து நகைச்சுவையோடு உரையாடிக் கொண்டிருந்தார். அறுபத்திரண்டு ஆண்டுகள் அவருடன் வாழ்ந்த அம்மையார் அவரை விட்டுப் பிரிந்தார். இது அவருக்கு ஆற்றொணாப் பெருந்துன்பம் தரத் தக்கதன்றோ? அறுபத்திரண்டு ஆண்டுகள் அவருடன் வாழ்ந்த அருந்துணைவியார் இல்லாமல் தம்மால் வாழ்க்கையைச் சரிவர அமைத்துகொள்ள முடியவில்லை என்று அடிக்கடி காந்தியடிகளே கூறியுள்ளார். எனினும் அவர் தம் ஆழ்ந்த வருத்தத்தை வெளிக் காட்டவில்லை. ஈமஎரியின் முன் னிலையில் அவர் காலையிலிருந்து மாலைவரை உணவும் நீரும் இன்றி அமர்ந்திருந்தார். மாலையில் ஒருவர் அவரை யணுகி எழுந்து

இந்து முஸ்லீம் ஒற்றுமைக்கான அமைதிப்பணி

காலில் செருப்பின்றி நவகாளி வயல் வழியாக அமைதித் தொண்டு (1947)

காந்தியடிகளின் திருவடிகளைக் கஸ்தூரிபா நீராட்டுதல்.

மகாத்மாவின் இறுதிப் பயணம்

புது தில்லி, பிர்லா மாளிகையில் மகாத்மாவின் இறுதிப் பயணக் காட்சி

மகாத்மாவின் இம் மண்ணுலகச் சொத்துக்கள்

வந்து உணவு கொண்டு ஓய்வு பெறுமாறு கூறினார். அவர் அதற்குச் சிரித்து ''அறுபத்திரண்டாண்டுகள் கஸ்தூரிபாவுடன் வாழ்ந்த யான் இப்போது ஈமச்சடங்கை அரைகுறையாகவிட்டு வருவேனாயின் அவர் என்னை மன்னிக்கமாட்டார்'' என்றார். ஆழ்ந்த பெருந்துன்பத்திலும் புன்முறுவல் பூக்கும் அவருடைய அருந்திறன் நினைந்து நினைந்து வியத்தற்குரியது.

காந்தியடிகள் வாழ்க்கையில் நிகழ்ந்த இவைபோன்ற எண்ணற்ற பல நிகழ்ச்சிகள் அவர் ஒப்பற்ற ஒரு மகாத்மா என்பதை நன்கு உணர்த்துகின்றன. ஒவ்வொரு நிகழ்ச்சியும் மனிதனை உயர்த்துதற்குரியபெரு நீதியைக் கொண்டதாகும். இந்நிகழ்ச்சிகள் அன்பு, அருள், தியாகம் போன்ற நல்லுணர்வுகளை ஊட்டி உலகத்தை உய்விக்கவல்லவையாம்.

காந்தி ஒரு மிதவாதி

''காந்தி ஒரு மிதவாதியாவார். ஆங்கில அரசையே எதிர்த்து ஒத்துழையாமை இயக்கத்தை நடத்திய காந்தியை மிதவாதி என்று கூறுவது எவ்வாறு பொருந்தும் என நினைக்கலாம். ஒத்துழையாமை இயக்கம் நேரிடை நடவடிக்கையாகிய புரட்சி அன்றோ? ஆனால் அவரை ஒரு புரட்சி வீரராகக் கருதுவது தவறு. அவரைப்போல் தம் அரசியல் எதிரிகளிடம் நியாயத்தை எடுத்துக் கூறி வாதாடியவர்கள் யாரும் இருக்கமாட்டார்கள். நாள்தோறும் அவர் வழிபாட்டுக் கூட்டத்தில் பேசும் உரைகள் புரட்சி உணர்ச்சியையா தூண்டுகின்றன? நம் அறிவுமிக்க சிந்தனையை யன்றோ அவைகள் தூண்டுகின்றன? ''நியாயமாக ஒழுகுங்கள்; தன்னடக்கத்தோடு இருங்கள்; அமைதியை மேற்கொள்ளுங்கள்; எதிரிபால் எப்போதும் அன்போடு இருங்கள்; அவனை வற்புறுத்தி உங்கள் கருத்துக்குக் கொண்டு வருவதற்குப் பதிலாக அன்பும் நியாயமும் நிறைந்த உரையால் அவனை வெற்றி காணுங்கள்''

இவைகளல்லவோ அவர் நாள்தோறும் வழிபாட்டுக் கூட்டத்தில் மக்களுக்கு விடுக்கும் வேண்டுகோள்!''

—ஒரேஸ் அலெக்சாந்தர்

இரஷ்ய ஞானி டால்ஸ்டாய்க்கு
எழுதியது

மறுபிறப்பு நம்பிக்கையால் மன அமைதி

லண்டன்,
அக். 1, 1909

சாத்வீகப் போராட்டம் பற்றி நான் என்ன கருத்துக்கள் கொண்டிருந்தேனோ அவைகளை நீங்கள் ஒரு கடிதத்தில் வெளியிட்டிருப்பது கண்டு மட்டற்ற மகிழ்ச்சி யடைந்தேன். என் கையில் கிடைத்த உங்கள் கடிதம் 'என் வழி சரியானது' என்ற உற்சாகத்தை அளித்துள்ளது. நான் தங்களை நேரில் காண வாய்ப்புக் கிடைத்தால் தங்களிடமிருந்து பல விஷயங்களை நேரில் தெரிந்து கொள்ள வசதியாக இருக்கும்.

அக்கடிதத்தில் நீங்கள் இந்தியாவிலுள்ள அமைதியற்ற நிலைமையையும் அதற்கான காரணங்களையும் படம் பிடித்துக் காட்டியிருப்பது போலக் காட்டியிருக்கிறீர்கள். அக்கடிதத்தின் நகலை உங்களுக்கு அனுப்பியிருக்கிறேன். அது தங்களுடைய சரியான கடிதம்தானு என்று தெரிவிப்பதுடன் அதை அச்சடித்து விநியோகிக்க அனுமதிக்கும்படியும் கேட்டுக்கொள்கிறேன்.

அக்கடிதத்தின் கடைசிப் பத்தியில் மறுபிறப்பு என்பது இல்லாததென்றும் அதில் நம்பிக்கை வைப்பது கூடாதென்றும் கருத்துத் தெரிவித்திருக்கிறீர்கள். மறுபிறப்பு உண்டு என்ற நம்பிக்கையால் அம்மறுபிறப்பிலாவது துன்பமின்றி வாழவேண்டும் என்ற நம்பிக்கை இந்திய மக்களுக்கு இருந்து வருகிறது. சாத்வீகப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள இந்தியர்களுக்கு இந்த நம்பிக்கைதான் ஊன்றுகோலாக இருந்து வருகிறது. ஆகவே தங்கள் கடிதத்தை அச்சடித்து விநியோகிப்பதாக இருந்தாலும் அந்தப் பத்தியை எடுத்து விட அனுமதிக்கும்படிக் கோருகிறேன்.

தங்கள் அன்புள்ள,

மோ. க. காந்தி

தமிழகத்தில் காந்தியடிகள்

(மதுரை காந்தி நினைவு நிலையத்தார்)

காந்தியடிகளின் பொதுவாழ்க்கைக்கு அடிப்படையாக அமைந்தது அவரது தென்னாப்பிரிக்க வாழ்க்கையே ஆகும். அவருக்குப் பயிற்சிக் களனாக அமைந்தது அவ்வாழ்க்கையே என்று கூறினாலும் பொருந்தும்; அதுவே அவரை உருவாக்கியது என்றும் கூறலாம். அத்தகைய தென்னாப்பிரிக்க வாழ்க்கையில் அண்ணலோடு பின்னிப் பிணைந்தவர் தென்னகத்தார் ஆவர்.

காந்தியடிகளின் வரலாற்றையும் இந்தியாவின் விடுதலை வரலாற்றையும் பிரித்தறிய முடியாது. அடிகளின் வரலாறு இந்தியாவின் விடுதலை வரலாறாகவும் விடுதலை வரலாறே அடிகளின் வரலாறாகவும் அமைந்துவிட்டன. அதுபோன்றே, அடிகளின் தென்னாப்பிரிக்க வாழ்வினின்று தமிழர்களைப் பிரிக்கமுடியாது. ஆகவேதான், தென்னக மக்களைப்பற்றிய பசுமையான எண்ணம் என்றென்றைக்கும் அண்ணலிடம் அமைந்திருந்தது.

''தென்னாட்டுக்கு எப்போது சென்றாலும் என் சொந்த இடத்தில் இருப்பதாகவே எனக்குத் தோன்றும். தென்னாப்பிரிக்காவில் நான் செய்த வேலையின் காரணமாக, தமிழர்கள் மீதும் எனக்கு ஏதோ தனி உரிமை உண்டென்று நான் எண்ணுவதுண்டு'' -இவ்வாறு காந்தியடிகள் தனது இரண்டாவது தென்னகப் பயணத்தைப் பற்றிக் குறிப்பிடுகின்றார். ஆகவே தமிழகத்திற்கு வருவதற்கு முன்பே அவர் அதனோடு தொடர்பு கொண்டுவிட்டார் என்று கூறுதல் வேண்டும்.

தென்னாப்பிரிக்காவில், ஒப்பந்தக் கூலியாய் இருந்த பாலசுந்தரம் என்னும் தமிழருடன், காந்திஜிக்கு, அவருக்கு உதவி செய்ததன் மூலமாக, முதன் முதலாகத் தொடர்பு ஏற்பட்டது. பின்னர், அவர் முதன் முறையாகத் தென்னாப்பிரிக்காவிலிருந்து இந்தியாவுக்குத் திரும்புங்கால், கப்பலில் தமிழ் கற்கத் தொடங்கினார்.

காந்திஜி தென்னாப்பிரிக்காவில் நடத்திய இறுதிச் சத்தியாக்கிரகப் போரில், டால்ஸ்டாய் பண்ணையில் இருந்த பெண்களை முதன் முதலில் ஈடுபடும்படிக் கூறினார். உடனே பதினொரு பெண்மணிகள் போராட்டத்தில் ஈடுபட முன் வந்தனர். அப்பெண்மணிகள் அத்தனைபேரும் தமிழ் நாட்டுப்

பெண்மணிகளே என்று அண்ணல் அகமகிழ்ந்து தமது நூலில் குறிப்பிடுகின்றார். இப்போராட்டத்தில் ஈடுபட்டு, சிறைப்பட்டு, அதன் காரணமாக, வள்ளியம்மை என்ற இளந்தமிழ்ப் பெண் உயிர் துறந்தார்; அப்போது அப்பெண் மணிக்கு வயது பதினாறே ஆகி இருந்தது. இத் தமிழ்ப் பெண்ணின் தியாகம் குறித்துக் காந்திஜி வியந்து போற்றுகின்றார்; தென்னாப்பிரிக்காவில் இவருக்கு நினைவுச் சின்னமும் எழுப்பப் பட்டது.

இவ்வாறு, காணாமல் பேணிய நட்பைப் போல, தமிழகத்திற்கு வராமலேயே, காந்திஜிக்குத் தொடர்பு தோன்றி வளர்ந்தது என்று கூறலாம். இத்தொடர்பு பின்னர் ஆல்போல் தழைத்து, அறுகுபோல் வேர்விட்டு நின்றது.

காந்திஜி, 1896-ஆம் ஆண்டு, அக்டோபர்த் திங்களில், முதன் முறையாகத் தமிழகத்திற்கு வந்தார். தென்னாப்பிரிக்காவிலிருந்து முதன் முறையாகத் தாயகம் திரும்பிய சமயம் அது. அப்போதுதான் அவர், தென்னாப்பிரிக்க இந்தியரின் அவல நிலை குறித்து ஒரு துண்டுப் பிரசுரம் எழுதி வெளியிட்டிருந்தார். அதற்குத்தான் 'பச்சைப் பிரசுரம்' என்று பெயர். அதை முன்னிட்டே அவர் சென்னைக்கு வந்தார். 1896, அக்டோபர், 26-ஆம் நாள் மாலை 5-30 மணிக்கு பச்சையப்பன் மண்டபத்தில் ஒரு கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கான அழைப்பில் கஸ்தூரிரங்க அய்யங்கார் உள்ளிட்ட 41பேரின் பெயர் இடப்பட்டிருக்கின்றது. கூட்டத்திற்குத் தலைமை வகித்தவர் திரு.பி. ஆனந்தசார்லு என்பவராவர். இக்கூட்டத்தில் தான் காந்திஜி தென்னாப்பிரிக்க இந்தியரின் இன்னல் குறித்துப் பேசி, 'பச்சைப் பிரசுரத்தை'யும் வழங்கினார். அதே நாளில் அவர் இந்து 'தியாலஜிகல்' உயர்நிலைப் பள்ளியினையும் பார்வையிட்டுப் பார்வையாளர் புத்தகத்திலும் குறிப்பு எழுதியுள்ளார்.

இரண்டாவது முறையாக காந்தியடிகள் 1915-ஆம் ஆண்டு ஏப்ரலில் சென்னைக்கு வந்தார்; அப்போது கஸ்தூரிபாவும் உடன் வந்தார். இருவரும், ஓர் ஏழை விவசாயியைப் போல் துணி மூட்டை ஒன்றுடன் மூன்றும் வகுப்பு ரயில் பெட்டியிலிருந்து இறங்கினர். உடனே, பெருமக்கள் அவர்களுக்கு மாலையிட்டு வரவேற்றனர். ஏப்ரல் 21-ஆம் நாள் விக்டோரியா மன்றத்தில் சென்னை மக்கள் கூடி அவரைச் சிறப்பித்தனர். ஏப்ரல் 27-ஆம் நாள் காந்திஜி ஒய். எம். சி. ஏ. இல் சீனிவாச சாஸ்திரி அவர்களின் தலைமையில் மாணவர்களின் கூட்டத்தில் ஆங்கிலக் கல்விமுறையின் தீமைகளைப் பற்றிப் பேசினார். அப்போது அவர் சுமார் ஒரு மாதம் தென்னகத்தில் சுற்றுப்பயணம் செய்தார். மாயவரத்தில், தீண்டாமையை மிகவும் வன்மையாகக் கண்டித்துப் பேசினார்.

இதே 1915- ஆம் ஆண்டில் தான் காந்திஜி ஆமதாபாத்தில் சத்தியாக்கிரக ஆசிரமத்தைத் தோற்றுவித்தார். இதில் தொடக்கத்தில் ஆண்களும் பெண்களுமாக 25 பேர் இருந்தனர். அவர்களுள் 13 பேர் தமிழர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. அடிகளுக்

கும் தமிழர்களுக்கும் அமைந்த இதயத் தொடர்பினுக்கு இதை விட வேறு சான்று தேவை இல்லை.

1916-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்களில் சென்னைக்கு வந்த காந்திஜி 14-ஆம் தேதியன்று நடந்த மாநாடு ஒன்றில் தன்னுடைய 'சுதேசி' பற்றிய கருத்துக்களை விளக்கிப் பேசினார்.

காந்திஜி சில முக்கிய திட்டங்களையும் கொள்கைகளையும் தமிழகத்தில் இருந்த காலத்தில் தான் முடிவெடுத்து மேற்கொண்டிருக்கின்றார். இவ்வகையில் அவரது 1919-ஆம் ஆண்டு வருகை மிகச் சிறப்பு வாய்ந்தது. ரவுலட் சட்டத்திற்கு அவர் எதிர்ப்புத் தொடங்கிய காலம் அது. சென்னைக்கு வரும்படியாகக் கஸ்தூரி ரங்க அய்யங்கார் அவருக்கு அழைப்பு அனுப்பி இருந்தார். ஆனால் அதற்குக் காரணமாய் அமைந்தவர் திரு. ராஜாஜி அவர்களே. அவ்வழைப்பை ஏற்று காந்திஜி மார்ச் மாதத்தில் சென்னைக்கு வந்தார். திரு ராஜாஜி அவர்களின் விருந்தினராகவே அவர் தங்கியிருந்தார். அடிகளுக்கும் ராஜாஜி அவர்கட்கும் இப்போதுதான் முதன் முதலாகச் சந்திப்பு ஏற்பட்டது.

ரவுலட் சட்டத்தை எங்ஙனம் எதிர்த்துச் சத்தியாக்கிரகம் செய்வது எனும் ஆலோசனையில் காந்திஜியும், மற்றவர்களும் ஈடுபட்டிருந்தார்கள்; ஒருவழியும் புலப்படவில்லை. ஒரு நாள் விடியற்காலையில் உறக்க நிலையிலேயே காந்திஜிக்கு ஒரு வழி புலப்பட்டது. ஒரு நாள் முழுவதும் வேலைநிறுத்தம் செய்து, உபவாசம் இருந்து வழிபாடு புரிய வேண்டும். இதன் மூலம் அச்சட்டத்திற்கு எதிர்ப்பைத் தெரிவிக்க வேண்டும் என்பதே அந்த வழி. உடனே காந்திஜி விண்ணப்பம் ஒன்றையும் தயாரித்து, வேலை நிறுத்த நாளையும் குறிப்பிட்டு நாட்டு மக்கள் அனைவரையும் வேலைநிறுத்தம் செய்யுமாறு வேண்டினார். இதன்மூலம் நாடே கிளர்ந்தெழுந்தது. இவ்வாறு ரவுலட் சட்ட எதிர்ப்பு என்னும் வடிவில், இந்தியா முழுவதும் ஒன்றுபட்டுத் திரண்டு எழுவதற்குரிய வித்து, தமிழகச் சூழ்நிலையில்தான் அடிகளின் இதயத்தில் தோன்றியது. அச்சமயம் அவர் மார்ச் 24-ஆம் தேதியில் தஞ்சாவூரிலும், 30-ல் திருச்சிராப்பள்ளியிலும் நடந்த பெருங்கூட்டங்களில் வேலைநிறுத்தம் செய்யுமாறு மக்களைக் கேட்டுக் கொண்டார்.

இந்த ஆண்டு வருகையின்போது நிகழ்ந்த இன்னொரு நிகழ்ச்சியும் குறிப்பிடத்தக்கதாகும். அதுவே காந்திஜி-பாரதி சந்திப்பு. அப்போது கதீட்ரல் தெருவில் இரண்டாம் எண் வீட்டில் தங்கி இருந்தார். பாரதியும் கடையத்திலிருந்து அச்சமயம் சென்னைக்கு வந்திருந்தார். ஒரு நாள் பிற்பகல் இரண்டு மணிக்கு அடிகள் ராஜாஜி முதலியோருடன் பேசிக்கொண்டிருந்தபோது திடீரென்று பாரதியார் அவர் இருந்த அறையில் நுழைந்தார். அடிகளை வணங்கியபின், பாரதி, அன்று மாலை தாம் பேசப்போகும் கூட்டத்திற்குத் தலைமை தாங்க வேண்டுமென்று அவரைக் கேட்டார். முன் கூட்டியே வேறு

அலுவல் நிர்ணயிக்கப்பட்டிருந்ததால் தன்னுடைய இயலாமையை காந்திஜி தெரிவித்தார். உடனே பாரதி, ''உங்கள் இயக்கத்துக்கு என் வாழ்த்துக்கள்'' என்று கூறிவிட்டு வெளியேறினர். அவர் சென்றதும் காந்திஜி அருகில் இருந்தோரிடம் ''இவர் யார்?'' என்று வினவினர். உடனே திரு. ராஜாஜி தமிழ்நாட்டுக் கவிஞர் என்று பதில் கூற காந்திஜியும் ''இவரைப் போற்றிக் காக்க வேண்டும்'' என்று கூறினர். இவ்வகையில் மகாத்மா-மகாகவி ஆகிய இருவரின் ஒரே சந்திப்பு நிகழ்ந்தது. சந்தித்தது ஒரே முறை என்ருலும், மகாத்மாவை மகாகவியும் மகாகவியை மகாத்மாவும் எவ்வளவு உன்னதமாகப் புரிந்துகொண்டார்கள்.

காந்தியடிகளின் எளிய உடைத்தோற்றம் உலகப் புகழ் பெற்றது. தமிழகத்தில் சுற்றுப்பயணம் செய்தபோதுதான் அவர் அந்த எளிய உடையை மேற்கொண்டார். 1921-ஆம் ஆண்டு. செப்டம்பர்த் திங்களில் அவர் தமிழகத்திற்கு வந்தார். அன்னியத் துணியை ஒதுக்கிக் கதரை ஆதரிக்கும்படியாக மக்களைக் கேட்டுக்கொள்வதே அவரது தமிழக வருகையின் நோக்கமாக இருந்தது. சென்னைக் கடற்கரையில் கூடிய மாபெருங் கூட்டத்தில் அன்னியத் துணிகளை மலைபோல் குவித்து மக்கள் தீயிட்டார்கள். பின்னர் அடிகள் புகைவண்டி மார்க்கமாகத் திருச்சிக்கு வந்து சேர்ந்தார். புகைவண்டி நிலையங்களில் எல்லாம் மக்கள் வெள்ளம் கூடிநின்று அடிகளைக் கண்டு களித்தது.

செப்டம்பர், 19-ஆம் நாள் திருச்சியில் நடைபெற்ற மாபெருங் கூட்டத்தில் அண்ணல் பேசினர். தன்னுடைய உடைமாற்ற எண்ணத்தை அவர் அக்கூட்டத்தில்தான் வெளியிட்டார்.

''உடுத்திக்கொள்ள ஒரு துண்டு, தேவைப்படும்போது போர்த்திக்கொள்ள ஒரு வேட்டி; இவற்ருேடு என் உடைகளை நிறுத்திக்கொள்வது என எண்ணியுள்ளேன். துக்கம் கொண்டாடுவதன் அறிகுறியாக இத்துறவு அவசியம் என நான் எண்ணுகின்றேன். நான் வாழும் பகுதியில் வெறுந் தலையும், வெற்றுடம்பும் அத்தகைய அறிகுறியாகவே கருதப்படுகின்றன.''

இவ்வாறு காந்திஜி தனது உடைமாற்றத்தின் காரணத்தைக் கூறினர்.

1921, செப்டம்பர், 21-ஆம் நாள் காந்திஜி மதுரையில், மேலமாசிவீதியில் 251 ஏ, எண்ணுள்ள வீட்டில் தங்கியிருந்தார். அன்று காலை 10 மணி அளவில் ஒரு நாவிதரை அழைத்துத் தனது தலையினை மொட்டை அடித்துக் கொண்டார். மறுநாள் காலையில் காரைக்குடிக்குப் போகவேண்டியிருந்தது. அடிகள் தனது பழைய உடைகளை நீக்கிப் புதிய 'முழத்துண்டு உடை'யோடு வெளிப்போந்தார். ராஜாஜி, டாக்டர் ராஜன் ஆகியோர் எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் அடிகள் ஏற்கவில்லை. தென்னக மக்களுக்கு நான் அணிந்திருக்கும் உடை புதுமையானதன்று என்று அவர் கூறினர். இவ்வகையில் மதுரை பெற்ற மகத்துவம்தான் என்ன? தோற்றத்தில் எளியராகி

ஆற்றலில் வலியரான அடிகள் மகத்துவம்தான் என்ன?

திருநெல்வேலி முதலிய இடங்களுக்குச் சென்றபின் காந்திஜி திரும்பி ஈரோடு சென்றார். அப்போது காங்கிரசின் சிறந்த தலைவராக விளங்கிய ஈ. வே. ராமசாமி அவர்களின் இல்லத்தில், அவரது விருந்தினராகத் தங்கினார். அதன் பின் கோவை சேலம் ஆகிய இடங்களுக்குச் சென்றார்.

1925-ஆம் ஆண்டு, மார்ச் மாதத்தில் அடிகள் சென்னைக்கு வந்து, பின்னர் வைக்கம், திருவாங்கூர் முதலிய இடங்களுக்குச் சென்று தீண்டாமையை ஒழிக்க மக்களை வேண்டினார்.

மீண்டும் காந்திஜி 1927-ஆம் ஆண்டு, ஆகஸ்டு 24-ஆம் தேதி முதல் அக்டோபர் இடைப் பகுதி வரை தமிழகத்தின் முக்கிய இடங்களுக்கெல்லாம் சென்றார். அப்போது சென்னையில் தங்கிய நான்கு நாட்களில் 17 கூட்டங்களில் பேசினார்; செருப்புத் தைப்பவர்களிடையே பேசி, இறந்த மாட்டின் தோலை மட்டுமே பயன்படுத்தும்படி வேண்டினார். தேவதாசிகளைச் சந்தித்துப் பேசி, அவர்களின் துன்பத்தால் வருந்திய காந்திஜி, அம்முறையை ஒழிக்கவேண்டும் என்று கூட்டத்தில் வலியுறுத்தினார். பின்னர், அவர், சென்னையை விட்டுச் சிதம்பரம் சென்றார். அங்கே நந்தனாரின் பெருமையைப் பேசிய அவர் கதரைப் பேண வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார். கடலூரில் பேசியபோது, பிராமணர்—பிராமணர் அல்லாதாரின் பிரச்சினை குறித்துப் பேசினார். பிறகு, திருச்சி, செட்டிநாடு, மதுரை, தூத்துக்குடி, ராமநாதபுரம், திருநெல்வேலி, ராஜபாளையம், நாகர்கோவில், திருவனந்தபுரம் முதலிய இடங்களுக்குச் சென்றார்.

1933-ஆம் ஆண்டு, டிசம்பரில் ஆந்திரத்திற்கு வந்திருந்த காந்திஜி இடையில் மூன்று நாட்கள் சென்னைக்கு வருகை தந்தார். அப்போது தீண்டாமை ஒழிப்புப் பற்றியும், அரிசன சேவை குறித்தும் பல கூட்டங்களில் பேசினார். தட்சண பாரத இந்தி பிரசார சபையின் பட்டமளிப்பு விழாவிலும் தலைமைதாங்கி உரையாற்றினார். தீண்டாமை - இச் சொல்லிலும் பொருளிலும்தான் எவ்வளவு தீமை. நம் நாட்டில் எண்ணற்ற ஆண்டுகட்கு முன்னமே பரவி, ஆழமாக வேரோடிய தீமை இத் தீண்டாமை. காந்தியடிகளே இதன் வேறினைச் சிறிது சிறிதாக வெட்டினார். அத[illegible] மூலம் பாரத சமுதாயத்திற்[illegible] நல்லதோர் எதிர்காலத்[illegible] அமைத்தார்.

இத்தீண்டாமை ஒழிப்பிற்கெனவும், அரிஜன மக்களின் நலத்திற்கும் பெரு நிதி திரட்டவும் அண்ணல் இந்தியா முழுவதிலும் பிரயாணம் செய்தார். வரலாற்றில் பொறிக்கத் தக்கதாக அமைந்தது "இச் சுற்றுப்பிரயாணம்.

இப்பயணத்தை அடிகள் தென்னகத்திலிருந்துதான் தொடங்குகிறார். தீண்டாமை இங்கேதான் வலிமை பெற்றிருந்தது. ஆகவே இங்கிருந்து தீண்டாமையை

விரட்டிவிட்டால் இந்தியாவிலிருந்தே அதனை எளிதில் விரட்டிவிடலாம் என்று அடிகள் கருதினார்போலும்! அல்லது, நல்லதொரு காரியத்தை இங்கிருந்துதான் தொடங்கவேண்டும் என்றும் எண்ணியிருக்கலாம்!

இத்தகைய சிறப்புமிக்க சுற்றுப் பயணம் 1934-ஆம் ஆண்டு, ஜனவரி மாதம் 22-ஆம் தேதி முதல் மார்ச் 9-ஆம் தேதிவரை தமிழகத்தில் நடைபெற்றது. இப்பயணத்தை அப்போது தமிழக அரிஜன சேவா சங்கத் தலைவர் டாக்டர் ராஜன் முன்னிருந்து நடத்தினார்.

கன்னியாகுமரித் துறையில் முழுகிக் காந்திஜி தனது தமிழகப் பயணத்தைத் தொடங்கினார். குற்றாலம், திருநெல்வேலி முதலிய இடங்களைக் கடந்து மதுரையை அடைந்தார். கொட்டிய மழையிலும் வழிகளிலெல்லாம் மக்கள் கூடிநின்று அவர் தரிசனம்பெற்று அரிசன நல நிதிக்குப் பொருள் கொடுத்தனர். மதுரையினின்றும் அடிகள் செட்டிநாடு சென்றார். அப்போது தேவகோட்டையைச் சார்ந்த நாராயண சத் சங்கி என்பாரின் பெண் குழந்தைக்குச் சாவித்திரி எனப்பெயரிட்டதோடு, அக்குழந்தையின் புகைப் படத்திலும் 'சாவித்திரி' எனத் தமிழில் எழுதி 27—1—34 எனத் தேதியிட்டிருக்கின்றார்.

அதன்பின், அடிகள் கோவைக்குச் சென்றார். அங்கே பெரிய நாயக்கன்பாளையத்தில் அவர்களால் தோற்றுவிக்கப்பட்ட, ராமகிருஷ்ண வித்தியாலயத்திற்கு அடிக்கல் நாட்டினார். குன்னூரில் ஒருவார ஓய்விற்குப்பின், காந்திஜி திருச்சி, தஞ்சை வழியாகச் சிதம்பரம் சென்றார். அதிகாலை, அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் நாவலர் சோமசுந்தர பாரதியார் தலைமையில் மாணவர்களும், ஆசிரியர்களும் அவரை வரவேற்று மகிழ்ந்தனர். பிறகு, அவர், காஞ்சி சென்று அங்கிருந்து குடகு நாட்டிற்குச் சென்றார்.

காந்தியடிகள் இப்பயணத்தில் சுமார் 2000 மைல் பிரயாணம் செய்தார். சென்றவிடமெல்லாம் மக்கள் அவரை ஆர்வத்தோடு வரவேற்றார்கள். அரிசன நிதிக்குப் பணம் கொடுத்தார்கள்; அதோடு பெண்மணிகள் தங்களின் தங்க நகைகளைக் கொடுத்தார்கள். இச்சமயத்தில் மட்டும் ஒரு லட்சத்து பதினேராயிரம் ரூபாய் கிடைத்தது. இது தவிர நகைகளும் கிடைத்தன. இத்தகைய பெருநிதியைக் காந்திஜி அல்லாமல் வேறு எவராலும் திரட்டியிருக்க முடியாது.

ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகத் தோன்றி வளர்ந்துவந்த இத்தீண்டாமையை ஒழிப்பதற்காகச் சில ஆயிரம் ஆண்டுகளாவது வேண்டும் என்று சிலர் கருதினர். ஆனால் காந்திஜியின் குறுகியகாலச் சுற்றுப்பயணத்தால் அதன் அஸ்திவாரமே ஆட்டத்தலைப்பட்டது. அதன்பின் அதனை யாராலும் நிறுத்தி வைக்க முடியவில்லை.

காந்திஜி சென்றவிடமெல்லாம் ''தீண்டாமை'' என்னும் தொத்து நோய் ஒழிந்தால்தான் இந்து மதம் பிழைக்கும்; இல்லையேல் நிச்சயமாக இந்து மதம் ஒழிந்து

விடும், என்று உருக்கமாகப் பேசினார். இது எல்லோருடைய இதயத்தையும் தொட்டது. ஆகவே ஆலயங்களை அரிசனங்களுக்குத் திறந்துவிடுமாறு மக்களை அவர் வேண்டினார். எண்ணற்ற ஆண்டுகளில் எண்ணற்றோர் கூடிச் சாதிக்கவேண்டியதை, அண்ணல் தன்னுடைய குறுகிய காலச் சுற்றுப்பயணத்தால் சாதித்தார்.

காந்திஜி இறுதியாகத் தமிழகத்திற்கு வருகை தந்தது 1946-ல் ஆகும். ஆகவே, அவ்விறுதி வருகை எவராலும் மறக்க முடியாததாகிவிட்டது.

அப்போது சென்னையில் இந்தி பிரசார சபையின் வெள்ளி விழா நடைபெற்றது. இச் சபையின் ஆயுள் தலைவர் அடிகளே ஆவர். ஆகவே, அவரே இவ் வெள்ளி விழாவிற்கும் தலைமை தாங்கினார். இதன் பொருட்டு வந்த காந்திஜி சென்னையில், 1946, ஜனவரி, 21-ஆம்தேதி முதல், 29-ஆம்தேதி வரையில் தங்கினார். அப்போது அவர் நிகழ்த்திய மாலை வழிபாட்டுக் கூட்டங்களால் பயன் பெற்றோர் பலர்.

இதற்கு முன்னர் காந்திஜி மதுரை மக்களுக்கு ஒரு வாக்களித்திருந்தார். "மீனாட்சி அம்மன் கோவிலை அரிசன மக்களுக்குத் திறந்துவிட்டால், அதன் பின், நானும் அக் கோவிலுக்கு வருவேன்" என்பதே அது. 1939-ஆம் ஆண்டிலேயே மீனாட்சி அம்மன் கோவில் திறந்துவிடப்பட்டது. ஆகவே, அளித்த வாக்கினை நிறைவேற்ற வேண்டுமல்லவா; இதன் பொருட்டுக் காந்திஜி சென்னையினின்றும் மதுரைக்கு வந்தார். பிப்ரவரி, 3-ஆம் நாள் அவர் மீனாட்சி அம்மனைத் தரிசித்தார். அதுமட்டுமல்லாமல், அங்கிருந்து பழநிக்கும் சென்று முருகனைத் தரிசித்து அருள் பெற்றார்.

இவ் வருகைக்குப் பின் அடிகளின் பாதம் தமிழகத்தில் படவில்லை. ஆனால், அவரது ஆன்மா என்றென்றும் நம்மில் பொருந்தியிருக்கும். ஏனெனில், அடிகளுக்கு அத்தகைய ஈடுபாடு தமிழகத்தின்பால் அமைந்திருந்தது.

தமிழகம் இன்று எப்படி முன்னேறி இருக்கின்றது; எவ்வளவு சீர்திருத்தங்களை அடைந்திருக்கின்றது; பாரதத்திலேயே அரசியலில் நன்கு விழிப்படைந்த மாநிலம் தமிழகம் என்று பேசப்படுகின்றது. இந்த விழிப்புக்கு அடிப்படை அமைத்தவர் காந்தியடிகள் என்பதை மறக்க முடியாது. தீண்டாமை தலைவிரித்தாடிய தமிழகத்தில் அதனுடைய அடிப்படை இருக்கும் இடம் தெரியாமல் தகர்த்தெறியப்பட்டிருக்கின்றது. நிறைந்து விளங்கும் எல்லாக் கோவில்களிலும் இன்று அரிசனங்கள் சென்று வணங்கும் நிலை ஏற்பட்டிருக்கின்றது. இந் நிலைகளுக்குக் காரணம் அடிகளின் சுற்றுப்பயணம் அல்லவா? சாதி வேறுபாடுகள் இருந்த இடம் தெரியவில்லை. சமூகச் சீர்திருத்தங்கள் சிறந்து விளங்குகின்றன. அனைத்திற்கும் காரணம் காந்திஜி காட்டிய ஒளி என்றுதான் கூறவேண்டும்.

தமிழகத்தின் பெருந் தலைவர்களை உருவாக்கியவர், உத்தமர்

காந்தி. தமிழ்த் தென்றலாகவும், தொழிலாளர் தோழனுகவும் விளங்கிய திரு. வி. க. காந்தியத் தத்துவத்தால் சிறந்தார். சமூக சீர்திருத்தத்தில் வேகம் மிக்க ஈ. வெ. ரா., அரசியல் ஞானியாக விளங்கும் ராஜாஜி ஆகியோரும் அவரிடம் ஈடுபாடு கொண்டு உருவானவர்களே.

அடிகள் எங்ஙனம் தமிழகத்தினிடம் ஈடுபாடு கொண்டிருந்தாரோ, அங்ஙனமே தமிழகமும் அடிகளிடமும் ஈடுபாடு கொண்டிருந்தது. அரிசனங்களுக்குக் கோவிலைத் திறந்துவிடுதலில் மட்டும்தான் தமிழரிடையே சிறிது எதிர்ப்பு இருந்தது. இது ஒன்றைத் தவிர, மது ஒழிப்பு, கதர் வளர்ச்சி, பெண்கள் முன்னேற்றம் ஆகிய எல்லா நிர்மாணத் திட்டங்களிலும் தமிழகம் முன்னணியில் நின்றது. கோவில் நுழைவிலும் இறுதியில் தமிழகம் காந்திஜியின் உள்ளத்தை உவகையில் ஆழ்த்தியது.

ஆதாரக் கல்வி வளர்ச்சி, கிராமத் தொண்டு, தீண்டாமை ஒழிப்பு,ஆகியவற்றை மையமாகக் கொண்டு தமிழகத்தில் மூன்று சிறந்த நிலையங்கள் தோன்றி வளர்ந்து வருகின்றன. கோவைக்கருகில் உள்ள ராமகிருஷ்ண வித்தியாலயம், மதுரைக்கு அருகில் உள்ள காந்தி கிராமம், கல்லுப்பட்டியில் உள்ள காந்தி நிகேதன் என்பன அவை. இம்மூன்று நிலையங்களையும் காந்திஜியின் நன்கொடை என்றால் மிகையாகாது. நிறுவியவர்களுள் திரு. ராமச்சந்திரன், திருமதி சவுந்தரம் ராமச்சந்திரன் அவர்களும், திரு. அவனுசிலிங்கம் அவர்களும் அடிகளிடம் நேரடியாகப் பயிற்சி பெற்று, அப்பயிற்சியின் பயனை இன்று தமிழகத்திற்கு வழங்கிவருகின்றார்கள்.

தமிழகத்திற்குப் புத்துயிர் ஊட்டியவர் காந்தியடிகள். புதிய தமிழகத்திற்கு அடிப்படையை அளித்தவர் அண்ணல் அவர்கள். வள்ளுவர் அற வாழ்க்கைக்கு இலக்கியம் அவரே. எதிர்காலத் தமிழகத்தின் இலட்சியமும் அவரே.

காந்தியடிகள் பிறப்பால் குஜராத்தி;

ஆனல் இதயத்தால் தமிழர்.

மெய்ப்பொருளைக் காணுதற்கு

"அகிலம் அனைத்தும் பரவிநிற்கும் மெய்ப்பொருளை நேருக்குநேர் காணவேண்டுமாயின் படைப்பில் மிகத்தாழ்ந்த உயிரிடத்தும் மேலான அன்பு காட்டவேண்டும். இந்நிலையை அடைய விரும்பும் ஒருவன் வாழ்வில் எத்துறையிலும் பங்கு கொள்ளாது துறவியாக முடியாது. சத்தியத்தில் எனக்குள்ள பற்று என்னை அரசியலில் இழுத்துவிட்டது. சமயத்திற்கும் அரசியலுக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை என்போர்க்குச் சமயம் என்றால் என்ன என்பது தெரியாது என்று தயக்கமின்றி, ஆனல், பணிவோடு கூறுவேன்".

— காந்தியடிகள்

அண்ணலாரின் அருள் மொழிகள்

சமூகத்தோடு ஒட்டி வாழும் தன்மையை உடையவன் மனிதன். தனி மனிதன் சாதனைகள் பிறருக்கும் பயன்படவேண்டுமானால் போதுமான அளவு திறமை வாய்ந்த வேறு எந்த மனிதனுக்கும் இயல்வனவாய் அவை இருக்கவேண்டும்.

உலக மக்களின் செய்கைகள் அழிவுச் செய்கைகளாக இருந்திருந்தால் உலகம் முன்னமே அழிந்திருக்கும். அன்பு, அல்லது வேறுவிதம் சொல்ல வேண்டுமானால், அகிம்சையால்தான் இந்த உலகம் நிலைத்து நிற்கிறது.

உலகுக்கு நல்லவனாக இருக்க நான் கடவுளுக்குத் துரோகம் செய்யமாட்டேன்.

** ** **

எனது நம்பிக்கையின் முதல்படி அகிம்சை; கடைசிப் படியும் அகிம்சையே.

நான் நம்பிக்கையை எப்பொழுதும் இழக்கவில்லை. மிகவும் நெருக்கடியான காலத்திலும் நம்பிக்கை எனதுள்ளத்தில் கொழுந்துவிட்டெரிந்து கொண்டிருக்கும். என்றும் எனது நம்பிக்கையைக் கொல்லமுடியாது.

** ** **

ஆன்மீக மனப்பான்மைக்குக் குழப்பமின்மையே முதல் தேவையாகும். கோழைகளிடம் அற மனப்பான்மையைக் காண முடியாது. எங்கு பீதி நிலவுகிறதோ அங்கு சமயம் இல்லை; கடவுளும் இல்லை.

** ** **

உடலுக்கு உணவு எவ்வளவு அவசியமோ அதுபோல ஆன்மாவுக்கு வழிபாடு மிகவும் அவசியம்.

** ** **

தூய்மையான இதயத்தில்தான் அழகைக் காணமுடியும்.

** ** **

வாழ்க்கையின் ஒரு மாறுதலே சாவாகும், அதைத் தவிர வேறொன்றுமில்லை. ஆதலால் சாவை நாம் எப்பொழுதும் எதிர்பார்க்கவேண்டும். சாவுக்கு அஞ்சுபவன் கோழையே.

** ** **

மாணவர்கள் அரசியலிலும் கட்சி வாதங்களிலும் ஈடுபடக்கூடாது. அவர்கள் அரசியல் வேலை நிறுத்தங்களிலும் ஈடுபடக்கூடாது.

** ** **

மாணவர்கள் வகுப்பு உணர்ச்சிக்கோ அல்லது தீண்டாமை உணர்ச்சிக்கோ மனத்தில் இடந்தரலாகாது. தேசியக்கொடியின் தத்துவத்தை அவர்கள் உணரவேண்டும். மாணவர்கள் தோட்டி வேலை செய்யவும் தயாராக இருக்கவேண்டும்.

** ** **

மாணவர்கள் தங்களுடைய உயிர் போவதாக இருந்தாலும், அகிம்சையைக் கைவிடலாகாது. அவர்கள் இரகசியமாக எதுவும் செய்யக்கூடாது. அவர்கள் எப்பொழுதும் தியாகம் செய்யத் தயாராக இருக்கவேண்டும்.

காந்தி நினைவு நிலையம், மதுரை.

(காந்தி மெமோரியல் மியூசியம்)

மதுரை, காந்தி மியூசியத்தைப் பார்ப்பது தவிர்க்கக் கூடாத ஒன்று; அது மட்டுமல்ல; மிகவும் பயனுடையதாகவும் இருக்கிறது. அதனுடைய வெளித்தோற்றமே அதனுள் செல்வதற்கு உங்களைக் கவர்கிறது. உள்ளே சென்று விட்டாலோ காந்திஜியின் உயர்ந்த இலட்சியங்களிலும், பண்புகளிலும், நோக்கங்களிலும் பங்குகொள்ளாமல் இருக்க முடிவதில்லை.

வெறுங் கண்காட்சி அன்று – ஓர் உயிருள்ள ஆற்றல் மிகுந்த அமைப்பு

முதன்முதலாக ஒருவர் உள்ளே சென்றதும் இக்கண்காட்சியின் அமைப்பையும் அதில் வேலை செய்யும் ஊழியர்களையும் பார்த்தவுடன், 'இது ஒரு சாதாரணக் கண்காட்சி மட்டுமல்ல, ஓர் ஆற்றல் மிகுந்த உயிருள்ள அமைப்பு' என்ற எண்ணம் அவர் மனத்தில் பதிந்து விடுகிறது. காந்திஜி எதற்காக வாழ்ந்தாரோ, எதற்காக மாய்ந்தாரோ, அந்த லட்சியங்களைக் காப்பாற்றி, விரிவுபடுத்தி, என்றென்றைக்கும் பாதுகாத்து வரும் ஓர் உயிருள்ள அமைப்பாக இது விளங்குகிறது.

அறிவைப் பெருக்க வேண்டும், சேவையில் ஈடுபடவேண்டும், எத்தொழிலும் கேவலமானதல்ல, ஏதாவது உபயோகமான வேலைகளில் ஈடுபட்டுக் கொண்டேயிருக்க வேண்டும்—என்ற எண்ணங்கள் இங்கு ஒன்றிரண்டு நாட்கள் தங்குபவர்களுக்கு உறுதியாக ஏற்படும்.

மதுரை: புதிய—பழைய கோயில்கள்

மதுரை ஒரு பழங்காலத்து நகரம். நாகரிகத்திலும் செல்வத்திலும், வசதிகளிலும் மிகப் பழங்காலத்திலிருந்தே தொடர்ச்சியாக வளர்ந்து வந்த நகரம். ஒரு நாத்திகனையும் ஆத்திகனுக்க வாய்ப்புக்களைக் கொண்ட நகரம். இத்தகைய சிறப்பு வாய்ந்த மதுரை மாநகருக்குள் 'காந்தி மியூசியம்' ஒரு புது ஆபரணமாகத் திகழ்கிறது. ஆக்க வேலைகளுக்குக் காந்தி மியூசியம் ஓர் ஊற்றாக இருக்கிறது.

கட்டிடத்தின் பழமையான வரலாறு

இது ராணி மங்கம்மாள் கட்டிய அரண்மனை. காந்தி நினைவு நிலையத்தை நிறுவுவதற்காக 1965-ஆம் வருடத்தில் இக்கட்டிடத்தைக் காந்தி நினைவு நிதிக்குச் சென்னை அரசாங்கம் இனாமாக வழங்கியது. காந்தி நினைவு நிதி அதை வேண்டியவாறு

காந்தி நினைவுப் பொருட்காட்சி, மதுரை.









1. பொருட்காட்சி அகக் கட்டிடம்
2. அரசவை மண்டபத்தின் உட்காட்சி
3. பொருட்காட்சியகத்தின் ஊடு வழி
4. நினைவுச் சின்னங்களின் மண்டபம்
5. காந்தியடிகளின் மிதியடிகள்
6. காந்தியடிகளின் மூக்குக்கண்ணாடி
7. நூலகத்தின் உட்காட்சி



காந்தியடிகள் 29-1-1948 அன்று இறுதி வழிபாட்டுக்

மாற்றியமைத்தும், புதுக் கட்டிடங்களை எழுப்பியும் இப்போதுள்ள நிலைமைக்குக் கொண்டு வந்திருக்கிறது. பல்வேறு காரியங்களுக்கு உபயோகமாகும்படியான ஒரு திறந்தவெளிக் கலையரங்கும் கட்டப்பட்டிருக்கிறது.

காந்திஜியின் கருத்துக்கள் தவழும் இடம்

இதனுடைய நுழைவாசல் ஓர் அரண்மனை வாசல் போன்றது. பிரதானக் கட்டிடத்திற்குட் செல்லும் ராஜபாதைக்கு இருமருங்கிலும் அழகான மரங்கள். நுழைவாசல் புகும்போதே முன்னால் வெகு தூரத்திலிருக்கும் செம்பினால் காமர்கார் அவர்களால் வார்க்கப்பட்ட முழு அளவுக் காந்தி சிலை, "நாற்புரங்களிலிருந்தும் அடிக்கும் அறிவாகிய காற்றும், வெளிச்சமும் தங்கு தடையின்றிப் புகுமாறு என் இல்லத்திலுள்ள எல்லா ஜன்னல்களையும் நன்றாகத் திறந்து வைத்திருக்கிறேன்'' என்று கூவியழைப்பதைப் போல் தோன்றுகிறது. அரண்மனையைப் போன்று தோற்றமளிக்கும் இந்தக் கம்பீரமான கட்டிடத்தை நோக்கி நகருங்கால் வலப்பக்கமாக இருக்கும் ஒரு சிறு குடிசை நம் கண்ணைக் கவருகிறது. இதுதான் காந்திஜி வசித்த 'சேவா கிராமக் குடிசை'யின் பிம்பம். இது எல்லா அம்சங்களிலும் அளவிலும் காந்திஜி வசித்த குடிசையை ஒத்திருக்கிறது. அதனுடைய அமைதியும் மகத்துவமும் கூட இங்குத் துலங்குகிறது. இந்தக் குடிசையின் ஒவ்வொரு பொருளும், நம்முடைய நாட்டின் விடுதலைக்காக காந்தியிடமிருந்து அப்போதைக்கப்போது வெளிவரும் ஆலோசனைகளும், ஆணைகளும் நிரம்பிய நாட்களை நம் மனதிற்குக் கொண்டுவரும்.

இக்குடிசையினின்று வெளியே வந்தால், பிரதானக் கட்டிடத்திற்கே முக்கியத்துவம் அளிக்கும் தாமரைக் குளத்தில் மிதந்து கொண்டிருப்பதைப்போலத் தோற்றமளிக்கும் அந்தக் காந்தி சிலையின் அருகே வருவோம்.

நூலகம் : தற்காலத்துக்குத் தேவையான ஆழ்ந்த அறிவு பெறுமிடம்

தாமரைக் குளத்திற்கு இடது புறமாகச் சிறிது தூரத்தில் ஒரு சுவரில், 'இன்றைக்கு ஒரு செய்தி' என்ற தலைப்பில், காந்திஜியைப் பற்றிய ஒரு புத்தகம் திறந்து வைக்கப்பட்டு இருப்பதைக் காணலாம். இன்னும் சிறிது தூரம் சென்றால் நூலகத்திற்கு வருவீர்கள். தற்காலப் பொருளாதார, சமூக, அரசியல் துறைகளிலும் காந்தியக் கருத்துக்களிலும் உள்ள அறிவுப் பெருக்கத்தைப் பரப்பிவிடும் களஞ்சியம் என்று இதைச் சொல்லலாம். நூலகத்தின் வேலை நேரங்களில் மக்கள் தங்கள் அறிவுப் பசியைத் தீர்த்துக்கொள்ளுவதற்காக இந் நூலகத்திற்குக் கூட்டம் கூட்டமாக வந்து தங்கள் அறிவுப் பசியை மனதாரத் தீர்த்துக் கொண்டு திரும்புகின்றனர்.

திறந்தவெளிக் கலை அரங்கம்

பிரதானக் கட்டிடத்தில் வலப் பக்கத்தில் ஒரு திறந்தவெளிக் கலை அரங்கம் அமைக்கப்பட்டிருக்கிறது. இது சுமார் 8,000 பேர் வசதியாக உட்கார்ந்து பார்க்கும்

படி அமைக்கப் பெற்றிருக்கிறது. அறிவையூட்டும் பல் திரைப்படக் காட்சிகளும் கலைகளை வளர்க்கும் அநேக நடவடிக்கைகளும் இதில் அப்போதைக்கப்போது இடம் பெறுகின்றன.

காட்சிக்கூடம்

காட்சிக் கூடத்தைப் பார்க்கப் படிகளில் ஏறும்போதே ஏதோ ஒரு புண்ணிய தலத்திற்கு யாத்திரை போவதைப் போன்ற ஓர் உணர்ச்சி தோன்றுகிறது. அங்குச் சென்று காந்திஜியின் வாழ்க்கை வரலாறு, அவருடைய செய்திகள், உபதேசங்கள் முதலியவைகளை எளிமையான, ஆனால் மிக்க அழகான பாணியில் வைத்திருப்பதைப் பார்த்துத், தன்னை மறந்து, எண்ணங்களாலேயே சூழப்பட்ட ஓர் உலகத்திலே இருப்பது போன்ற ஓர் உணர்வு பெறுகிறோம்.

காட்சிக்கூடம் காந்திஜியின் வாழ்க்கை வரலாற்றைப் புகைப்படங்களால் காண்பிக்கின்றது. புகைப்படங்கள், வரைபடங்கள், அவர் எழுதிய காகிதங்களின் புகைப்படங்கள், அவருடைய எழுத்துக்கள்—இவைகளெல்லாம் காந்திஜி வாழ்ந்த நாட்களுக்கே நம்மை இழுத்துச் செல்கின்றன. அவர் பிறந்த போர்பந்தர் வீடு முதல், அவர் கடைசிக் காலத்தில் வாழ்ந்த டில்லியிலுள்ள இல்லம் வரை, இத்தேச சரித்திரத்தையே மாற்றிய அவருடைய பல்வேறு திட்டங்கள்—இவைகளையெல்லாம் காணும் போது, சென்ற காலமே நம் கண் முன் தோன்றுவதுபோல் இருக்கிறது. உலக அமைதிக்கும், சத்தியத்தின் மேன்மைக்கும், மக்களின் மேன்மைக்கும், மக்களின் நலத்திற்கும், சமுதாயத்தின் நீதிக்கும், நாட்டின் விடுதலைக்கும் போராடவேண்டும் என்ற ஆவல் நிறைந்தது அந்தக் காலம்.

காந்திஜி மதுரைக்கு ஐந்து தடவைகள் வந்தது, மிகவும் முக்கியம் வாய்ந்தது. 'ரௌலட்' சட்டத்தை மீறுவதற்காகத் தொண்டர்களைத் திரட்டும் பொருட்டு முதன் முதலாக மதுரைக்கு வந்தார்.

இரண்டாவதாக, 1921-ஆம் வருடம் செப்டம்பர் 27-ல் மதுரை வந்து, அரை நிர்வாணப் பக்கிரியாக மாறின நாளை என்றும் மறப்பதற்கில்லை.

மூன்றாவதாக, 1927-ஆம் ஆண்டு செப்டம்பர் 28-30 இல் சுதேசி, கதர் பிரச்சாரத்திற்காக நிதி திரட்ட வந்தார்.

நான்காவதாக, 1934-ஆம் ஆண்டில் ஜனவரி, 25-27 இல் அகில இந்திய அரிஜன யாத்திரையின் போது மதுரைக்கு வந்தார்.

ஐந்தாவதாக, அரிஜனங்களுக்காகத் திறக்கப்பட்ட மீனாட்சியம்மன் கோவிலுக்குச் சென்று அம்மனைத் தரிசிப்பதற்காக, 1946-ஆம் வருடம் பிப்ரவரியில் வந்தது சரித்திரத்தில் மிக முக்கியம் வாய்ந்தது. காந்திஜி அரிஜனங்களைப் பத்மநாபசாமி கோவிலுக்குள் அழைத்துச் செல்லும் காட்சியைக் காட்டும் இங்குள்ள ஒரு படம் நம் மனத்தை முழுவதும் கவருகிறது.

இச்செய்திகளையெல்லாம் சித்திரிக்கும் 'தமிழ் நாட்டில் காந்தி அண்ணல்' என்ற சிறப்புப் பொருட்காட்சி ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. காந்திஜியின் முழு வாழ்க்கையையும் கார்ட்டூன் சித்திரங்கள், விளக்கங்கள் மூலமாகக் காட்டும் 44 புகைப் படங்கள் கொண்ட பிரிவு ஒன்றும் இருக்கிறது.

நந்தலால் போஸ் அவர்களால் வரையப்பட்ட காந்திஜியின் படம் எல்லாருடைய கவனத்தையும் ஈர்க்கிறது. உப்புச் சத்தியாக்கிரகத்தின் போது நடுநிசியில் காந்திஜி கைது செய்யப்பட்டதைச் சித்திரிக்கும் படமும் நம் கவனத்தைக் கவருகிறது. இது விநாயக் எஸ். மாசோஜி அவர்களால் வரையப்பட்டது.

முதல் சுதந்திரதினமாகிய 1947-ஆம் வருடம் ஆகஸ்டு, 15-ல் காந்திஜியால், திருமதி அகதா ஹாரிசனுக்கு எழுதப்பட்ட இங்குள்ள ஒரு கடிதம் மிக முக்கியத்துவம் வாய்ந்தமையால் அது அப்படியே கீழே தரப்பட்டிருக்கிறது.

''நான் கை இராட்டையில் நூற்றுக் கொண்டே இக்கடிதத்தை எழுதச் சொல்லுகிறேன். இன்றைய நிகழ்ச்சிபோன்ற பெரிய நிகழ்ச்சிகளையெல்லாம் கடவுளுக்கு நன்றி செலுத்துவதிலும், பிரார்த்தனையிலும், நான் கொண்டாடுவது வழக்கம் என்பதை நீங்கள் அறிந்திருப்பீர்கள். இப்படிப்பட்ட பிரார்த்தனை, பழரசத்தை மட்டும் அருந்திக் கொண்டிருக்கும் உண்ணாவிரதத்துடன் இருக்கவேண்டும். மேலும் ஏழையோடு ஏழையாய்த் தன்னைப் பாவித்துக் கொள்ளுவதற்கும், அவர்களுக்காகத் தன்னை அர்ப்பணித்துக் கொள்ளுவதற்கும், கை இராட்டையில் நூற்பதும் அவசியம். ஆகவே, தினசரி நான் நூற்பதுபோல் நூற்றுத் திருப்தியடையாமல், இன்றைய தினம், மற்ற அலுவல்களுக்குக் குந்தகம் ஏற்படாத வகையில் எவ்வளவு அதிக நேரம் நூற்க முடியுமோ அவ்வளவு அதிக நேரத்திற்கு நூற்கவேண்டும்.''

ஏழைகளுக்கு ஒரு வரப்பிரசாதம் போலவும், அநியாயங்களையும் அட்டூழியங்களையும் எதிர்ப்பதற்கு ஓர் ஆயுதமாகவும் சமுதாயப் பொருளாதாரச் சீர்கேடுகளுக்கு ஒரு ராமபாணமாகவும், பெரிய நிகழ்ச்சிகளைக் கொண்டாடுவதற்கு ஒரு வழியாகவும் நூற்புப் பணியை மேற்கொண்டார் என்பதற்கு இக்கடிதம் ஒரு சான்றாகும்.

இந்தப் புகைப் படங்களும், எழுத்துக்க வரைபடங்களும், மிகமிக எளிமையான, ஆனலும் மிகமிக அருமையான, அழகான முறையில், சட்டங்களில்லாக் கண்ணாடிகளிலும், கோரைப்பாய், மூங்கில் முதலியவைகளே உபயோகிக்கப்பட்டும் பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கின்றன.

இதைத் தவிர, திரைப்படக் காட்சி காண்பிப்பதற்கு எல்லா வசதிகளையும் கொண்ட ஒரு சிறு சினிமாக் கொட்டகையே இருக்கிறதென்று சொல்லலாம். கட்டிடத்தின் எந்த மூலையிலிருந்த போதிலும், காந்திஜியின், நேருவின் பதிவு செய்யப்பட்ட பேச்சுக்

களையும், பக்திப்பாடல்களையும் கேட்குமாறு வசதி செய்யப் பட்டிருக்கிறது.

குழந்தைகளின் அபிவிருத்திக் காக, அவர்களுடைய அறிவையும் ஆற்றலையும் பெருக்குவதற்காக ''சிறுவர் மன்றம்'' ஒன்று செயல் பட்டு வருகிறது. வசதியான 'விருந்தினர் விடுதி' ஒன்றும் இங்கிருக்கிறது. ஓன்றிரண்டு நாள் தங்கி இந்தக் காட்சிக்கூடத் தின் எல்லா அம்சங்களையும் சரி வரத் தெரிந்து கொள்ள ஆசைப் படும் பார்வையாளர்களுக்கு இது மிக உதவியாக இருக்கும்.

மதுரைக்கு வரும் பயணிகள் அனைவரும் அவசியம் வந்து பார்க்கக்கூடிய ஒரு முக்கிய நிறு வனமாக இன்று காந்தி மியூசியம் திகழ்கிறது. பழம் பெருமை வாய்ந்த புனிதமான மதுரை மீனாட்சியம்மன் கோவிலுக்கு அடுத்த முக்கிய இடமாக இது திகழ்கிறது.

அஞ்சாமை

நானே முதலில் பலாத்காரப் புரட்சியாளர்களைச் சேர்ந்தவ னாக இருந்தேன். என்னுடைய நாட்டிற்காகச் சிறை செல்லவும் ஆயத்தமாக இருந்தேன். நான் மிகவும் தைரியம் உடையவன். எனினும் இரகசியப் போலீசாரையும் கண்டு அஞ்சினேன். என் பின்னால் யாராவது தொடர்ந்து வருகிறார்களா அல்லது நான் அரசாங்கத்திற்கு எதிராகப் பேசுவது யார் காதிலாவது விழுந்து விடுமா என்ற அச்சத்தோடு எப்போதும் நான் பின்னால் பார்ப் பதுண்டு. நான் சிறைக்குப் போக விரும்பவில்லை. உண்மையில் நான் சிறையைக் கண்டு அஞ்சினேன். காந்தியடிகளோடு நான் தொடர்பு கொண்ட பிறகு எனக்கிருந்த அச்சம் அறவே ஒழிந்தது.

—ஜே. பி. கிருபளானி

****

வாழ மனிதன் உழைக்க வேண்டும்

ஒருவன் எவ்வளவு உயர்ந்த நிலையில் இருப்பினும் ஒவ்வொரு வனும் நாள்தோறும் சில மணி நேரமாவது உழைக்க வேண்டும். அங்ஙனம் உழைத்து அவனுடைய உணவைப் பெறவேண்டும். ''மனிதன் வாழ அவன் உழைக்க வேண்டும்'' என்று ரஷ்கினும், டால்ஸ்டாயும் கொண்ட கருத்து தம்மைப் பெரிதும் கவர்ந்துள்ளதாக அடிக்கடி காந்தியடிகள் கூறுவார்.

—பி. எஸ். இராமநாதன்

கலைக்கதிர் வெளியீடுகள்

1. பிராங்க்கு லாய்டு ரைட் ரூ. 3–00
2. தம் உணர்ச்சி உறுப்புக்கள் ரூ. 2–75
3. உயிரோட்டம் ரூ 2–75
4. காற்றுப் பெருங்கடல் ரூ. 2–50
5. சக்கரங்கள் சுழல்வதேன்? ரூ. 3–00
6. வான் வெளி ரூ. 2–00
7. கானல்வரி ரூ. 6–25
8. குலசேகரர் ரூ. 3–00
9. ஆற்றலோ ஆற்றல் ரூ. 3–50
10. மண்ணிலும் விண்ணிலும் ரூ. 2–50
11. நாமும் விஞ்ஞானிகளாவோம் ரூ. 11–25
12. எலெக்ட்ரான் ரூ. 4–25
13. பூவும் கனியும் ரூ. 0–70
14. செயல்படும் உலகம் ரூ. 3–45
15. அமெரிக்காவில் கல்வி ரூ. 4–00
16. உதிரிப் பூ ரூ. 1–00
17. விஞ்ஞான விளக்கம் (முதற் பகுதி) ரூ. 3–00
18. விஞ்ஞான விளக்கம் (இரண்டாம் பகுதி) ரூ. 3–00
19. விஞ்ஞான விளக்கம் (மூன்றும் பகுதி) ரூ. 3–00
20. சீவக சிந்தாமணி ஆராய்ச்சி (ஆங்கில நூல்) ரூ. 24–00
21. சிந்தனை மலர்கள் ரூ. 2–25
22. கல்வியும் மனித சாதன வளர்ச்சியும் ரூ. 12–50

வரப்பெற்றோம்

மோகனரங்கன் கவிதைகள்.

ஆசிரியர்: திரு. ஆலந்தூர் கோ. மோகனரங்கன்.

பக்கம் 96 விலை ரூ. 2-00

விற்பனை உரிமை:
பாரிநிலையம்,
59, பிராட்வே,
சென்னை—1.

இங்கிலாந்தின் பொருளாதார வளர்ச்சி.

ஆசிரியர்: திரு. மா. பா. குருசாமி. எம். ஏ.

பக்கம் 280 விலை ரூ. 3-50

கிடைக்குமிடம்: குரு. தேமொழி,
15, மேலரத வீதி, திருச்செந்தூர்,
நெல்லை மாவட்டம்.

செய்திகள்

புதுடில்லி: செப்டம்பர்-21.

இரத்தம் வராமல் அறுக்கக் கூடிய மிக நவீனமான கத்தி ஒன்றை அமெரிக்காவில் உடா மாநிலப் பல்கலைக் கழக அறுவைச் சிகிச்சை நிபுணர்கள் அறுவைச் சிகிச்சைகளில் உபயோகிக்கிறார்கள். அக் கத்தியின் அறுக்கும் பகுதி ஒரு அங்குலத்தில் 7000த்தில் ஒரு பங்குத்தடிமனே உள்ளது. தசையை அறுக்கும்போது கத்தியின் அறுக்கும் விளிம்பை 1800 டிகிரி வெப்பநிலையில் மெல்லிய வாயு சூழ்ந்து கொள்ளும்படிச் செய்யப்படுகிறது.

மாஸ்கோ: செப்டம்பர்-22.

இரஷியா ஏவிய "ஜோன் 5" என்னும் விண்வெளிக் கலம் சந்திரனைச் சுற்றிவிட்டுப் பூமிக்குத் திரும்பி இந்துப் பெருங்கடலில் பத்திரமாக இறங்கியது. விண்வெளிப் பயணத்தில் இது குறிப்பிடத்தக்க பெரிய வெற்றியாகும்.

Sri Ranga Vilas Ginning & Oil Mills

COIMBATORE

POST BOX No 1324

Telex: 042/264 ● Grams: 'OILMILLS' ● Phone: 24151

*

Manufacturers of :

GROUNDNUT OIL & CAKE

COTTON & COTTON SEEDS

COTTON SEED OIL & COTTON SEED CAKE

● ●

SUPPLIERS:

IN INDIA & ABROAD

EDIBLE QUALITY GROUNDNUT MEAL IS OUR SPECIALITY

Edible Groundnut Meal is being Produced in one of the Plants Provided by "UNICEF"

meet Seetha the happy lady...

she is happy
because she has
a wise husband,

nice children, her own house, fertile land



and gets...bumper crops with

PSG PUMPSET



- BUY A PSG PUMP TODAY
- ENGINE-OR-MOTOR-DRIVEN
- GET PLENTY OF WATER
- GROW BUMPER CROPS
- EARN MORE MONEY

PSG *the hallmark of high standard*

Please write to:

PSG Industrial Institute

COIMBATORE 4 SOUTH INDIA

Sales Branches at:

311 Thambu Chetty Street Madras 1

217 & 218 West Masi Street Madurai 1

Nalin-PSG -240

பதிவு எண் M. 5306 கலைக்கதிர் அக்டோபர் 1968
(இலங்கையில் செய்தி இதழாகப் பதிவு செய்யப்பெற்றுள்ளது)

அச்சிட்டோர்: கலைக்கதிர் அச்சகம் அவினாசி நெடுவழி, கோவை-18.